அழகுமிகு தொகுப்பு என்று அறிஞர்
பெருமக்களால் போற்றப்படும்
ஸஹீஹ் முஸ்லிமுக்கு விரிவுரை தந்த

## இமாம் நவவீ (ரஹ்) அவர்களின்

# நாற்பது ஹதீஸ்கள்

## (மூலம், மொழிபெயர்ப்பு, விளக்கவுரை)

ஆசிரியர்
திருக்குர்ஆன் விரிவுரையாளர் அல்லாமா
எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப்
பாக்கவி(ரஹ்) உத்தமபாளையம்.

## முன்னுரை

بسم الله الرّحمن الرّحيم

الحمد لله الذي نحمده ونستعينه ونستغفره ونؤمن به ونتوكل عليه

ونعوذ بالله من شرور انفسنا ومن سيئات اعمالنا من يهده الله

فلا مضل له ومن يضلل فلا هادى له ونشهد ان لا اله الا الله

وحده لا شريك له ونشهد ان محمدا عبده ورسوله

அன்புடையீர் (அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...)

என்னுடைய உம்மத்துகள் பற்றி அவர்களுடைய சன்மார்க்க காரியத்தில் நாற்பது ஹதீஸ்களை பாதுகாத்தவரை அல்லாஹு தஆலா சட்ட அறிஞராக உயிர்ப்பிப்பான். இறுதி நாளில் அவருக்கு நான் ஷஃபாஅத்துச் செய்பவனாகவும் சாட்சியம் கூறுபவனாகவும் இருப்பேன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹதீஸ் ஷரீஃபில் கூறப்பட்டிருப்பதைக் கருதி மார்க்கக் கல்வியில் தேர்ந்த இமாம்களும் பேரறிஞர்களும் சிறிதும் பெரிதுமாக ஆயிரக்கணக்கான ஹதீஸ் கிரந்தங்களை இயற்றியுள்ளனர். ஹதீஸ்களை பாதுகாத்தல் என்பது அவற்றை மனனம் செய்து கொள்ளல். அல்லது எழுதி வைத்துக் கொள்ளல் ஆகிய இரண்டையும் குறிக்கும். இவற்றை மேற்கண்டவாறு பாதுகாத்து அவற்றின்படி செயலாற்றி பிறரிடமும் உபதேசம் செய்ய வேண்டும் என்பது இந்த ஹதீஸின் கருத்தாகும். அவ்வாறு செய்தால்தான் அவர் மறுமையில் சன்மார்க்க அறிஞராக உயிர்த்தெழுப்பப்பட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷஃபாஅத்திற்கும் சாதகமான சாட்சியத்திற்கும்

உரியவராகுவார்.

தமிழ் மொழியிலும் நமது சன்மார்க்க அறிஞர்கள் முற்காலத்திலிருந்து அரபித் தமிழிலும் சுத்தத் தமிழிலும் ஹதீஸ் கிரந்தங்களை சிறிதும் பெரிதுமாக எழுதி வெளியிட்டிருக்கின்றனர். தமியேனும் பற்பல பெயர்களில் சிறிதும் பெரிதுமான பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். என்றாலும் இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் எழுதிய **கித்தாபுல் அர்பஈனன் நவவிய்யா** என்ற பெயரில் வெளியான ஹதீஸ்கள் கருத்து நிறைந்தனவாகவும் இக்காலத்து மக்களுக்கு நல்ல போதனை உள்ளனவாகவும் இருப்பதை முன்னிட்டு அதனை மொழி பெயர்த்து விளக்கத்துடன் வெளியிடுவது பயனளிக்கும் என்ற கருத்தில் இதனை எழுத முன் வந்தேன். எல்லாம் வல்ல அல்லாஹ் என்னுடைய இப்பணியை அங்கீகரித்து பயனுள்ள நூலாக விளங்கி நாட்டில் பரவி நன்மைகள் பல நல்க உதவி புரியுமாறு இறைஞ்சுகிறேன். வாசகர்களும் நல் ஆதரவு நல்கி இது நாடெங்கும் பரவு உதவி புரிவார்களாக. இதிற்காணும் குற்றங்குறைகளை எனக்கறிவித்தால் இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் நன்றியுடன் திருத்தி வெளியிட பேருபகாரம் செய்ததாக இருக்கும். வஸ்ஸலாம்.

கோலாலம்பூர் — சன்மார்க்க ஊழியன்.
10-03-1971 — **எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர்**

## நுழையும் முன்...

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனின் ஸலாத் என்னும் கருணையும் ஸலாம் என்னும் ஈடேற்றமும் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினர், ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉ தாபியீன்கள், இமாம்கள் மற்றும் நம் அனைவர் மீதும் உண்டாவதாகுக. ஆமீன்.

என்னுடைய உம்மத்தினரில் யார் நாற்பது ஹதீஸ்களை மனனம் செய்கின்றாரோ அவர் கியாமத் நாளில் உலமாக்கள், சட்ட நிபுணர்களான ஃபுகஹாக்களுடன் எழுப்பப்படுவார் என திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த ஹதீஸை ஹளரத் அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் முஆத் இப்னு ஜபல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அபூதர்தா ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அபூஸஈத் அல்குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹுயல்லாஹு தஆலா அன்ஹு ஆகியோர் அறிவித்து உள்ளனர்.

மற்றோர் அறிவிப்பில் நாற்பது ஹதீஸ்களை மனனம் செய்தவர்கள் சட்ட நிபுணர்களான ஃபக்கீஹ்களாகவும், ஆலிமாகவும் எழுப்பப்படுவார் என்றும், ஹளரத் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் அறிவிப்பில் நாற்பது ஹதீஸ்களை மனனம் செய்தவருக்கு சிபாரிசு செய்யக் கூடியவனாகவும் நான் ஆகிவிடுவேன் என்றும் ஹளரத் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு

தஆலா அன்ஹுமா அவர்களின் அறிவிப்பில் நாற்பது ஹதீஸ்களை மனனம் செய்தவரிடம் சொர்க்கத்தில் எந்த வாயில் வழியாகவும் செல்லலாம் என்றும், ஹளரத் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் அறிவிப்பில் நாற்பது ஹதீஸ்களை மனனம் செய்தவரின் பெயர் உலமாக்களின் பட்டியலில் எழுப்பப்பட்டு. ஷஹீதுகளுடன் எழுப்பப்படுவார் என்றும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

எனவேதான் பெரியோர்களான இமாம்கள் பலரும் நாற்பது ஹதீஸ்களை தொகுத்துள்ளனர். அவர்களில் முதலாவதாகத் தொகுத்தவர் ஹளரத் அப்துல்லாஹ் இப்னு முபாரக் ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்களாவார்கள். இரண்டாவதாக ஹளரத் அஸ்லம் தூஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் மூன்றாவதாக ஹளரத் ஹஸன் இப்னு சுஃப்யான் அன்னஸயிய்யீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் நான்காவதாக ஹளரத் அபூபக்கர் அல்அஜ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் ஐந்தாவதாக ஹளரத் அபூபக்கர் இப்னு இப்ராஹீம் அல் அஸ்பஹான் ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்களும், பின்னர் ஹளரத் தாரகுத்னீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹளரத் அல்ஹாகிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹளரத் அபூநஈம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹளரத் அபூஸஈத் அல்மாலீனீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹளரத் அபூஉத்மான் அஸ்ஸாபூனீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹளரத் அப்துல்லாஹ் இப்னு முஹம்மத் அல்அன்ஸாரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஹளரத் அபூபக்கர் அல்பைஹக்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகியோர்களும் தொகுத்து உள்ளனர்.

**இங்கு பிரசன்னமாயிருப்போர் பிரசன்னமாகாதவர் களுக்கு எனது செய்தியை (ஹதீஸை)க் கூறவேண்டும்** என்று திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதற் கேற்பவும் **யார் என்னுடைய சொல்லைச் செவியுற்று, அதனை மனனம் செய்து தான் செவியுற்றது போல், மற்றவர்களுக்கு அறிவித்த மனிதரை அல்லாஹ் செழுமையாக்குவானாக** என்று திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதற்கேற்பவும் நாற்பது ஹதீஸ்களை இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தொகுத்துள்ளார்கள். சிலர் தீனின் அடிப்படைச் சட்டங்கள் அடங்கிய நாற்பது ஹதீஸையும், சிலர் ஜிஹாத் சம்மந்தப்பட்ட நாற்பது ஹதீஸ் களையும் சிலர் துறவறம் சம்பந்தப்பட்ட நாற்பது ஹதீஸ்களையும் சிலர் ஒழுக்கங்கள் சம்பந்தப்பட்ட நாற்பது ஹதீஸ்களையும் சிலர் குத்பா பேருரைகள் சம்மந்தப்பட்ட நாற்பது ஹதீஸ்களையும் தொகுத்துள்ளனர்.

ஆனால் இமாம் நவிவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் 42 தலைப்புகளில் முக்கியமான பல ஹதீஸ்களை ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, இப்னு மாஜா, நஸயிய்யீ, முஸ்னத் அஹ்மத், தாரமீ, தாரகுத்னீ, பைஹக்கீ போன்ற கிரந்தங்களிலிருந்து தேர்ந்தெடுத்து **அல்அர்பஊனன் னபவிய்யா** எனும் பெயரில் தொகுத்துள்ளார்கள். இது தவிர தாம் வாழ்ந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில் சுமார் அறுபது நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றுள் திருக்குர்ஆனுக்கு அடுத்தபடியாக உலக முஸ்லிம்களால் போற்றப்படும் அறுபெரும் கிரந்தங்களில் ஒன்றான ஸஹீஹ் முஸ்லிம் எனும் நூலுக்கு மிகச் சிறந்த விளக்கவுரையும் ஷாஃபிஈ மதுஹபின் சட்ட நூலான மின்ஹாஜுத் தாலிபீன் எனும் நூலும் ரியாலுஸ் ஸாலிஹீன் எனும் நபிமொழி தொகுப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் ஹிஜ்ரீ 631ல் டமாஸ் கஸுக்கு தெற்கே உள்ள நவா என்னும் கிராமத்தில் பிறந்தார்கள். இவரின் இயற்பெயர் இமாம் முஹ்யித்தீன் அபூஜக்கரியா ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்பதாகும்.

அல்அர்பஊனன்னபவிய்யா எனும் இந்தத் தொகுப்பில் இருந்து பதினெட்டு ஹதீஸ்களின் மொழி பெயர்ப்பையும் அதற்கான விளக்கவுரை மட்டிலுமே எம்தந்தையார் அவர்கள் கடந்த 1971-ம் ஆண்டு எழுதி முடித்துள்ளார்கள். எஞ்சியவற்றை ஏன் எழுதி முடிக்க வில்லை என்பது தெரியவில்லை. எனவே, அன்னார் விட்டுச் சென்ற அப்பணியில் எஞ்சிய ஹதீஸ்களை தமிழாக்கம் செய்து முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின் வெளியிடப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

தவிர, எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட மொழி பெயர்ப்பை சரிபார்த்த, கூத்தாநல்லூர் மன்பஉல் உலா அரபிக் கல்லூரி முதல்வர் மௌலானா, மௌலவி, அல்ஹாஜ் முஹம்மது மீரான் உலவிய்யி அவர்களுக்கும் கூத்தாநல்லூர் மன்பஉல் உலா அரபிக் கல்லூரி பேராசிரியர்களான மௌலானா, மௌலவி, அல்ஹாஜ் முஹம்மது யூசுப் உலவிய்யி, மௌலானா, மௌலவி, ஹாபிஜ் அப்துர் ரஹீம் சிராஜி ஆகியோர்களுக்கும், தம் பதிப்பகத்தின் சார்பாக வெளியிடும் ஹாஜி எஸ். முஸ்தபா கமால் அவர்களுக்கும் குறிப்பாக வாசகர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்ஷா அல்லாஹ் மேலும் பல நூல்களும் வெளி வரவிருக்கின்றன. அன்பர்கள் அனைவரும் வாங்கி ஆதரிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். வஸ்ஸலாம்.

நன்றியுடன்

மௌலவி, அல்ஹாஜ்.

**எஸ்.எஸ்.எம். முஹம்மது ஜாபர் ஜமாலி.**

உத்தமபாளையம்

## பொருளடக்கம்

| | |
|---|---|
| 1. நிய்யத் | 13 |
| 2. இஸ்லாம் என்றால் என்ன? | 22 |
| 3. இஸ்லாமியக் கடமைகள் | 35 |
| 4. மனிதனின் இறுதி முடிவு | 40 |
| 5. பித்அத்துக்களைத் தவிர்ப்பீர் | 63 |
| 6. ஹலாலும் ஹராமும் | 90 |
| 7. நஸீஹத் என்றால் என்ன? | 127 |
| 8. முஸ்லிமின் கண்ணியம் | 138 |
| 9. இயன்றதைச் செய்வீர் | 149 |
| 10. ஹலாலைப் பேணுவீர் | 172 |
| 11. சந்தேகமானவற்றைத் தவிர்ப்பீர் | 187 |
| 12. தேவையற்றதைத் தவிர்ப்பீர் | 189 |
| 13. முழுமையான ஈமான் | 195 |
| 14. கொலைக் குற்றம் புரியாதீர் | 204 |
| 15. இஸ்லாமின் ஒழுக்கங்கள் | 212 |
| 16. கோபம் கொள்ளாதீர் | 233 |
| 17. பிற உயிரினங்களிடமும் இரங்குவீர் | 242 |
| 18. நற்குணம் | 249 |
| 19. இறைவனை அஞ்சுவீர் | 269 |
| 20. நாணமும் ஈமானே | 271 |
| 21. ஷரீஅத்தைப் பேணுவீர் | 272 |

22. கடமைகளை மட்டும் நிறைவேற்றினால் 273
23. நன்மைகளை விரைந்து செய்வீர் 274
24. அநீதி இழைக்காதீர் 275
25. நன்மைகள் வேண்டுமா? 273
26. சமரசம் செய்து வைப்பீர் 281
27. நற்குணங்கள் யாவை? 282
28. நபிவழியைப் பின்பற்றுவீர் 284
29. சுவர்க்கம் செல்ல வேண்டுமா? 286
30. இறைக் கட்டளையை மீறாதீர் 289
31. பற்றற்றிருப்பீர் 290
32. தீங்கிழைக்காதீர் 291
33. வாதியும், பிரதிவாதியும் 292
34. தீமையைத் தடுப்பீர் 293
35. சகோதரர்களாயிருப்பீர் 294
36. திருக்குர்ஆனும், திக்ருகளும் 296
37. அல்லாஹ்வின் கருணை 298
38. அல்லாஹ்வை நெருங்குவது எப்படி? 299
39. தவறுதலாகச் செய்த பாவம்? 301
40. மறுமைக்குத் தயாராவீர் 302
41. ஈமானின் அடையாளம் 303
42. அல்லாஹ்வின் பெருந்தன்மை 304

# 1. நிய்யத்

عن أمير المؤمنين أبي حفص عمر بن الخطاب رضي الله عنه قال:
سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ
وَإِنَّمَا لِكُلِّ امْرِءٍ مَا نَوَى فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَى اللهِ وَرَسُوْلِهِ فَهِجْرَتُهُ
إِلَى اللهِ وَرَسُوْلِهِ وَمَنْ كَانَتْ هِجْرَتُهُ لِدُنْيَا يُصِيْبُهَا أَوْ إِمْرَأَةٍ يَنْكِحُهَا
فَهِجْرَتُهُ إِلَى مَا هَاجَرَ إِلَيْهِ. رَوَاهُ الْبُخَارِىُّ وَمُسْلِمٌ.

“காரியங்(களின் இம்மை மறுமைப் பேறு)கள் (அவரவருடைய மனத்தினுள் இருக்கிற) நிர்ணயப்படிதான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் நிர்ணயம் செய்ததுதான் (பலனாக விளையும்). எனவே, எவருடைய ஹிஜ்ரத்து (குடி பெயர்தல்) அல்லாஹ்வுடையவும் அவனுடைய ரசூலுடையவும் பால் இருக்கிறதோ அவருடைய ஹிஜ்ரத்து அல்லாஹ் வுடையவும் அவனுடைய ரசூலுடையவும் பாலிருக்கிறது. இன்னும், எவருடைய ஹிஜ்ரத்து உலக ஆதாயத்தை அடைய வேண்டுமென்பதற்காகவோ, பெண்களை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதற்காகவோ இருக்குமாயின், எதற்காக அவர் ஹிஜ்ரத்துச் செய்தாரோ அது அவருடைய ஹிஜ்ரத்தாகும்” என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்ல நான் செவியுற்றேன்.

அறிவிப்பாளர்:- அபூஹஃப்ஸ் உமர் இப்னுல் கத்தாப் (ரலி) நூல்:- புகாரி, முஸ்லிம்.

மனிதனால் இயற்றப் பெற்ற நூல்களில் மிகச் சரியான நூல்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற புகாரீ, முஸ்லிம் என்ற இரு நூல்களிலும் இந்த ஹதீஸ் எழுதப்பட்டிருக்கிறது. நபி ஸல்லல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சம்பந்தமான ஹதீஸ்கள் லட்சக்கணக்கில் இருக்கின்றன. தக்க ஆதாரங்கள் உள்ள ஹதீஸ்களைப் பொறுக்கி எடுத்து பல அறிஞர்களும் நூல்களாக அமைத்தனர். அவ்வாறு அமைக்கப்பட்ட நூல்களில் மிகப் பிரபலம் வாய்ந்தவைகள் ஆறு. புகாரீ என்ற கிரந்தம் மத்திய ஆசியாவிலுள்ள புகாராவில் ஹிஜ்ரி 194ல் பிறந்து வாழ்ந்து 256ல் மறைந்த இமாம் முஹம்மது இப்னு இஸ்மாயீல் புகாரீ என்பவரால் இயற்றப்பட்டது. இவருக்கு பத்து வயதுக்கு இளையவரும் ஈரான் நாட்டில் ஹிஜ்ரி 204ல் பிறந்து 261ல் மறைந்தவருமான இமாம் அபுல்ஹுஸைனில் முஸ்லிமுப்னுல் ஹஜ்ஜாஜின் னைஷாபூரியில் குஷைரிய்யு என்பவர் முஸ்லிம் என்ற நூலை இயற்றினார். இவ்விரு நூல்களுக்கும் பின்னர் மற்றைய நான்கு நூல்களும் எழுதப்பட்டன. முதல் இரு நூல்களும் பின்னர் எழுதப்பட்ட மற்றைய நூல்களுக்கு முன் மாதிரியாக இருந்ததால் இவ்விரு நூல்களும் எல்லா மக்களாலும் அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதிகமான பிரபல்யமடைந்தன.

இந்த ஹதீஸ் இவ்விரு நூல்களிலும் முதல் ஹதீஸாக எழுதப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், எந்தக் காரியத்தை எவர் செய்தாலும் அவருடைய எண்ணம் நோக்கம் ஆகியவை தூய்மையாக இருக்க வேண்டும். உலக ஆதாயத்தை மட்டிலும் அடிப்படையாகக் கொண்டிருக்கலாகாது. இவ்வுலகில் வாழ்கிற மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தேடிக் கொள்ள வேண்டியது அவசியமே. ஆயினும் அதனைச் செய்பவரின் முதன்மையான குறிக்கோள் இறைவனின் திருப்தியை அடைய வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே இவ்விரு பெரியார்களின் நோக்கம்.



இந்த ஹதீஸை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து செவியுற்று மற்றவர்களுக்கு அறிவித்தவர் அமீருல் மூமினீன் அபூஹஃப்ஸின் உமரு இப்னுல் கத்தாப் ரலியல்லாஹுதஆலா அன்ஹும் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவிற்குப் பிறகு கலீஃபா பதவியை ஏற்றுக் கொண்ட ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்குப் பின்னர் கிலாஃபத் பதவியை ஏற்றுக் கொண்டவர். தமிழ் நாட்டில் இரண்டாவது கலீஃபா என்று கூறுவர். அக்காலத்தில் கலீஃபத்து கலீஃபத்தி ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று ஸஹாபிகள் அழைத்தனர். இந்தப் பெயர் நீண்டதாக இருக்கிறது என்பதை உத்தேசித்து பின்னர் அமீருல் மூஃமினீன் என்று ஸஹாபிகளால் அழைக்கப்பட்டது. சன்மார்க்க விசுவாசி களின் தலைவர் என்பது இதன் பொருள். பின்னர் இப்பெயர் கிலாஃபத் பதவியை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் வழங்கலாயிற்று.

அபூஹஃப்ஸ் என்பது ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு சிறப்புப் பெயர். ஹஃப்ஸின் தந்தை என்பது இதன் பொருள். ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு ஹஃப்ஸ் என்ற பெயருள்ள குழந்தை இல்லை. இவருடைய வீரத்தைக் கருதி நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபூஹஃப்ஸ் அதாவது வீரத்திற்குத் தந்தை என்று பெயரிட்டார்கள். ஹஃப்ஸ் என்ற வார்த்தைக்கு புலி என்பது பொருள். ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தந்தையின் பெயர் கத்தாப் என்பது. ஸஹாபிகளில் உமர் இப்னு கத்தாப் என்ற பெயருள்ளவர் இவரைத் தவிர்த்து வேறு யாருமில்லை.

இவர் கலீஃபா பதவி ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் ஸஹாபிகளில் மிகப் பெரிய அறிவாளி, கல்வியாளர் விவேகி என்றெல்லாம் மதிக்கப்பட்டவர். நபி (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்றவற்றில் 539 ஹதீஸ்களை இவர் பிறருக்கு அறிவித்துள்ளார். கிலாஃபத் பதவியை வகித்ததால் அந்த அலுவல்களின் மிகுதி காரணமாக இன்னும் அதிகமான ஹதீஸ்களை மற்றவர்களுக்கு அறிவிக்க முடியவில்லை. அந்தக் காலத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெயரைக் குறிப்பிட்டு ஹதீஸ்களை அறிவிப்பது கட்டுப் பாட்டிற்குள் வைக்கப் பட்டிருந்தது. அவர்களுடைய மறைவிற்குப் பிறகு தான் ஸஹாபீகள் தங்கு தடையின்றி ஹதீஸ்களை அறிவித்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இரவு பகல் எந்நேரமும் சேர்ந்திருந்த அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பால்ய நண்பர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்க்கினும் ஏறக்குறைய மூன்று வருடங்கள் வயதில் இளையவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவிற்குப் பிறகு முதன் முதலாக கிலாஃபத் பதவியை ஏற்றுக் கொண்டவர். இவர் அறிவித்த ஹதீஸ்கள் ஏறக்குறைய நூறு தான்.



உம்மஹாத்துல் முஃமினீன்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் வாழ்ந்தவர்கள். இவர்களில் இருவரைத் தவிர மற்றவர்கள் நூறுக்கும் குறைவாகவே ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்திருக்கின்றனர். மற்ற சாமான்ய ஸஹாபிகள் ஆயிரக்கணக்கான ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்திருக்கின்றனர். இதற்கு காரணம் என்னவெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பொது மக்களுக்குத் தேவையான செய்திகளை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே நேரில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மற்ற ஸஹாபிகளுக்கு ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அன்னாரின் மறைவிற்குப் பிறகுதான் ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்ய வேண்டிய அலுவல் ஸஹாபிகளுக்கு ஏற்பட்டது. பொய் ஹதீஸ்கள் பரவக் கூடாது என்பதைக் கருதி ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்வதற்கு கிலாஃபத்து அரசாங்கத்தில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, உம்மஹாத்துல் மூஃமினீன்களில் பெரும்பாலோர் அதிகமான ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்யாமல் இருந்தார்கள்.

ஆயிரக்கணக்கான ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்த ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் நீங்கள் ஹதீஸ்களை இவ்வாறு அறிவித்துக் கொண்டிருந்தீர்களா? என்று ஒருவர் வினவியபோது, இல்லை அக்காலத்தில் வாய் திறந்தால் சவுக்கடி பெற வேண்டியதிருக்கும் என்று பதிலளித்தார்கள் என்பதாக சரித்திர நூல்களில்

எழுதப்பட்டிருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் வாழ்ந்த முனாஃபிக்குகளும் சன்மார்க்க விரோதிகளும் பொய் செய்திகைள ஹதீஸ் என்ற பெயரில் வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கலாகாது என்ற நோக்கத்தில் ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்ய விரும்புகிறவர்கள் கிலாஃபத் அரசாங்கத்திடம் முன் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெறாதவர்கள் ஹதீஸ் என்ற பெயரில் செய்திகளைக் கூறினால் தண்டனைக்குட்படுத்தப்படுவர் என்ற கட்டளை அமுல் செய்யப்பட்டது.

ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மறையும் வரையில் இந்த உத்தரவு கடுமையாக அமல் செய்யப்பட்டது. இதற்குள் முனாஃபிக்குகளில் பெரும்பாலர் இறந்து விட்டனர். ஆதலின் அப்புறம் இவ்வுத்தரவு கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்தப் பட்டது. இறுதியாக ஹளரத் அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்குப் பிறகு இவ்வுத்தரவு செயல்படவில்லை. ஸஹாபிகள் ஹதீஸ்களை தங்கு தடையின்றி ரிவாயத்துச் செய்தனர். அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அன்னை உம்மு ஸல்மா ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஹளரத் அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு போன்றவர்கள் இவ்வுத்தரவு தளர்த்தப் பட்ட பிறகு நீண்ட காலம் வரையில் இவ்வுலகில் வாழ்ந்ததால் அவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கான ஹதீஸ்களை அறிவிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த வாய்ப்பு குலஃபாயே ராஷிதீன்களான ஹளரத் அபூபக்கர்



ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, உமர் பாருக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, உதுமானுன்னூரைன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இதனால் தான் பிரபலமான முக்கிய ஸஹாபிகளில் அநேகர் மிகக் குறைந்த ஹதீஸ்களை அறிவிக்கும் படியான நிலை ஏற்பட்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபிப்பதவி அடைந்த காலத்தில் அவர்கள் பெரிய பணம் படைத்தவர்களாக இருக்கவில்லை. ஆனால் மக்களுக்கிடையே மிகவும் கௌரவமிக்கவர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்தார்கள். அன்னை கதீஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை திருமணம் செய்த பின்னர் அவ்வம்மையாரின் திரண்ட செல்வத்திற்கும் வாணிபத் தொழிலுக்கும் பிரதம நிர்வாகியாகவும் உரிமையாளராகவும் ஆகிவிட்டார்கள். இதனால் பொதுச் சேவை செய்வதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. அனாதைகளை பராமரித்தல், விதவைகளுக்கு உதவி செய்தல், அகதிகளை ஆதரித்தல், போன்ற பல தர்ம காரியங்களை செய்து வந்ததால் பொது மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றனர். இவ்வுலகச் செல்வத்தை திரட்டி பாதுகாத்து வைக்க வேண்டும் என்ற எண்ணமில்லாததால் தங்களுக்கு மக்களிடமிருந்து கிடைத்த செல்வாக்கை சுயநலத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ள வில்லை. இதனால் அன்னாரின் செல்வம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து விட்டது. இந்த நிலையில்தான் நபிப்பதவியை அடைந்து இஸ்லாமியப் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள்.

சுய நலநோக்குள்ள செல்வந்தர்கள் தங்களின் செல்வாக்கிற்கு உட்பட்ட பொது மக்களையும் சேர்த்துக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், இஸ்லாமைத் தழுவிய ஆரம்ப முஸ்லிம்களையும் எதிர்த்து சொல்லொனாத் துன்பங்களைக் கொடுத்தனர். பற்பல தொல்லைகளுக்கு அவர்களை உட்படுத்தினர். இதன் காரணமாக ஹிஜ்ரத் அதாவது திருமக்காவை விட்டு குடி பெயர்ந்து வெளி இடங்களில் குடியேறி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபிகளும் தங்கள் சொத்துக்களைத் துறந்து திரு மதீனாவில் குடியேறினர். அக்காலத்தில் அவர்களின் எண்ணம், எந்த வித எதிர்ப்பும் இன்றி இறைவனை வணங்க சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பது மட்டுமே. வியாபாரம் செய்ய வேண்டும் என்பதோ இதர வசதிகளைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதோ இல்லை.

ஹிஜ்ரீ ஆறாம் வருடத்தில் மக்கத்து குறைஷியருக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் பலனாக மக்காவாசிகள், மதீனாவுக்கு வந்து பார்த்தபோது அங்கு குடியேறிய நபித் தோழர்கள் நிம்மதியாகவும் சுபிட்சமாகவும் வாழ்வதையும் கண்டு தாங்களும் இஸ்லாத்தை தழுவி குடியேறினால் தங்களின் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்., அழகிய பெண்களை மணந்து கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. இதை அடிப்படையாக் வைத்து சிலர் ஹிஜ்ரத்துச் செய்ய ஆரம்பித்தனர்.

திருமதீனாவிலே உம்முகைஸ் என்ற ஒரு அழகி இருந்தார். அவரை மணந்து கொள்ள மக்காவாசி ஒருவர்



விரும்பினார். மக்காவை ஹிஜ்றத்துச் செய்து திரு மதீனாவில் குடியேறினால்தான் உம்மை மணந்து கொள்வேன் என்று அவ்வழகி கூறியதன் நிமித்தம் அவர் மதீனாவில் குடியேறி தன்னுடைய விருப்பத்தை பூர்த்தி செய்து கொண்டார். இச்செய்தி மதீனாவிலுள்ள முஸ்லிம்களுக்குத் தெரிந்தது. முஹாஜிர் உம்முகைஸ் என்று அவரை எல்லோரும் அழைத்தனர். அந்த சந்தர்ப்பத்தில்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஹதீஸைக் கூறினார்கள்.

யார் எந்த காரியத்தை செய்தாலும் மறு உலகில் பலனை அடைய வேண்டுமானால் இவ்வுலகப் பலனை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் மறு உலகப் பேற்றை முதன்மையாக வைத்து செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாத காரியம் மறுமையில் பலனளிக்காது என்பது இந்த ஹதீஸின் கருத்து.

ஹிஜ்ரத் என்ற பதத்திற்கு துறத்தல் என்பது பொருள். இந்த ஹதீஸில் உள்ள ஹிஜ்ரத் என்ற சொல்லிற்கு திருமக்காவைத் துறந்து திருமதீனாவில் குடியேறல் என்பது கருத்து.

## 2.இஸ்லாம் என்றால் என்ன?

عن عمر بن الخطاب رضي الله تعالى عنه قال: بَيْنَ مَا نَحْنُ جُلُوْسٌ عِنْدَ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ذَاتَ يَوْمٍ إِذْ طَلَعَ عَلَيْنَا رَجُلٌ شَدِيْدُ بَيَاضِ الثِّيَابِ شَدِيْدُ سَوَادِ الشَّعْرِ لاَ يُرَى عَلَيْهِ أَثَرُ السَّفَرِ وَلاَ يَعْرِفُهُ مِنَّا أَحَدٌ حَتَّى جَلَسَ إِلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَأَسْنَدَ رُكْبَتَيْهِ إِلَى رُكْبَتَيْهِ وَوَضَعَ كَفَّيْهِ عَلَى فَخِذَيْهِ وَقَالَ يَا مُحَمَّدُ أَخْبِرْنِي عَنِ الإِسْلاَمِ فَقَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الإِسْلاَمُ أَنْ تَشْهَدَ أَنْ لاَ إِلٰهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّداً رَسُوْلُ اللهِ وَتُقِيْمَ الصَّلاَةَ وَتُؤْتِيَ الزَّكَاةَ وَتَصُوْمَ رَمَضَانَ وَتَحُجَّ الْبَيْتَ إِنِ اسْتَطَعْتَ إِلَيْهِ سَبِيْلاً. قَالَ: صَدَقْتَ فَعَجِبْنَا لَهُ يَسْأَلُهُ وَيُصَدِّقُهُ قَالَ: فَأَخْبِرْنِي عَنِ الإِيْمَانِ قَالَ: أَنْ تُؤْمِنَ بِاللهِ وَمَلاَئِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الآخِرِ وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ. قَالَ: صَدَقْتَ قَالَ: فَأَخْبِرْنِي عَنِ الإِحْسَانِ قَالَ: أَنْ تَعْبُدَ اللهَ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ. قَالَ: فَأَخْبِرْنِي عَنِ السَّاعَةِ قَالَ: مَا الْمَسْؤُوْلُ عَنْهَا بِأَعْلَمَ مِنَ السَّائِلِ قَالَ: فَأَخْبِرْنِي عَنْ أَمَارَاتِهَا قَالَ: أَنْ تَلِدَ الأَمَةُ رَبَّتَهَا وَأَنْ تَرَى الْحُفَاةَ الْعُرَاةَ الْعَالَةَ رِعَاءَ الشَّاءِ يَتَطَاوَلُوْنَ فِي الْبُنْيَانِ. ثُمَّ انْطَلَقَ فَلَبِثْتُ مَلِيًّا ثُمَّ قَالَ: يَا عُمَرُ أَتَدْرِي مَنِ السَّائِلُ قُلْتُ: اللهُ وَرَسُوْلُهُ أَعْلَمُ قَالَ: فَإِنَّهُ جِبْرِيْلُ أَتَاكُمْ يُعَلِّمُكُمْ دِيْنَكُمْ. رَوَاهُ مُسْلِمٌ.



"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒரு நாள் நாங்கள் அமர்ந்திருக்கையில் அப்பொழுது மிகவும் வெண்மையான உடையும், மிகவும் கருப்பான முடியுமுள்ள ஒரு மனிதர் எங்களிடம் தோன்றினார். அவர் மீது பிரயாணத்தின் அறிகுறி காணப்படவில்லை. அவரை எங்களில் எவரும் அறிய மாட்டார். இறுதியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தம்முடைய இரு முட்டுக்கால்களையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரு முட்டுக்கால்களுடன் இணைத்து தம்முடைய இரு முன் கைகளையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரு துடைகளின் மீது வைத்து அமர்ந்து "முஹம்மதே இஸ்லாமைக் குறித்து எமக்கு அறிவியும்" என்றார். இஸ்லாம் என்பது லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு இல்லை முஹம்மது அல்லாஹ்வின் திருத்தூதர்) என்று நீர் சாட்சியம் கூற வேண்டும், தொழுகையை நீர் நிலை நிறுத்த வேண்டும், ஜக்காத்து வரியை நீர் கொடுக்க வேண்டும், ரமலானில் நீர் நோன்பிருக்க வேண்டும். பாதையில் செல்ல நீர் வசதி பெற்றால் நீர் ஹஜ்ஜுச் செய்ய வேண்டும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். மெய்யுரைத்தீர் என்று அவர் கூறினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலை ஆமோதித்தார். அவர்களிடம் அவர் வினவுகிறார். (பதிலைக் கேட்டு) அவர் ஆமோதித்தார்" என்று நாங்கள் ஆச்சரியமடைந்தோம்.

(பின்னர்) ஈமானைக் குறித்து "எனக்கு அறிவியும்" என்று வினவினார். அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்

களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய ரசூல்களையும், கடைசி நாளையும் நீர் விசுவாசிக்க வேண்டும் என்று பதிலளித்தார்கள். மெய்யுரைத்தீர் என்று கூறினார். பின்னர், இஹ்ஸானைக் குறித்து எனக்கு நீர் அறிவியும் என்று வினவினார். அல்லாஹ்வை நீர் (நேரில்) பார்ப்பது போல (அவ்வளவு ஓர்மையுடனும் பக்தியுடனும்) நீர் வணங்க வேண்டும் அவனை நீர் (நேரில்) பார்க்காவிடினும் அவன் உம்மைப் பார்க்கிறான் (அல்லவா?)'' என்று பதிலளித்தார்கள்.

பின்னர், (இறுதி நாளுக்குரிய) அவ்வேளையைக் குறித்து ''எனக்கு அறிவியும்'' என்று வினவினார். ''வினவு பவரைப் பார்க்கினும் வினவப்படுபவர் அதனைக் குறித்து அதிகம் தெரிந்தவரல்லர்'' என்று பதிலளித்தார்கள். பின்னர், ''அதன் அடையாளங்களைக் குறித்து எனக்கு அறிவியும்'' என்று கேட்டார். அடிமைப் பெண் தன் எஜமாட்டியைப் பிரசவித்தல், பாதரட்சையில்லாதவர்கள், நிர்வாணிகள், வறிஞர் ஆடுகளை மேய்ப்போர் கட்டங்களில் நீளமாகுதல்'' என்று பதிலளித்தார்கள். பின்னர் அவர் சென்று விட்டார். பிறகு சிறிது நேரம் கழித்து உமரே, ''வினவியவர் யார் என்பதை நீர் அறிவீரா?'' என்று வினவினார்கள். அல்லாஹ்வும் அவனுடைய ரசூலும் அதிகம் தெரிந்தவர்கள் என்று நான் கூறினேன். அவர் ஜிப்ரயீல் உங்களுடைய சன்மார்க்கத்தை உங்களுக்கு கற்பிப்பதற்காக உங்களிடம் வந்தார்'' என்று விளக்கினார்கள்.

அறிவிப்பவர்:- அமீருல் மூஃமினீன் உமர் இப்னுல் கத்தாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு  நூல்:-முஸ்லிம்.

இந்த ஹதீஸிலுள்ள வார்த்தைகள் இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடையது. இதே



கருத்திலுள்ள ஹதீஸ் இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களாகும்.

இஸ்லாத்திலுள்ள புறக் கிரியைகளையும் அகக்கிரியை களையும் பற்றிய குறிப்பு இந்த ஹதீஸில் இருக்கிறது. ஒரு செய்தியை பிறர் மனதில் நன்கு பதியச் செய்யும் முறைகளில் கேள்வி பதிலாக உரையாடுவதும் ஒன்று. ஆரம்ப நிலையில் உள்ள பொது மக்களும் இளம் மாணவர்களும் உரையாடல் மூலம் போதிக்கப்படும் கல்வியை எளிதில் புரிந்து கொள்வதை நாம் அனுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கிறோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் வாழ்ந்த கண்ணியவான்களும் தியாகச் செம்மல்களுமான ஸஹாபா பெருமக்களில் பெரும்பாலர் வயதால் முதிர்ந்து இருந்த போதினும் இஸ்லாத்தை புதிதாக தழுவியவர்களாதலின் அவர்களுக்கு இஸ்லாத்தை எளிதில் புரிய வைக்க இந்த உரையாடல் மிக ஏற்றமாக இருந்தது.

இஸ்லாமின் அடிப்படைக் கடமைகளான கலிமாவை மனமார உணர்ந்து, நம்பி அறிக்கை செய்தல், ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றல், ஜக்காத்துக் கொடுத்தல், ரமலான் மாத நோன்பு நோற்றல், ஹஜ்ஜுச் செய்தல் ஆகிய ஐந்தும் இஸ்லாமிலுள்ள புறக்கிரியைகள். இஹ்ஸான் என்பதைப் பற்றிய விளக்கம் இஸ்லாமிலுள்ள அகக் கிரியைகள். இவைகள் மறுமையில் பயனளிக்க வேண்டுமாயின் இறைவனின் நாட்டம் இன்றியமையாதது. தெய்வ விசுவாசமின்றி செய்யப்படும் காரியங்கள் இவ்வுலகில் ஓரளவு பயனித்தாலும் மறுமையில்

அவை இறைவனால் அங்கீகரிக்கப்படவுமாட்டா. புண்ணிய பலனைத் தரவு மாட்டா. இது ஈமான் பற்றிய கேள்வியின் பதிலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தெய்வ விசுவாசம் ஆறு அம்சங்களைக் கொண்டது. இவற்றில் ஒன்றை நம்பாவிட்டாலும் இஸ்லாமியச் சட்டப்படி பூரணமான தெய்வ விசுவாசமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இவ்வுலகிலுள்ள மக்களில் பெரும்பாலர் தெய்வம் ஒன்றுள்ளது என்பதை நம்புகின்றனர். இவர்களை ஆஸ்திக வாதிகள் என்பர். இவர்களில் ஒரு சாரார் இறந்தவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவதையும் விசாரிக்கப்படுவதையும் அவரவர் நன்மை தீமைக்குரிய பிரதிபலனை மறுமையில் அடைய வேண்டும் என்பதையும் நம்புவதில்லை.

மற்றொரு சாரார் வானவர்களை நம்புவதில்லை. இன்னொரு சாரார் நபிமார்களை ஏற்றுக் கொள்வதில்லை. வேறொரு கூட்டத்தார் வேதங்களை ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களில் ஒரு சாரார் நபிமார்களுக்கிடையில் பாகுபாடு செய்து சில நபிமார்களை அங்கீகரிப்பதில்லை. மற்றொரு வகையினர் வேதங்களில் சிலவற்றை விசுவாசிப்பதில்லை. இம்மாதிரியான விசுவாசங்களை சிலர் தெய்வ விசுவாசம் என்று விவாதிக் கின்றனர். ஆயினும், இஸ்லாம் மார்க்கம் இவர்களை பூரண விசுவாசிகள் என்று ஏற்றுக் கொள்ளாது. பூரண விசுவாசம் என்பது எல்லா நபிமார்களையும் எல்லா வேதங்களையும் எல்லா வானவர்களையும் இறுதி நாளில் உயிர்த்தெழுப்பப்பட்டு விசாரிக்கப்பட்டு அவரவர்களின் தீமைக்குரிய பிரதிபலனை அனுபவிப்பதையும் தக்தீரையும் எவ்விதத் தர்க்கமுமில்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்குத்தான் இஸ்லாத்தில் பூரணமான தெய்வ விசுவாசம் என்று சொல்லப்படும்.



தக்தீர் என்பதைப் பற்றி அநேகர் பெரும் பெரும் விவாதங்களைச் செய்கின்றனர். முக்கியமாக துன்மார்க்கர்களும் இஸ்லாத்தின் விரோதிகளும் இஸ்லாமை ஒழிப்பதற்கு இவ்வாதத்தை கருவியாக ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். தக்தீர் என்பதற்குரிய பொருளை மக்கள் புரியாதவாறு குழப்பி விடுகின்றனர். ஒருவர் ஹளரத் அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் தக்தீரைப் பற்றி தர்க்கம் செய்யும் முறையில் வினவினார். அதைக் கவனியாதவர் போல் இருந்து விட்டார். மீண்டும் அவர் வினவினார். அப்போதும் புறக்கணித்து விட்டார். மூன்றாம் முறையும் வினா எழுப்பினார் அதற்கும் பதில் கூறவில்லை. நான்காவது முறை அவர் வினவிய போது அவர் பக்கம் திருப்பி அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலா சிருஷ்டிகளை படைத்த போது உம்மை அவன் படைத்தது அவனுடைய விருப்பத்திற்கா? அல்லது உம்முடைய விருப்பத்திற்கா? என்று வினவினார்கள். அதற்கு அவர் என் விருப்பத்திற்கு அல்ல என்று பதிலளித்தார். பின்னர், உம்மை ஜீவிக்கும்படி அவன் செய்திருப்பது. அவனுடைய விருப்பப் படியா அல்லது உமது விருப்பப்படியா? என்று மீண்டும் வினவினார்கள் அதற்கு அவர் என் விருப்பப்படி அல்ல. அவனுடைய விருப்பப்படிதான் என்று பதில் அளித்தார். பின்னர், உம்மை மரணிக்கச் செய்வது. அவனுடைய விருப்பப்படியா? அல்லது உமது விருப்பப்படியா? என்று வினவினார்கள். என் விருப்பப்படியல்ல. அவனுடைய விருப்பப்படிதான் என்று அவர் பதிலளித்தார். இறுதிநாளில் உம்மை உயிர்ப்பித்தெழுப்புவது அவன் நாட்டப்படியா அல்லது உம்முடைய நாட்டப்படியா? என்று வினவினார்கள். அதற்கு அவர் இறைவனது நாட்டப்படிதான் என்றார். அவன் உம்மை விசாரணை செய்வது அவனுடைய நோக்கப்படியா அல்லது

உமது நோக்கப்படியா? என்று வினவினார்கள். அவனுடைய நோக்கப்படிதான் என்றார். அப்போது அவ்வாறாயின் இந்த தக்தீரைப் பற்றி ஆட்சேபிக்க உமக்கு எந்த உரிமையுமில்லை என்று கூறினார்கள்.

கத்ர் (அதனுடைய நல்லது கெட்டது என்பதின் பொருள்) சன்மார்க்க விசுவாசம் (ஈமான்) வழிபாடு (தாஅத்) உட்பட சகல நல்ல காரியங்களும் கைருல்கத்ரைச் சேர்ந்தவை. (குஃப்ரு) சன்மார்க்க நிராகரிப்பு, பாவம், சன்மார்க்க எதிர்ப்பு உட்பட சகல குற்றச் செயல்களும் ஷர்ருல் கத்ரைச் சேர்ந்தவை.

இஹ்ஸான் என்பது இக்லாஸ் என்பதற்குரிய மாற்றுப் பெயர். செய்வனத் திருந்தச் செய் என்று கூறப்படுவதற்கு ஏற்ப சன்மார்க்கக் கடமைகளை அந்தரங்க சுத்தியுடன் உள்ளப் பூர்வமாக திருத்தமாக அதாவது அந்தந்தக் கிரியைகளை நிறைவேற்றும் முறையில் ஃபர்லு, வாஜிபு, ஸுன்னத்து, முஸ்தஹப்புகளைத் தவறவிடாமலும், மக்ரூஹு தன்ஜீஹி, மக்ரூஹு தஹ்ரீமி, ஹராம் போன்ற ஆகாத காரியங்கள் ஏற்படுவதற்கு இடங்கொடாமலும் இனிது நிறைவேற்றுவதை இப்பதம் குறிக்கும். இவ்விவரங்களை இனிது நிறைவேற்றுவதை இப்பதம் குறிக்கும். இவ்விவரங்களை எல்லாம் உள்ளடக்கி ரத்தினச் சுருக்கமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வை புறக்கண்களால் நீர் பார்க்காவிடினும், அவன் உம்மைப் பார்த்துக் கொண்டிருப்பதால், அவனை நேரில் பார்த்து வணங்கும் பக்தியுடன் அவனை நீர் வணங்க வேண்டும் என உணர்த்தியுள்ளார்கள்.

இறுதி நாளுக்குரிய வேளை எப்பொழுது வரும் என்பதை அல்லாஹ் ஒருவன் தவிர வேறு எவரும் அறிய மாட்டார். இது



உமக்குத் தெரியாமல் இருப்பதுபோல எனக்கும் தெரியாது என்ற கருத்தில் வினவப்படுகிற நான் வினவுகிற உம்மைப் பார்க்கினும் அதிகம் தெரிந்தவனல்ல என்று கூறினார்கள். இறுதிநாள் உண்டு. என்றாவது ஒருநாள் இவ்வுலகம் அழியும். இவ்வுலகில் வாழ்ந்தவர்கள் அப்புறம் ஒருநாள் உயிர்ப்பிக்கப்பட்டு இவ்வுலகில் அவர்கள் செய்த காரியங்களைக் குறித்து விசாரிக்கப்படுவார்கள் என்பது எல்லா விசுவாசிகளும் உறுதியாக நம்பும் காரியமே. ஆயினும் அது எந்த நாளில் ஏற்படும் என்பது எவருக்கும் தெரியாது. எனினும், அந்த நாள் நெருங்கி விட்டது என்பதை அறிவிக்கிற அடையாளங்களை மனிதர் உணர முடியும்.

இவ்வடையாளங்களைக் கூறுமாறு வினவப்பட்டதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு அடையாளங்களைக் கூறி இருக்கிறார்கள். அடிமைப் பெண் எஜமாட்டியைப் பிரசவிப்பது ஒன்று. இது முஸ்லிம்களுக்கு இவ்வுலகில் பல வெற்றிகள் ஏற்பட்டு அரசோச்சும் நிலை ஏற்படும். முஸ்லிம் அல்லாத நாடுகள் அவர்களிடம் வீழ்ச்சியடையும். முஸ்லிம்களை எதிர்த்த முஸ்லிம் அல்லாதார் கைதிகளாக வருவர். அவர்கள் இஸ்லாமிய அரசாங்கத்தால் அடிமைகள் எனச் சட்டப்படி பிரகடனப்படுத்தப்பட்டு போரில் சம்பந்தப்பட்ட முஸ்லிம் ராணுவ வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவர். அவ்வடிமைகள் ஆடு மாடுகளைப் போல் கடின வேலைகளுக்கு உட்படுத்தப் படாமல், அவர்களுடைய எஜமானர்களால் நன்கு நடத்தப்படுவர். அடிமைப் பெண்கள் தங்களுடைய எஜமானர்களுக்கு காமக் கிளர்ச்சியைத் தணிக்கும் பிண்டமாக இல்லாமல் வாழ்க்கைத் துணைவிகளாகி குழந்தைகளைப் பிரசவிப்பர். அக்குழந்தை முஸ்லிம் அல்லாத நாடுகளில் இருக்கும் வழக்கத்திற்கேற்ப அடிமைகளாகவோ ஒதுக்கப்பட்ட ஜாதியினர்களாகவோ

இல்லாமல் முஸ்லிம் சமூகத்தில் சரி நிகர் சம உரிமையுள்ள எஜமானர்களாக இருப்பர் என்பதை அறிவிக்கிறது.

அக்காலத்தில் உலகம் முழுவதிலும் அடிமை வழக்கம் இருந்தது. யுத்தக் கைதிகள் அனைவரையும் அடிமைகளாக்கி விற்பனை செய்து அரசாங்கத்திற்கு சொத்துச் சேர்ப்பதும், அடிமையாக்கப்பட்ட ஆண்களையும் பெண்களையும் விலைக்கு வாங்கியவர்கள் ஆடுமாடுகளைப் போல் கடின வேலைகள் வாங்குவதும், போதுமான அளவு உணவு கொடுக்காமல் நலியச் செய்வதும் அடிமைப் பெண்களிடம் உடலுறவு கொள்வதும், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளை அடிமைகளாகவே வைத்து நடத்துவதும், அவர்களை மனித வர்க்கத்தில் ஒரு தனி தாழ்ந்த வகுப்பினராக ஒதுக்கி வைத்து சமூகத்திலும் அரசாங்கத்திலும் உரிமை கொடுக்காமல் நடத்துவதும் வழக்கமாக இருந்தது.

ஒரே தாய் தந்தையருக்குப் (ஹளரத் ஆதம், ஹவ்வா அலைஹிமஸ்ஸலாம்) பிறந்த மக்களில் அடிமை, எஜமான் என்று பாகுபாடு செய்து பிரிவினை உண்டு பண்ணியிருப்பதை ஒழித்து யாவருக்கும் சம அந்தஸ்து கொடுப்பது இஸ்லாமிய இலட்சியம். இதனையே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் இறுதி ஹஜ்ஜின் போது அரஃபாத் பேருரையில் நீங்கள் யாவரும் ஆதம் உடைய மக்கள். ஒரே தாய் தந்தையரின் சந்ததியினர். பிறப்பால் நீங்கள் யாவரும் சமம். உங்களுக்கிடையில் உயர்வு தாழ்வு இல்லை. அரபிக்கு அஜமியைப் பார்க்கினும் உயர்வேதுமில்லை வெள்ளையருக்கு கருப்பரைப் பார்க்கினும் உயர்வேதுமில்லை என்றும் வலியுறுத்தினார்கள்.



இவ்வுபதேசம் இஸ்லாமிய உலகில் முஸ்லிம்களால் முற்றும் கடைப்பிடிக்கப்பட்டு அமல் செய்யப்பட்டது. இதன் பலனாக அடிமைப் பெண்ணுடனே அவளுடைய எஜமான் உடலுறவு கொண்டு, குழந்தைகளைப் பிரசவித்தால் அந்தக் குழந்தைகள் அடிமைகள் அல்லர், சுதந்திரவான்கள். அந்த குழந்தைகளின் தந்தையர்களாகிய எஜமானர்களின் சொத்துக்களுக்கும் சுதந்திரங்களுக்கும் பூரண உரிமை உள்ளவர்கள், சமூகத்தில் எந்த பாகுபாடும் இல்லை என்ற சட்டம் பிறந்தது.

அந்தக் குழந்தைகளின் தாய்மார்களாகிய அடிமைப் பெண்கள், எஜமானர்களுக்குத் தான் அடிமைகளே அன்றி அவர்கள் பிரசவித்த மக்களுக்கு அடிமைகள் அல்ல. எஜமான் இறந்தவுடன் அவ்வடிமைப் பெண்கள் தானே விடுதலை பெற்ற பெண்களாகி சமூக உரிமைகள் அனைத்தையும் பூரணமாக அடைவர் என்ற சட்டமும் பிறந்தது. இச்சட்டம் உடனடியாக பரிபூரணமாக கடைப்பிடிக்கப்பட்டது. ஹளரத் சய்யிதுனா ஹுசைன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மனைவியார் சித்தி ஷஹ்ருபானு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பிறவியில் ஈரான் நாட்டு அதிபரான எஸ்துஜுர்து என்பவரின் புதல்வியாக இருந்தார். ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற போரில் போர்க் கைதியாக பிடிக்கப்பட்டு மதீனாவில் இஸ்லாமிய அரசாங்கத்தால் அடிமை என பிரகடனம் செய்யப்பட்டு சய்யிதுனா இமாம் ஹுசைன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டவர். அடிமைப் பெண் என்ற முறையிலேயே அவர்களுடன் குடும்ப வாழ்வை நடத்தி செய்யிதுனா இமாம் அலீ ரஹ், ஜைனுல் ஆபிதீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி

ஆகியவர்களை ஈன்றெடுத்தார்கள். இமாம் ஹுஸைன ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மறைந்தவுடன் விடுதலை பெற்ற பெண்ணாகி இஸ்லாமிய உலகம் முழுவதிலும் சித்தி என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுகிறார்கள். அவ்வம்மையின் வயிற்றில் பிறந்த சய்யிதுனா அலீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி, ஜைனுல் ஆபிதீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடைய மக்கள்தான் (சந்ததியினர் தான்) சாதாத்து ஹுஸைனி ஆவர். இவர்கள் இன்று உலகில் இலட்சக்கணக்கில் வாழ்கின்றனர். தவிர நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்ததியினர் என்றும் அவர்களை உலகம் கொண்டாடுகிறது. இவ்வுலகிலுள்ள ஒலிமார்கள், குதுப்மார்களில் பெரும்பாலோர் இந்த வம்சத்தில் உதித்தவர்கள்தான். இவர்களின் ஆத்மார்த்த அந்தஸ்துகளை இறைவன் குறைக்கவில்லை. மேலும், இவர்களின் வம்சத்தில் உள்ளவர்கள் அரசர்களாகவும், கலீஃபாக் களாகவும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். எகிப்து நாட்டை ஆட்சி புரிந்த ஃபாத்திமி வம்சத்து கலீஃபாக்கள் அத்தனை பேரும் இவ்வம்சத்தினரே. மலேசியாவில் அகோங்கு (பேரரசர்) பதவியை வகித்த பெர்லிஸ் அரசர், ஜோர்தான் மன்னர் (மறைந்த) ஹுஸைன், லிபியாவிற்கு மன்னராக இருந்து தற்போது முடி துறந்திருக்கிற இத்ரீஸ் அஸ்ஸனூசி, மொராக்கோ சுல்தான் ஹஸன் போன்றவர்கள் எல்லோரும் இவ்வம்மையாரின் வழித் தோன்றல்களே. சுருங்கக் கூறின். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற மரபுப்படி வல்லவர்கள் மனித வர்க்கத்தில் உண்டு பண்ணி வைத்திருந்த உயர்வு தாழ்வை இஸ்லாம் ஒழித்து சம அந்தஸ்தை மீண்டும் நிலை நிறுத்திற்று. பாதரட்சை அணிவதற்கு கதியற்ற வறிஞர்கள் பூரணமான உடையணிய இயலாத அரை நிர்வாணிகள். ஆடு



மேய்த்து அற்பக் கூலியில் வாழ்க்கை நடத்துபவர்கள் கட்டடங்களில் நீட்டுவார்கள் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய இரண்டாவது அடையாளம்.

இதனை இன்று நாம் கண்கூடாக காண்கின்றோம். உலகில் ஏழை பணக்காரனாகிறான். பணக்காரன் ஏழையாகிறான். வறுமையும் செம்மையும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டும் நிரந்தரமாக நிலைத்து நிற்காமல் மாறி மாறி வருவதைப் பார்க்கிறோம். எத்தனையோ ஏழைகள் செல்வந்தர்களாகி பெரும் பெரும் மாட மாளிகைகளையும் கோபுரங்களையும் போட்டியிட்டுக் கொண்டு கட்டுவதையும் காண்கின்றோம். இச் செல்வம் யாவருக்கும் உரியதுதான். எல்லா மக்களும் அடையக் கூடிய ஒரு பாக்கியம் தான் என்பதை உணர்த்துகிறது. எனவே, மனிதர் யாவரும் இறைவன் முன் பிறப்பால் சமமானவர்களே. அவரவரின் செய்கையைப் பொருத்து தான் இறைவனிடத்தில் அந்தஸ்து பெறுவர் என்று திருக்குர்ஆன் கூறுகிற உபதேசம் பூர்த்தியாகிக் கொண்டிருக்கிறது. இது பரிபூரணமாக நிறைவேறிய உடன் உலகம் முடிவடைவதைத் தவிர வேறு இல்லை. இவ்விரு அடையாளங் களுக்குள் இறுதி நாள் பற்றிய இதர அடையாளங்கள் பெரும் பாலானவை அடங்கிவிட்டன. விவரமாக அறிய விரும்புவோர் இதர பெரிய நூற்களில் காண்க.

கட்டடத்தில் போட்டியிட்டுக் கொண்டு அடுக்கு மாடி வீடுகளைக் கட்டுவது தேவையில்லாத காரியம். தேவையில்லாத காரியங்களில் பண விரயம் செய்யப்படும் என்பது இதன் கருத்து என்றும் கொள்ளலாம். ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபிமார்களின் பால் இறைவனிடமிருந்து வஹீ

கொண்டு வரும் பணியைச் செய்த மலக்கு ஜிப்ரயீல் என்பது ஸுர்யானி மொழியிலுள்ள சொல். அப்துல்லாஹ் (அல்லாஹ்வின் அடியார்) என்பது இதன் பொருள். நாய், பன்றி ஆகிய உருவங்கள் நீங்கலாக மற்றைய உருவங்களில் மனிதர் களிடம் வானவர்கள் தோன்றும் ஆற்றலுள்ளவர்கள். ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடத்தில் பன்னிரண்டு முறையும், இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர் களிடத்தில் நான்கு முறையும் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் ஐந்து முறையும், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் நாற்பத்து இரண்டு முறையும், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் நானூறு முறையும், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் பத்து முறையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் இருபத்து நான்கு ஆயிரம் முறையும் வந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று இப்னு ஆதில் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒவ்வொரு நபிக்கும் அவரவர் காலத்தின் தேவைக்கேற்ப ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்அவர்களின் வருகையின் எண்ணிக்கை கூடுதல் குறைவாக இருந்தது. எனவே, நபிமார்களுக்கிடையில் சாமான்யர்களாகிய நாம் உயர்வு தாழ்வு கற்பிக்காமல், யாவரையும் சமமாகவே மதித்து கௌரவிக்க வேண்டும். இது இஸ்லாமிய சட்டம்.



## 3. இஸ்லாமியக் கடமைகள்

عن أبي عبد الرحمن عبد الله بن عمر بن الخطاب رضي الله تعالى عنهما قال: سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ بُنِيَ الإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةُ أَنْ لاَ إِلٰهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ وَإِقَامِ الصَّلَاةِ وَ إِيْتَاءِ الزَّكَاةِ وَحَجِّ الْبَيْتِ وَصَوْمِ رَمَضَانَ. رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

**“வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இல்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சியம் கூறுதல், தொழுகையை நிலை நிறுத்தல், ஜகாத்து என்னும் தர்மம் கொடுத்தல், ஹஜ்ஜு செய்தல், ரமலான் நோன்பு நோற்றல் ஆக ஐந்து காரியங்கள் மீது இஸ்லாம் நிறுவப்பட்டிருக்கிறது” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன்.**

அறிவிப்பவர்:- அபூ அப்துர் ரஹ்மான் அப்துல்லாஹிப்னு உமர் இப்னுல் கத்தாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸை ரிவாயத்துச் செய்தவர் இரண்டாவது கலீஃபாவான அமீருல் மூமினீன் ஸெய்யிதுனா உமர் இப்னுல் கத்தாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தலை மகனார் ஆவார். இவரது இயற்பெயர் அப்துல்லாஹ். இவருக்கு அப்துர் ரஹ்மான் என்றொரு புதல்வர் இருந்தார். இவருக்கு தந்தை என்ற கருத்தில் அபூஅப்திர்ரஹ்மான் என்ற காரண சிறப்புப் பெயர் வந்தது. இந்த ஹதீஸில் இவ்விரு பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இவர் பிறவியிலேயே இல்லறத் துறவி. ஹளரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு. அவ்ருடைய இளைய சகோதரர் உர்வத்துப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு. அப்துல் மலிக்குப்னு மர்வான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி. இந்த ஹதீஸை ரிவாயத்துச் செய்கிற அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வயதில் முன் பின் இருந்தாலும் பால்ய நண்பர்கள். இவர்கள் ஹஜ்ஜுச் செய்ய திருமக்காவிற்கு சென்றிருந்த போது ماء زمزم لما شرب له **எந்த நோக்கத்தில் ஜம்ஜம் தண்ணீர் அருந்தப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறும்** என்று ஹதீஸில் வந்திருப்பதால், நாம் நால்வரும் நமது தேவைகளை நிய்யத்துச் செய்து ஜம் ஜம் நீரை அருந்தி ஒவ்வொருவராக இறைவனை பிரார்த்திப்போம். மற்றவர்கள் ஆமீன் கூற வேண்டும் என்று கூடிப் பேசி ஜம் ஜம் நீரை அருந்தி நால்வரும் நான்கு விதமான பிரார்த்தனைகளைப் புரிந்தனர்.

அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவர் முதலாவதாக ஜம் ஜம் நீரை அருந்தி விட்டு "நாயனே, நான் மக்கா, மதீனா நகர்கள் உள்பட ஹிஜாஸ் மாகாணத்து அதிபதியாக இருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். மற்றைய மூவரும் ஆமீன் சொன்னார்கள். பின்னர் அவருடைய இளைய சகோதரர் உர்வத்துப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஜம் ஜம் நீரை அருந்தி "நாயனே" இன்னாருடைய மகள் இன்னாளை நான் திருமணம் செய்ய வேண்டும். என்று பிரார்த்தித்தார். மற்றைய மூவரும் ஆமீன் கூறினர். பின்னர் அப்துல் மலிக் இப்னு மர்வான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஜம் ஜம் நீரை அருந்தி "நாயனே. வல்லமையுள்ள கிலாஃபத் அரசை



எனக்குத் தந்தருள்வாயாக. என்னை எதிர்த்தவர்கள் தலை உருள வேண்டும். யாவரும் தோல்வியடைய வேண்டும்" என்று பிரார்த்தித்தார். மற்றைய மூவரும் ஆமீன் கூறினர். இறுதியாக ஹளரத் அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஜம் ஜம் நீரை அருந்தி நாயனே நான் பிரபஞ்ச மாயையில் சிக்கலாகாது. துறவியாகவே வாழ்ந்து மரணிக்கச் செய்வாயாக என்று பிரார்த்தித்தார். மற்றைய மூவரும் ஆமீன் கூறினர்.

இந்த நால்வரின் மேற்கண்ட நான்கு பிரார்த்தனைகளும் கொஞ்சமும் குறைவின்றி பரிபூரணமாக நிறைவேறின. ஹளரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கர்பலா சம்பவத்திற்கு பிறகு திருமக்காவில் தம்மை கலீஃபா என்று பிரகடனம் செய்தார். அதனை ஹிஜாஸ், ஏமன் முதலிய நாட்டினர் அங்கீகரித்தனர். திமிஷ்கு கிலாஃபத்து அரசை விட்டுப் பிரிந்து தனி அரசோச்சினார். அவருடைய இளைய சகோதரர் உர்வத்துப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தாம் விரும்பி குறிப்பிட்ட பெண்ணையே மணந்து இல்லற வாழ்க்கை நடத்தினார்.

அப்துல் மலிக் இப்னு மர்வான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி தம்முடைய தந்தைக்குப் பின்னர் திமிஷ்க்கில் கிலாஃபத்து பதவியை ஏற்று ஹிஜாஸில் போட்டி அரசை ஏற்படுத்திய அப்துல்லாஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை அடக்கி கிலாஃபத்து அரசுடன் இணைப்பதற்காக ஹஜ்ஜாஜுப்னு யூசுஃப் அவர்களின் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினார். திருமக்காவில் மஸ்ஜிதுல் ஹராமில் போர் நிகழ்ந்தது. கஃபா ஷரீபின் எதிரில் அப்துல்லா ஹிப்னு ஜுபைர்

ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஷஹீதானார். இம்மூவர் துஆவும் அவரவர் நாட்டப்படி அப்பழுக்கின்றி நிறைவேறின.

ஹளரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை மக்கா மதீனாவிலுள்ள பிரபலஸ்தர் களைக் கொண்ட ஒரு தூதுக்குழு பேட்டி கண்டு இஸ்லாமிய கிலாஃபத் பீடத்துக்காக முஸ்லிம்கள் குழப்பம் செய்து ரத்தம் சிந்துகின்றனர். உயிர் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. உள்நாட்டுக் குழப்பம் காரணமாக இஸ்லாமிய அரசு பலஹீனம் அடைந்து விட்டால் சுற்றிலுமுள்ளவர்கள் படையெடுத்து வரத் துணிந்து விடுவர். தாங்கள் கலீஃபா பதவியை ஏற்றுக் கொண்டால் தங்களை கட்சி பேதமின்றி அனைவரும் கலீஃபாவாக ஏற்றுக் கொள்வர். கலீஃபாவாக இருப்பதற்குரிய சகல தகுதிகளும் தங்களிடம் இருக்கின்றன. தங்கள் தந்தை கலீஃபாவாக இருந்து நாட்டுக்கும் சமூகத்திற்கும் செய்த சேவை மக்களின் மனதிலிருந்து மறையவில்லை என்று விண்ணப்பித்தனர். அதற்கவர் எனக்கு பதவி ஆசை இல்லை. அப்துல்லாஹ் என்ற பெயருடன் சாமான்ய பிரஜை என்ற முறையிலேயே இவ்வுலகை விட்டு மறைய விரும்புகிறேன். அமீருல் மூமினீன் என்ற பட்டத்துடன் மறைய நான் விரும்பவில்லை என்று கூறி கிலாஃபத் பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். இவர் கேட்ட பிரார்த்தனையின்படி உலகச் செல்வங்களிலோ, பட்டம் பதவிகளிலோ ஆசைப்படாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து திருமக்காவில் மறைந்தார்.

திருமக்காவில் ராணுவ கவர்னர் ஹஜ்ஜாஜுப்னு யூஸுஃப் பதவி வகித்துக் கொண்டிருந்த காலத்தில் தான் இவர் திருமக்காவில் ஹிஜ்ரி 73 வது வருடத்தில் மறைந்தார். ஆட்சியாளர் தான் ஜனாஸா தொழுவிப்பதற்கு அருகதை



யுள்ளவர். ஆதலின் தம்முடைய ஜனாஸாவிற்கு ஹஜ்ஜாஜுப்னு யூசுஃப் இமாம் ஆக நிற்க வேண்டிய தேற்படும் என்பதைக் கருதி, தம்முடைய ஆன்மா உடலைப் விட்டுப் பிரிந்தவுடன் துரிதமாக அடக்கம் செய்து விடவேண்டும். ஹஜ்ஜாஜுப்னு யூசுஃபுக்கு தெரிவிக்கலாகாது என்று வஸிய்யத்துச் செய்து விட்டு மறைந்தார். அக்காலத்தில் அவர் திருமக்கா நகரை விட்டு சுற்றுப்புற கிராமங்களில் உள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய ஜனாஸா அக்கிராமத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரை அடக்கம் செய்த பின்பு தான் அக்காலத்திலுள்ள மக்காவாசிகளுக்கும், ஆளுநராகிய ஹஜ்ஜாஜுப்னு யூசுஃபுக்கும் தெரிந்தது. இந்த காரணத்தால் அவர் திரு மக்காவிலுள்ள ஜன்னத்துல்முஅல்லா என்ற கப்ருஸ்தானில் அடக்கம் செய்யப்படவில்லை. உம்ரா செய்வோர் இஹ்ராம் கட்டுவதற்காக தன்யீமிலுள்ள மஸ்ஜித் ஆயிஷாவிற்கு செல்லும் வழியில் ஷுஹதா என்ற இடத்திற்கு அருகில் மலைச்சரிவில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவருடைய கப்ருக்கு கட்டடம் கட்டப்படவில்லை. நான்கு பக்கமும் சுற்றுச் சுவர் தான் எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்டுள்ள ஐந்து விஷயங்களும் தான் அர்கானுல் இஸ்லாம். இவற்றைக் குறித்து மக்தப் என்னும் குர்ஆன் மத்ரஸாக்களிலேயே குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுவதால் இவற்றைக் குறித்த விளக்கம் எழுதவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே, இம்மட்டுடன் நிறுத்தப்பட்டது.

## 4. மனிதனின் இறுதி முடிவு

عن أبي عبد الرحمن عبد الله بن مسعود رضي الله تعالى عنه قَالَ:
حَدَّثَنَا رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ الصَّادِقُ الْمَصْدُوْقُ إِنَّ
أَحَدَكُمْ يُجْمَعُ خَلْقُهُ فِيْ بَطْنِ أُمِّهِ أَرْبَعِيْنَ يَوْمًا نُطْفَةً ثُمَّ يَكُوْنُ عَلَقَةً
مِثْلَ ذَٰلِكَ ثُمَّ يَكُوْنُ مُضْغَةً مِثْلَ ذَٰلِكَ ثُمَّ يُرْسَلُ إِلَيْهِ الْمَلَكُ فَيَنْفُخُ فِيْهِ
الرُّوْحَ وَيُؤْمَرُ بِأَرْبَعِ كَلِمَاتٍ بِكَتْبِ رِزْقِهِ وَأَجَلِهِ وَعَمَلِهِ وَشَقِيٌّ أَوْ
سَعِيْدٌ فَوَاللهِ الَّذِيْ لَا إِلَٰهَ غَيْرُهُ إِنَّ أحدكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ
حَتَّى مَا يَكُوْنَ بَيْنَهُ وَبَيْنَهَا إِلَّا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ
أَهْلِ النَّارِ فَيَدْخُلُهَا وَ إِنَّ أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ حَتَّى مَا يَكُوْنَ
بَيْنَهُ وَ بَيْنَهَا إِلَّا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ
فَيَدْخُلُهَا. رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

"உங்களில் ஒவ்வொருவருடைய சிருஷ்டியும் அவருடைய தாயின் வயிற்றில் நாற்பது நாட்கள் இந்திரியமாகவும், பின்னர் அதே மாதிரி இரத்தக் கட்டியாகவும், பின்னர் அதே மாதிரி தசைக் கட்டியாகவும் சேமித்து வைக்கப்படும். பின்னர் வானவர் அனுப்பப்படுவார் அவர் அதில் ரூஹை (உயிரை) ஊதுவார். நான்கு காரியங்களுக்கு அவர் கட்டளை இடப்படுவார். அவருடைய ரிஜ்கு (உணவு) அவருடைய மரணத்தவணை, அவருடைய கிரியைகள், பாக்கியவான் அல்லது துர்பாக்கியவான் என்ற விவரம் எழுதப்படும். அவனைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவன் இல்லையே அவன் மீது



சத்தியமாக (க் கூறுகிறேன்) உங்களில் ஒருவர் சுவர்க்கவாதியுடைய கிரியைகளைச் செய்வார். முடிவாக அவருக்கும் அதற்கும் இடையில் ஒரு முழம் தானிருக்கும். அப்பொழுது அவருக்கு அந்த எழுத்து முந்திவிடும். அவர் நரக வாதியின் செயலை செய்து அதில் (நரகில்) பிரவேசித்து விடுவார். இன்னும் உங்களில் ஒருவர் நரகவாதியின் செயலை செய்வார். முடிவில் அவருக்கும் அதற்கும் (நரகத்துக்கும்) ஒரு முழத்தைத் தவிர வேறு இருக்காது. அவர் மீது அந்த எழுத்து முந்திவிடும். அவர் சுவர்க்கவாதியின் செயலைச் செய்து அதில் (சுவர்க்கத்தில்) பிரவேசிப்பார்". ஸாதிக் (உண்மையாளர்) என்றும் மஸ்தூக் (உண்மையாளர் என்று அறிவிக்கப்பட்டவரும்) ஆகிய ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அபூ அப்திர் ரஹ்மான் அப்துல்லாஹிப்னு மஸ்வூது ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸில் மனிதனுடைய உற்பத்தியும் முடிவும் இரண்டிற்குமிடையிலுள்ள மற்ற காரியங்களும் விவரிக்கப் பட்டிருக்கின்றன. ஆண் பெண் உடல் உறவால் சுக்கிலமும் சுரோணிதமும் சங்கமமாகி தாயின் கர்ப்பப் பையில் இந்திரியம் விழுந்த பின் நாற்பது நாட்கள் வரை இந்திரியமாகவே இருந்து பக்குவம் அடைகிறது. அடுத்த நாற்பது நாள் அவ்விந்திரியம் உதிரக் கட்டியாக மாறி பக்குவம் அடைகிறது. மூன்றாவது நாற்பது நாளில் அவ்வுதிரக்கட்டி தசைக்கட்டியாக உருப் பெறுகிறது. எனவே, கர்ப்பம் நான்கு மாதம் ஆகும் வரை இந்த வளர்ச்சி ஏற்படுகிறது. அதற்குப் பிறகு தான் ஐந்தாவது மாத துவக்கத்தில் உயிர் ஊதப்படுகிறது.

பிரஜா உற்பத்தியை கட்டுப்படுத்த வேண்டும் என்ற இயக்கம் இக்காலத்தில் நாடெங்கும் பரவி இருக்கிறது. சில அரசாங்கங்கள் இதனைப் பிரசாரம் செய்ய ஆட்களை நியமித்திருக்கிறது. கற்பத்தடை செய்து கொள்ளும் ஆண் பெண்களுக்கு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை மட்டுமின்றி பணமும் கொடுக்கப்படுகிறது. கோடிக் கணக்கான செல்வத்தை இவ்வாறு செலவு செய்வதற்கு கூறப்படும் முக்கிய காரணம் உணவுப் பஞ்சம் வந்துவிடும் என்ற பயம்தான். உணவுப் பஞ்சம் மட்டும் என்ன? பிரஜைகளின் பெருக்கத்திற்குத் தக்கவாறு கல்விக் கூடங்களை நிறுவ வேண்டும். மருத்துவ மனைகளை ஏற்படுத்த வேண்டும் இவற்றில் பணிபுரிய மருத்துவர்களை தயார் செய்ய வேண்டும். இவர்களுக்குத் தேவையான உடைகளை உண்டு பண்ண நெசவுத் தொழிலை பெருக்க வேண்டும். இதனால் மறைமுகமாக பல கோடி செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. ஆட்சியாளர்களுக்கு இவைகள் எல்லாம் பெரும் பாரமாகத் தோன்றுவதால் இந்த பளுவைக் குறைத்துக் கொள்ள கருத்தடைப் பிரசாரம் செய்கின்றனர்.

இந்த கருத்தடையும் பிரஜா உற்பத்தியை குறைத்தலும் இக்காலத்தில் மட்டும் அல்ல. உலகம் தோன்றிய காலம் முதல் இருந்து வருகிறது. எந்த நோக்கத்தில் இந்த பிரசாரம் நடைபெறுகிறதோ அந்த நோக்கத்தை அல்லாஹ் நிராகரிக்கிறான்.

وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ خَشْيَةَ إِمْلَاقٍ نَحْنُ نَرْزُقُهُمْ وَإِيَّاكُمْ إِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْئًا كَبِيرًا

**"தரித்திரத்தைப் பயந்து உங்களின் சந்ததியினரை கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும், உங்களுக்கும் நாம்**



**உணவளிக்கிறோம்"** 17:31 அவர்களை கொலை செய்வது பெருங் குற்றம் என்பதாக திருக்குர்ஆனில் இறைவன் கூறியுள்ளான். இந்த சூரத்து மதனீ சூரத்தைச் சேர்ந்தது. அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்த பின் அருளப்பட்டது. ஹிஜ்ரீ ஆறாம் வருடம் திரு மதீனாவுக்கு வடக்கேயுள்ள கைபர் என்ற இடத்தில் யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நடந்த போருக்குச் சென்றிருந்த நபித் தோழர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் நாங்கள் குடும்பத்தை விட்டு வந்து அநேக நாட்களாகி விட்டன (கிட்டத்தட்ட ஒரு மாதம்). ஆதலின், எங்களுடைய அடிமைப் பெண்களிடம் உடலுறவு கொண்டு, குழந்தை பிறக்காமலிருப்பதற்காக இந்திரியம் கற்பப் பையில் போகாமல் வெளியில் விட்டு விட அனுமதி தர வேண்டும் என்று விண்ணப்பித்தனர். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குழந்தை பிறப்பதை தடுப்பதற்கு நீங்கள் செய்ய விரும்புகிற இந்த உபாயம் வெற்றி பெறாது. உங்களிடமிருந்து எத்தனை குழந்தைகளை வெளிப்படுத்த இறைவன் விரும்புகிறானோ அத்தனையையும் அவன் வெளிப்படுத்தியே தீருவான் என்று பதிலளித்தார்கள்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில் குழந்தைகளை பிறக்கச் செய்வது இறைவனின் விருப்பத்தைப் பொறுத்தது. மனித இஷ்டத்திற்கு அதில் சம்பந்தமில்லை. இந்நிலையில் கற்பத்தடை செய்வது வீண் வேலையும் ஆண், பெண் உடல் ஆரோக்கியத்தை வேண்டுமென்றே கெடுத்துக்

கொள்ளும் பாவச் செயலுமாகும். இந்திரியத்தை கர்ப்பப்பையில் விடாமல் வெளியில் சிந்தி விடுவதே பாவச் செயலாக இருக்கையில் கர்ப்பப்பையினுள் பிரவேசித்த இந்திரியம் வளர்ச்சி அடையவிடாமல் மருந்துகள் மூலமும் இஞ்ஜக்ஷன் மூலமும் சிதைப்பது அதைவிடப் பெரும் பாவமாகும். என்றாலும் கர்ப்பம் அடைந்த பெண் பலஹீனமாகவோ, நோயாளியாகவோ இருந்து கற்பத்தை வளர விடாமல் அவளுடைய உயிருக்கு ஆபத்துவரும் என்று மருத்துவர் கண்டிப்பாக கூறும் பட்சத்தில் உயிருடன் வாழ்கிற தாய்க்கு அபாயம் வராமல் காப்பாற்றுவதற்காக உயிர் ஊதப்படாமலிருக்கிற (நான்கு மாதங்களுக்கு குறைந்த) கர்ப்பத்தை சிதைத்தால் குற்றமில்லை என்று இஸ்லாமிய சட்டம் வழி வகுத்திருக்கிறது.

நான்கு மாதங்களுக்குப் பிறகு கற்பத்திற்கு உயிர் ஊதப்பட்டு விடுவதால் அப்புறம் கர்ப்பத்தைச் சிதைப்பது கொலைக் குற்றமாகும். இதனைக் குறித்து தரித்திரத்தைப் பயந்து உங்களின் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள் என்று இறைவன் கூறியுள்ள மேற்கண்ட திருவசனம் கொலைக் குற்றத்தை விட்டு நாம் தப்பித்துக் கொள்ள எச்சரிக்கை செய்கிறது. இது மட்டுமல்ல இதே திருமறையில் வேறொரு இடத்தில்.

وَإِذَا الْمَوْءُودَةُ سُئِلَتْ بِأَيِّ ذَنْبٍ قُتِلَتْ

**"கொல்லப்பட்ட குழந்தைகள் எந்த குற்றத்திற்காக கொலை செய்யப்பட்டனர் என்று வினவப்படும் நாளை நினைத்துப் பாரும்"** (8:8,9) என்று இறைவன் கூறியுள்ளான்.

குழந்தை பிறந்த பின்னர் அதனைக் கொன்று புதைப்பதை மட்டும் இந்த ஆயத்து குறிப்பிடவில்லை. கர்ப்பத்தில் உயிரூட்டப்பட்டு செயற்கை முறையில் அதனை வெளியாக்கி புதைப்பதையும் இந்தத் திருவசனம் கட்டுப்படுத்தும் என்பதை நாம் மறந்து விடலாகாது.



உணவுப் பஞ்சத்தை நாம் பயப்படுகிறோம். நமக்கும் நம்மிலிருந்து வெளிப்படும் குழந்தைகளுக்கும் உணவளிப்பது நான் தான் என்று இறைவன் மேற்கண்ட வசனத்தின் மூலம் பொறுப்பேற்றுள்ளான். நாம் உட்கொள்கிற உணவுகளின் அளவு, வகை முதலியவற்றை தாயின் கர்ப்பத்தில் நாம் இருக்கையில் நமக்கு உயிர் ஊட்டும் போது (ஐந்தாவது மாதத்திலேயே) வானவர்கள் மூலமாக அல்லாஹ் எழுதச் செய்து விடுகிறான் என்பது இந்த ஹதீஸிருந்து நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. இதனை நாம் விசுவாசித்திருக்கிறோம். நமக்கு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொடுக்க கையாலாகாத ஆட்சியாளர்கள் கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்வதும், கர்ப்பத்தை சிதைக்க பலவிதமான உபாயங்களை செய்வதும் எவ்வளவு மதியீனம் என்பதை நாம் சிந்திப்போமாக.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்டுள்ள இரண்டாவது செய்தி கருவில் உதித்த சிசுவின் வயது, இச்சிசு எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்து மரணிக்கும் என்ற விவரம், இந்த இடத்தில் எந்த நோயால் இறக்கும் என்ற விவரமும் இதில் அடங்கி இருக்கிறது. மரணம் ஒன்றிருக்கிறது என்பதை ஞாபகமூட்டி, மரணத்திற்கு முன்னர் தன்னிடம் மன்னிப்புக் கேட்டு பல பாவங்களை விட்டு, விலகி சுத்தமாகிக் கொள்வதற்காக மனிதருக்கு நோய் நொடிகளை இறைவன் ஏற்படுத்துகிறான். தனக்கு வந்த நோயினால் ஏற்பட்ட வருத்தங்களை மனமொப்பி சகித்துக் கொள்பவருக்கு அவருடைய தவறுகளால் ஏற்பட்ட சிறு

பாவங்களை மன்னிக்கிறான். அத்துடன் அவருடைய சகிப்புத் தன்மையின் தரத்தைப் பொருத்து நன்மைகளையும் எழுதச் செய்கிறான். ஒருவருக்கு நோய் வராமலிருந்தால் அவர் இறைவனை அஞ்சுவதும், நன்மையான காரியங்களைச் செய்வதும் வணக்கங்கள் புரிவதும், உலகிலுள்ள நோயாளி களுக்கிரங்கி அவர்களுக்கு உதவி புரிவதும் குறைவதுடன் மரணத்தை மறந்து பாவச் செயல்களில் ஈடுபடுவதும் அதிகரிக்கும். எனவே, மனிதருக்கு நோய் வருவது ஒரு வகையில் நல்லதே. ஆனால், அதனை மனமொப்பி ஏற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதனை சகிக்காமல் இறைவனை ஏசுவதும் சுற்றத்தாருக்கும் பந்துக்களுக்கும் நியாயமின்றி கஷ்டம் கொடுப்பதும் பொறுமையற்ற செய்கைகளாகும். இதனால் பாவங்கள் அதிகமாவதைத் தவிர வேறில்லை.

நோய் வந்தால் மருத்துவ சிகிச்சை செய்வது கூடாது. அது பொறுமையின்மைக்கு அறிகுறி என்று கருதலாகாது. ஏனெனில், இவ்வுடலை நாமாக உண்டாக்கவுமில்லை. வளர்க்கவுமில்லை, இறைவன்தான் இவ்விரண்டையும் உண்மையில் செய்கிறான். அவற்றிற்குரிய புறக்காரியங்களை நாம் செய்து கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறான். நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட இவ்வுடலை நாம் பேணிக் காக்காமல், உரிய காலத்தில் மருத்துவம் செய்து கொள்ளாமல் சுகாதார முறைப்படி நடக்காமல் உடலை நலியச் செய்தால் அதற்காக நாம் விசாரிக்கப்பட்டு மறுமையில் தண்டனைக்கு உள்ளாவோம். ஆனால், மரணவியாதியாக இருந்தால் மருத்துவம் சிகிச்சை பலனளிக்காது. மரண வியாதியாக இல்லாவிடில் அது நீங்கும் வேளையில் தானாக நீங்கி விடும். அதற்காக நாம் சிகிச்சை செய்து பணத்தை விரயம்



செய்ய வேண்டாம் என்று குதர்க்க வாதம் செய்வது குற்றமாகும். மரணம் வரும்போது வரட்டும், வந்த நோய்க்கு வைத்தியம் செய்து உடலைக் காப்போம் என்று சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். மருந்தில்லாத நோய் இல்லை. எனவே, நோய்க்கு சிகிச்சை செய்ய வேண்டும். மரணத்தை மருந்தால் அகற்ற முடியாது. மருந்துக்கு மரணத்தை அகற்றும் சக்தியில்லை. மருத்துவரின் முயற்சி எல்லாம் நோய்க்குரிய சிகிச்சைதான். இதனை செய்து கொள்வதில் நோயாளியின் வருத்தம் ஓரளவு குறைவதைத் தவிர வேறன்று. நோயை விட்டவன் (மேற்கண்ட காரணங்களுக்காக) இறைவனே. அவன்தான் நோயை விலக்க வேண்டும். வைத்தி யனுக்கும் மருந்துக்கும் நோயை விலக்க அதிகாரமில்லை என்ற ஈமானை (தெய்வ விசுவாசத்தை) நாம் கைவிடலாகாது.

எல்லா மக்களுக்கும் உணவு அளிக்கும் பொறுப்பை இறைவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான். இவ்வுலகில் வாழும் போது மனிதன் கோதுமை எவ்வளவு உண்பான்? அரிசியில் எவ்வளவை உட்கொள்ளுவான். சர்க்கரை எவ்வளவு சாப்பாடுவான்? என்பன போன்ற விவரங்கள்தான் கர்ப்பத்தில் எழுதப்படுகின்றன. அவனுக்கென எழுதப்பட்ட உணவுப் பொருட்களை அவர் உட்கொண்டு, முடித்து விட்டால் அப்புறம் அந்த உணவுப் பொருளை அவன் உட்கொள்ள அவனுடைய உடல் நிலை இடங்கொடுப்ப தில்லை. இதனை பொது மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் டாக்டரிடம் செல்வர். டாக்டர் ஏதாவது ஒரு வியாதியின் பெயரைக் கூறி அரிசி சாப்பிடாதே. உப்பைக் குறைத்துக் கொள். இனிப்புப் பண்டம் உதவாது என்றெல்லாம் பத்தியங்களைக் கூறி அவரைத் தடுத்து விடுவார்.

ரிஜ்கு என்பதற்கு சம்பத்து என்பது பொருளல்ல. நிலச்சுவான்தார் ஒருவருக்கு ஏராளமான கோதுமை, கேழ்வரகு, சோளம், கரும்பு, மிளகாய், நெல் போன்ற உணவு தானியங்களும் உணவுப் பொருட்களும் விளைந்தால், அவை யாவும் அவருக்குரிய உணவுகளல்ல. அவருக்கென இறைவன் ஏற்படுத்திய உணவுகளை மட்டும்தான் அவர் அருந்துவார். மீதியுள்ளவற்றை அவர் விற்பனை செய்து விட வேண்டியதே. பொது மக்களுக்கு உதவாத முறையில் அதனை அவர் அழிப்பாராயின் அல்லது பதுக்கல் செய்வாராயின் இறைவனால் மறுமையில் விசாரிக்கப்படுவார். சிலருக்கு இவ்வுலகிலும் கூட தண்டனை வரக்கூடும்.

நிலச்சுவான்தாருக்கு அல்லாஹ் கிருபை செய்துள்ளான்; நிலமில்லாதவருக்கு கிருபை செய்யவில்லை என்று சன்மார்க்க அறிவு தேவையான அளவுக்கு இல்லாதவர்கள் கருதி அல்லாஹு தஆலாவின் மீது தவறான கருத்துக்களைக் கூறுவர். இது பொது மக்களின் தவறான கருத்தேயன்றி, அல்லாஹ்வின் ஓரவஞ் சனையான செயலல்ல. ஒருவர் பெரிய நிலச்சுவான்தாரராகவோ செல்வந்தராகவோ இருந்தால் விளைச்சலை அதிகப்படுத்தி பொது மக்களுக்கு அதனைக் கிடைக்கச் செய்யுமாறு இறைவன் பணித்திருக்கிறான் என்றும் அப்பணியை அவர் ஒழுங்காகச் செய்யாவிடில் அவரை தண்டிப்பான். அப்பணியைச் செய்யுமாறு வேறு ஒருவரை பணிப்பான். நிலமில்லாதவருக்கு அல்லாஹ்வின் கிருபை இல்லை என்பது இதன் பொருளல்ல. அவனுடைய கிருபை யாவருக்கும் அவரவர் தரத்துக்கு தக்கவாறு சமமே. இந்த சமத்துவத்தை மறுமையில் யாவரும் பிரத்தியட்சமாக கண்டு கொள்வர். இவ்வுலகில் அஞ்ஞானிகளுக்கு இது புரியாது. எனவே,





செல்வந்தர், கல்விமான், நிலச்சுவான்தார், தொழிலதிபர் போன்றவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றும் இறைவன் கிருபை தங்களுக்குத்தான் இருக்கிறது என்றும், ஏழைகளுக்கு இறைவன் கிருபை இல்லை என்றும் கருதுவது அப்பாவித்தனம் என்பதை நாம் உணரவேண்டும்.

மறுமையில் செல்வந்தர்களுக்கும் பதவியாளர்களுக்கும் விசாரணை அதிகமுண்டு. ஏழைகளுக்கு அவ்வளவு அதிகமான கேள்விகள் இருக்காது என்பது சன்மார்க்க சித்தாந்தம். ஒரு முறை கடுமையான வேனிற் காலத்தில் திரு மதீனாவிலுள்ள ஒரு தோட்டத்தினுள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களும் சென்றனர். அந்தத் தோட்டம் ஒரு அன்ஸாரி ஸஹாபிக்கு சொந்தமானது. அவர் இம்மூவரையும் வரவேற்று ஒரு நிழலில் அமரச் செய்து குளிர்ந்த நீரை அருந்தச் செய்து, புசிப்பதற்கு திராட்சை குலையை பறித்துக் கொண்டு வந்து அவர்களின் முன்னிலையில் வைத்தார். அதனை அம்மூவரும் சாப்பிட்டனர். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்விரு வரையும் நோக்கி இப்பொழுது நாம் அனுபவித்த நிழல், அருந்திய நீர், சாப்பிட்ட பழம் ஆகியவற்றிற்கும் கூட இறுதிநாளில் நாம் விசாரிக்கப்படுவோம் என்று கூறி ثُمَّ لَتُسْـَٔلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيمِ **பின்னர் அந்த நாளில் ஒவ்வொரு பாக்கியத்திற்கும் நீங்கள் வினவப்படுவீர்கள்** (102:8) என்ற ஆயத்தை ஓதிக் காட்டினார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜீவிய சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றை இம்மூவரும் நியாயமான முறையிலேயே அனுபவித்தனர். தோட்டத்திற்கு

சொந்தக்காரரான அன்ஸாரி ஸஹாபி இம்மூவரையும் மனமகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்தோம்பல் செய்தார். இவர்கள் அனுபவித்த இம்மூன்றும் ஹலாலானவைதான் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் அனுபவித்தது குற்றச் செய்கையுமல்ல. ஆயினும், இதற்காக நன்றி செலுத்தினார்களா? என்ற கேள்வி இறுதி நாளில் இருக்கிறது. எனவே. இவ்வாறான உணவுகளைச் சாப்பிடுபவர் சாப்பிட்டு முடிந்தவுடன்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَطْعَمَنَا وَسَقَانَا وَجَعَلَنَا مِنَ الْمُسْلِمِيْنَ.

اَللّٰهُمَّ اَطْعِمْ مَنْ اَطْعَمَنَا وَاسْقِ مَنْ سَقَانَا بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ.

என்ற துஆவை ஓதுவாராயின் அவர் அல்லாஹ்விற்கும் நன்றி செலுத்தியவராவதுடன் அவ்வுணவை அளித்தவருக்காக துஆ செய்தவராகவும் ஆகி விடுவார். வெளியிடத்தில் உணவருந்தினாலும் சரி; தன்னுடைய வீட்டில் உணவருந்தினால் சரி; இதனை ஓதுவது நல்லது.

ஒலியாக இருக்கிற ஒருவரிடம் முரீது வாங்க வேண்டுமென்பது ஒருவரின் விருப்பம். அவருடைய ஊருக்கு வருகிற ஆலிம் உலமாக்களிடம் இக்காலத்திலுள்ள குத்துபு எவர்? என்று வினவுவதும், அவர்கள் கூறுகிற நபரிடம் சென்று அவரை கவனிப்பதும் வழக்கம். ஒலியாக இருப்பவர் இந்த விதமாகத் தானிருக்க முடியும் என்று தனக்குள்ளாகவே சில தன்மைகளை ஏற்படுத்திக் கொண்டார். அவர் கணித்து வைத்திருக்கிற தன்மைகள் அவரிடம் இல்லாதிருந்தால் அவர் ஒலியல்லவென்று திரும்ப வந்து விடுவார். இவ்வாறாக பல வருடங்களாக பல இடங்களுக்கும் சென்று திரும்ப வந்த பின்னர், பகுதாதில் அப்துல் காதிர் என்றொருவர் இருக்கிறார். அவர் பிறந்த ஊர் ஜீலன். அவர்தான்



இக்காலத்து குத்துபுல் அக்தாப் என்று ஒருவர் மூலம் கேள்விப்பட்டு, அவரையும் பார்த்து விடுவோமே என்ற முடிவுடன் பக்தாது வந்தார்.

அப்துல் காதிர் ஜீலானி என்பவர் யார்? என்று விசாரித்த போது ஒரு கட்டடத்தை சுட்டிக்காட்டி அங்கு சென்று விசாரியுங்கள் என்றனர். அங்கு அவர் சென்று விசாரித்த போது, அங்குள்ளவர் அவரை வரவேற்று உபசரித்து, இது நீங்கள் நாடி வந்த பெரிய மனிதரின் விருந்து மாளிகை. இங்கு நீங்கள் தங்கி இருந்து குறித்த காலத்தில் அவரைச் சந்தித்து உங்கள் காரியத்தை கவனித்துக் கொள்ளலாம் என்று கூறி அங்கு அவர் தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தனர். இவ்வளவு பெரிய செல்வந்தர் ஒலியாக இருக்க முடியாது என்று மனதினுள் தீர்மானித்துக் கொண்டார். ஆயினும் பணத்தைச் செலவு செய்து நீண்ட பிரயாணமும் செய்து வந்துவிட்டோம். சில நாட்கள் தங்கி இருந்து ஓய்வெடுத்துக் கொள்வோம். இந்த பெரிய மனிதரையும் சந்தித்துப் பார்ப்போம் என்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டு அங்கேயே தங்கினார்.

ஹளரத் அவர்கள் அக்காலத்தில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்து கொண்டிருந்ததுடன் சொந்த விவசாயமும் செய்து வந்தார்கள். எனவே, வியாபார அலுவல், விவசாய அலுவல், மனைவி மக்களுடன் இருத்தல், பொது மக்களுக்கு உபதேசம், மத்ரஸா மாணவர்களுக்கு பாடபோதனை, சந்திக்க வந்தவர்களுக்கு பேட்டி கொடுத்தல், முரீது வாங்கி (தீட்சை பெற்று) பயிற்சி பெறும் சிஷ்யர்களுக்கு பிரத்தியேக உபதேசம் என்று தங்களின் அலுவல்களைப் பிரித்து வைத்து அதற்கான நேரங்களையும் நிர்ணயித்திருந்தார்கள். எனவே, புதிதாக வந்த இவருக்கு உடனே பேட்டி கிடைக்க வாய்ப்பில்லை.

ஹளரத் அவர்களின் விருந்து மாளிகையில் தங்கி இருந்து கொண்டு ஹளரத் அவர்களின் பணிகளை விலகி இருந்தவாறே கவனித்துக் கொண்டிருந்தார். இவ்வாறாக அவர் கிட்டத்தட்ட ஐந்தாறு மாதங்கள் தங்கி விட்டார்.

கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் அலுவலாக செல்லும் இடங்களுக்கெல்லாம் அவர் செல்வது வழக்கம். ஆனால் அருகில் நெருங்கிப் பேசுவதில்லை. இந்நிலையில் ஒரு நாள் கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் வியாபார ஸ்தலத்திற்கு சென்றார்கள். எகிப்திலிருந்து அவர்களின் வியாபாரப் பிரதிநிதி எழுதிய கடிதம் அவர்களிடம் கொடுக்கப் பட்டது. எகிப்துக்கு ஜவுளிகளை ஏற்றி வந்த கப்பல் துறைமுகத் திலிருந்து நீல் நதிக்குள் பிரவேசிக்கையில் கப்பல் கவிழ்ந்து விட்டது. அந்த கப்பலில் நமது சரக்கும் இருந்தது என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. இதனை கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் படித்து விட்டு அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி கடிதத்தை தம்முடைய கணக்கரிடம் கொடுத்து விட்டார்கள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு அதே பிரதிநிதியிடமிருந்து மற்றொரு கடிதம் வந்தது. ஆற்று முகத்துவாரத்தில் கவிழ்ந்த கப்பல் மேட்டிற்கு இழுக்கப்பட்டு சாமான்கள் வெளியில் எடுக்கப்பட்டன. நமது சரக்குகள் நனைந்து விட்டன. உலர வைத்து சற்று விலையைக் குறைத்து விற்கப்பட்டதில் நமது முதலீடு கிடைத்து விட்டது. இலாபம் இல்லை என்று எழுதப்பட்டிருந்தது. இக்கடிதத்தைப் படித்து விட்டு முன் போலவே அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி கணக்கரிடம்



கடிதத்தைக் கொடுத்தார்கள். இதைப் பார்த்த அவரால் மௌனமாக இருக்க முடியவில்லை. தம்முடைய சந்தேகத்தைக் கேட்க ஆரம்பித்தார்.

நாயகமே! தங்களுக்கு இன்று வந்த கடிதத்தை தாங்கள் படித்து அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னதை செவியுற்றேன். முதல் நஷ்டமில்லாமல் கிடைத்ததைக் குறித்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி அவனைப் புகழ்ந்து நியாயம் தான். ஒரு வாரத்திற்கு முன்னர் இதே வர்த்தகப் பிரதிநிதி இடமிருந்து நமது சரக்கு ஏற்றப்பட்டிருந்த கப்பல் கவிழ்ந்து விட்டது என்று தகவல் எழுதப்பட்டிருந்த கடிதம் வந்து அதனைப் படித்து அல்ஹம்துலில்லாஹ் என்று கூறியது எனக்கு வியப்பை அளிக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் என்றோ இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்றோ தானே கூறுவது வழக்கம். இவ்வழக்கத்திற்கு மாறாக தாங்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்ததற்குக் காரணமென்ன? என்று வினவினார்.

அதற்கு கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சகோதரரே! உமது சந்தேகம் சரியானதுதான். அதனை நிவர்த்தி செய்வது அவசியமே. சரக்குக் கப்பல் கவிழ்ந்ததைக் குறித்தோ நாங்கள் அனுப்பிய சரக்கு நஷ்டமின்றி விற்கப் பட்டதைக் குறித்தோ அல்ஹம்துலில்லாஹ் என்று நான் சொல்லவில்லை. சரக்குக் கப்பல் கவிழ்ந்ததைக் குறித்த கடிதம் வந்தபோது என் மன நிலையைக் கவனித்தேன். என் மனம் பதறவில்லை. கவலை அடையவுமில்லை. ஜீலானிலிருந்து நீர் பகுதாதிற்கு வந்த போது ஏழையாய் இருந்தீர். இடையில் செல்வந்தரானீர். இப்பொழுது மீண்டும் ஏழையாகி விட்டீர்.

உனக்கு நிரந்தரமான நஷ்டம் எதுவுமில்லையே. இடையில் வந்தது இடையில் போய்விட்டது என்று என் மனம் கூறிற்று. சலாமத்தான கல்பை (நல்ல மனப்பண்பை) இறைவன் எனக்குத் தந்திருக்கிறான் என்பதை நினைத்து அவனுக்கு நன்றி செலுத்தி அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினேன். இரண்டாவது கடிதம் வந்தபோது என் மன நிலையைக் கவனித்தேன். போன பொருள் கிடைத்து விட்டது. அதைப் பேணிக்காத்து உரியவர்களிடம் சட்டப்படி நீர் ஒப்புவிக்க வேண்டிய பொறுப்பு உன்மீது ஏற்பட்டு விட்டது. தபால்காரன் பணத்தை உரியவரிடம் ஒப்புவிப்பது போல் இந்த செல்வத்திற்கு உரிய ஜகாத்து, ஸதக்கா முதலியவற்றை கணக்குப் பார்த்து அடைய வேண்டியவர்களிடத்தில் அவற்றை ஒப்புவிக்க வேண்டிய வேலை உமக்கு மீண்டும் வந்து விட்டது என்று என் மனம் கூறிற்று. சலாமத்தான கல்பை (நல்ல மனப்பண்பை) இறைவன் அருளியிருக்கிறான் என்பதற்காக அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி நன்றி செலுத்தினேன் என்று பதிலளித்தார்கள்.

இதனைச் செவியுற்ற அவர் சிந்தை தெளிந்து, நாயகமே! ஐந்தாறு மாத காலமாக தங்களின் விருந்தினர் விடுதியில் தங்கி தங்களுடைய அலுவல்களையும் நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டிருந்தேன். பணக்காரர் ஒலியாக மாட்டார் என்பது எனது எண்ணம். அந்த தவறான கருத்து தங்களின் அறிவுரையிலிருந்து என்னை விட்டகன்றது. தாங்கள் எனக்கு தீட்சை தந்து வழி நடத்த வேண்டும் என்று கூறி அன்னாரிடம் வேண்டி நின்றார்.

மனிதன் செல்வத்திற்கு அடிமையாகக் கூடாது. அதற்கு எஜமானனாக ஆக வேண்டும். இப்பிரபஞ்ச மாயையில்



சிக்காதவர்கள் செல்வந்தராக இருந்த போதினும் கூட பெரும் பெரும் தொழிலை புரிந்த போதினும் அவர்களை இப்புறச் செல்வம் மாற்றி விடாது என்பதே சரித்திரப் பூர்வமான இச்சம்பவத்திலிருந்து நாம் பெறும் படிப்பினையாகும்.

எனவே, இவ்வுலகில் பிறக்கிற மனிதன் நிர்வாணியாகப் பிறக்கிறான். இவ்வுலகை விட்டுச் செல்லும் போது சில முழ துணிகளை கட்டிக் கொண்டு புதை குழிக்குள் செல்கிறான். அவன் தேடிய சொத்துக்கள் யாவும் இவ்வுலகிலேயே நின்று விடுகின்றன. அவனுடைய செயலைப் பொறுத்த பாவ புண்ணியங்கள் மட்டுமே அவனுடன் செல்கின்றன. எனவே, இயன்ற வரை நன்மையைச் சம்பாதித்துக் கொண்டு மறு உலகை எய்துவதே அறிவாளியின் செயல் اَلْكَيِّسُ مَنْ دَانَ نَفْسَهُ وَعَمِلَ لِمَا بَعْدَ الْمَوْتِ **தன் அகத்தை அடக்கி மரணத்திற்குப் பின் உள்ளதற்காக செயல் புரிபவன்தான் புத்திசாலி** என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதை நாம் நினைவு கூற வேண்டும்.

கருவிலேயே எழுதப்படும் நான்கு காரியங்களில் மூன்றாவது அக்குழந்தையின் செயல்கள். ஒரு மனிதன் அல்லது மனுஷி உலகில் என்னென்ன காரியங்களைச் செய்வார் என்பதை கருவிலிருக்கையில் தாயோ தந்தையோ இதர சுற்றத்தார்களோ அறிய முடியாது. அந்தக் கரு குழந்தையாகப் பிறந்த பிறகு வாலிபப் பருவத்திலோ முதுமையிலோ வயோதிகப் பருவத்திலோ தெரிந்து கொள்வதற்கில்லை. செய்து முடிந்த பின்னர்தான் ஓரளவு உணர முடியும். அக்காரியத்தின் விளைவுகளைப் பரிபூரணமாக அறிவதற்கு மனிதனில் ஆற்றல் இல்லை.

உதாரணமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்பற்றி சற்று கவனிப்போம். அவர்கள் கருவிலிருக்கையிலேயே தந்தை மரணித்தார். அப்பொழுது தந்தையின் பந்துக்கள், இது அதிர்ஷ்டமில்லாத குழந்தை என்று கருதி பலவாறாகப் பேசி இருப்பர். பந்துக்கள் பேச்சை செவியுற்ற அன்னை ஆமீனா நமது தலைவிதி. நமது குழந்தையைப் பற்றி பலவாறாகப் பேசுவதை செவியுறும் படியாக நமது நிலைமை இருக்கிறது என்றும் மனதினுள் வருந்திக் கொண்டே இருந்திருப்பார். வெளியில் எவரையும் தடுத்துப் பேச முடியாமல் வாயடைத்துப் போயிருந்திருக்கலாம். மேலும், இது பெண்ணா ஆணா என்ற சந்தேகம் ஆரம்ப கர்ப்பத்தில் இருந்திருக்கும். ஆறு ஏழு மாத கர்ப்பத்தில் இது ஆணாக இருக்கலாம் என்று நாம் நாட்டு வழக்கத்தில் கூறப்படுகிற அறிகுறிகளிலிருந்து யூகித்தும் இருக்கலாம். என்றாலும், தன் வயிற்றிலிருந்து வெளி வரப்போகிற பாலகன் உலகில் எத்தனை வருடம் வாழ்வார்? என்னென்ன காரியங்களைச் செய்வார். அவர் ஆற்றும் பணிகளின் பலன் எப்படி இருக்கும் என்பதை அவர் கிஞ்சிற்றும் உணரவோ யூகிக்கவோ இயலாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிராயத்தை அடைந்து நபிப் பதவியை அடைவார். ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்ற வானவர் வஹி கொண்டு வருவார். உலகில் ஏகதெய்வ வணக்கம் தம் புதல்வர் மூலம் நிலை நிறுத்தப்படும். உலகம் முடிவடையும் வரையில் தன் சேயின் உழைப்பு நிலை நிற்கும். எண்ண முடியாத அளவில் கோடிக்கணக்கான மக்கள் தன் மகனால் இம்மையிலும் மறுமையிலும் பயன் பெறுவர். உலக மக்களின் இருதயங்களில்



என்றென்றும் நிலைத்து நிற்பார் என்று நினைத்திருக்கவும் முடியாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூட இவ்விபரங்களை நன்கு புரிந்திருக்க முடியாது. நபிப்பதவியை அடைந்த போது கூட, தாம் நபியென்பதை உணராமல் இருந்தார்கள். வரக்கத்துப்னு நவ்ஃபல் என்பவர் உம்மிடத்தில் வந்தவர் மூஸாவிடம் வந்த தெய்வ தூதராவார். நீங்கள் நபிதான். நீங்கள் சன்மார்க்கத்தை பிரசங்கிக்கும் போது உங்கள் எதிரிகள் இந்த ஊரைவிட்டு உங்களை வெளியேற்றுவர். நான் வயோதிகனாக இருக்கிறேன். அக்காலத்தில் நான் வாலிபனாக இருந்திக்க வேண்டுமே என்று தம்முடைய நிலையைக் குறித்து அங்கலாய்த்துக் கொண்டார்.

முந்தைய இரவில் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தம்மிடம் வந்து தம்மை மும்முறை ஆலிங்கனம் செய்தது பற்றி தம்முடைய மனத்தினுள்ளிருந்த குழப்பம் இவருடைய விளக்கத்தால் அகன்றது. தம்மை இறைவன் தன்னுடைய தூதராக நியமித்திருக்கிறான் என்பதை உணர்ந்து திருப்தியடைந்தார்கள். ஆயினும், சன்மார்க்கப் பிரசாரம் செய்யும் போது அநேகரின் பகையையும் விரோதத்தையும் அடைந்து பிறந்த ஊரான திருமக்காவைத் துறந்து வெளியூரில் குடியேற வேண்டியதேற்படும் என்பதைக் குறித்து ஆச்சரியம் மேலிட்டு, என்னை அவர்கள் வெளியேற்றுவரோ? என்று வினவினார்கள். அதற்கவர் இந்த மாதிரி காரியத்தைச் செய்தவர் ஒவ்வொருவரும் தொல்லைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர். தங்களுக்கும் அது வரத்தான் செய்யும் என்று பதிலளித்தார்.

அக்காலத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமக்காவில் முடிசூடா மன்னராக மக்களால் போற்றப்பட்டார்கள். தம்மீது பொது மக்களுக்கு அப்பொழுதிருந்த மரியாதையையும், அவர்கள் மீது தங்களுக்கிருந்த செல்வாக்கையும் கருதி என்னை அவர்கள் வெளியேற்றுவரோ என்ற கேள்வியின் மூலம் தங்களின் ஆச்சரியத்தை வெளியிட்டார்கள். ஆம் நிச்சயம் வெளியேற்றுவர் என்று வரக்கத்திப்னு நவ்ஃபல் உறுதியாக கூறிய பதிலின் மூலம் எதிர்காலத்தில் தங்களுக்கு சன்மார்க்கப் பிரச்சாரத்தால் பல தொல்லைகள் உண்டாகக் கூடும் என்பதை உணர்ந்து அவற்றை சகித்துக் கொள்ளும் மனோ திடத்தையும் கொண்டார்கள். எனவே மனிதன் தன்னுடைய வாழ்நாளில் எதைச் செய்வான் என்பதை முற்கூட்டியே பூரணமாகத் தெரிந்து கொள்ள முடியாது. அவனுடைய மறைவுக்குப் பின்னர் ஓரளவுதான் ஏனைய மக்களால் பிரத்தியட்சமாக அச்செய்கையின் பலனைப் பார்க்க முடியும்.

இதனைக் குறித்து இறைவன் தன்னுடைய திருமறையில்

إِنَّ اللَّهَ عِندَهُ عِلْمُ السَّاعَةِ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِي الْأَرْحَامِ وَمَا تَدْرِي نَفْسٌ
مَاذَا تَكْسِبُ غَدًا وَمَا تَدْرِي بِأَيِّ أَرْضٍ تَمُوتُ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ.

நிச்சயமாக அல்லாஹ் இடத்தில் தான் இறுதி நாளுக்குரிய அறிவு இருக்கிறது. மழையை அவன் பொழிவிக்கிறான். கர்ப்பங்களில் உள்ளதை அவன் அறிகிறான். எந்த உயிருள்ள எதுவும் நாளை செய்யவிருப்பதை அறியாது. உயிருள்ள எதுவும் எந்த இடத்தில் மரணிக்கும் என்பதையும் அறியாது. நிச்சயமாக அல்லாஹ் முற்றும் உணர்ந்தவன் முற்றும் அறிந்தவன் (31:34) என்று



கூறியுள்ளதற்கேற்ப இவ்வைந்து காரியங்களையும் மனிதர் எவரும் முன்னதாகவே முற்றும் புரிந்து கொள்ள முடியாது. எனவே, சன்மார்க்கத்தில் சொல்லப்பட்ட ஏவல் விலக்கல்களை கடைப்பிடித்து நடந்து கொள்வதே மனிதத் தன்மையாகும்.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்ட நான்காவது காரியம் கருவில் உதித்த சிசு உலகில் வாழ்ந்து மறையும் போது மறு உலகப் பேற்றை அடைய தகுதியுள்ளதா? இல்லையா? என்பதாகும். இதனைத்தான் அதிர்ஷ்டவானா? துர்அதிர்ஷ்ட வானா? என்ற வார்த்தைகள் விளக்குகின்றன. இவ்வுலகில் வாழ்கிற எவரும் தன்னுடைய அந்தியம் எப்படி இருக்கும் என்பதை உணர முடியாது. இவ்வுலகை விட்டு மறைந்தவர் கூட அதனை பூரணமாக உணர்வதற்கில்லை. விசாரணை முடிந்து இறைவனின் தீர்ப்புக்குப் பிறகு தான் உணர முடியும். அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்கும் பாவம் ஒன்றைத் தவிர்த்து மற்றைய பாவங்களை அவன் தன்னுடைய நோக்கம் போல் மன்னிப்பான். பாவம் செய்யாதவர்? தவறிழைக்காதவர் இவ்வுலகில் எவரும் இல்லை. இப்பாவங்கள் யாவும் தரத்தில் ஒன்றுபோலில்லை. சிறுபாவங்கள் பெரும் பாவங்கள் என்று இரண்டு வகை இருக்கின்றன. இவ்வுலகில் நாம் செய்கின்ற தான தர்மங்கள், வணக்கங்கள், பொது மக்கள் சேவை போன்ற நற்காரியங்களால் சிறுபாவங்கள் பெருமளவில் மன்னிக்கப் படுகின்றன. பெரும்பாவங்கள் நாம் மன்னிப்புக் கேட்பதின் மூலம் மன்னிக்கப்படுகின்றன.

நம்மைப் போன்ற அடியார்களுக்கு, நாம் செய்துள்ள தீங்குகள் மோசடிகள் கடன் போன்ற சக அடியார்களின் உரிமைகளை அவற்றிற்குரியவர்கள் மன்னித்தால் அவற்றையும்

கூட மன்னித்து விடுகிறான். காலமெல்லாம் இணைவைத்து வணங்கியவர்கள் மரணிப்பதற்கு முன்னர் தங்களின் தவறுகளையும் குற்றங்களையும் உணர்ந்து கவிரக்கம் கொண்டு தவ்பா இஸ்திஃபார் செய்து இஸ்லாமைத் தழுவி பணிந்து விட்டால் அவர்களையும் கூட அவன் மன்னித் தருள்கிறான். எனவே, எவரையும் நாம் பெயர் கூறி இன்னார் நரகவாதி மறு உலகப் பேரற்றவர் என்று உறுதியாகக் கூற முடியாது. இந்த நிலைமையில் யார் மறு உலகப் பேற்றை அடைந்தவர், அதனை அடையாத துர் அதிர்ஷ்டவான் யார் என்று எவருக்கும் நிச்சயமாகத் தெரியாது. எனவே, மனிதராகிய நாம் அல்லாஹ்வின் கட்டளைப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவனுடைய செய்கையில் ஆராய்ச்சி செய்து குறை கூறுவதற்கு நமக்கு உரிமையில்லை. ஏனெனில் நாம் அவனால் படைக்கப்பட்டவர்கள். நமது உயிர், நமது உடல், நமது உடமை யாவும் நாம் கேட்காமல் இருக்கும் போதே நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டவை. நம்முடையது என்று இப்பொழுது நாம் கூறுகிற சகலமும் அல்லாஹ்வுக்குத் தான் சொந்தம். அவன் நமக்கு கொடுத்ததை அவனுடைய விருப்பப்படி நாம் உபயோகித்தால் தான் அவனுடைய திருப்தியை அடைய முடியும். அதனை விடுத்து நம் விருப்பம் போல் நாம் உபயோகித்தால் அதனால் விளையும் பயனை நாம் அனுபவிக்க வேண்டியதே. தெய்வ நம்பிக்கையற்றவர்கள் இவ்வுண்மையை உணர்ந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள மனமின்றி தங்கள் செயல்கள்தான் சரியானவை என்று விதண்டாவாதம் புரிகின்றனர். கல்வியறிவு அற்ற சில அப்பாவிகள் இவ்விதண்டாவாதங்களை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், பெரும்பாலான மக்கள் இந்த போலிக் கருத்துகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.



இந்த இடத்தில் சரித்திர சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட்டு விட்டு இந்த ஹதீஸுக்குரிய விளக்கத்தைப் பூர்த்தி செய்வோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமக்காவை ஹிஜ்ரத் செய்து திருமதீனாவில் குடியேறிய போது அங்கேயும் அமைதியாக வாழ இடம் கொடுக்கலாகாது என்று உறுதி பூண்டு சன்மார்க்க விரோதிகள் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு போருக்கு வந்தனர். இதனைக் குறித்த தகவல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எட்டிய போது திருமக்காவை ஹிஜ்ரத் செய்து குடியேறிய முஸ்லிம் களாகிய முஹாஜிர்களையும், இவர்களை வரவேற்று உபசரித்த மதீனா வாழ் முஸ்லிம்களாகிய அன்ஸார்களையும் ஒன்று கூட்டி கலந்து ஆலோசனை செய்தார்கள். முஹாஜிர்கள் பகைவர்களை எதிர்த்துப் போர் செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறினர். அன்சார்கள் மௌனமாக இருந்தனர். முஹாஜிர்களின் கருத்துக் களை செவியுறாதவர்கள் போல் அன்சார்கள் பக்கம் திரும்பி மீண்டும் மீண்டும் ஆலோசனை கேட்டார்கள். அப்பொழுது அன்சார்களின் தலைவர்களில் இருவர் அன்சார்களின் சார்பாக பேசினர்.

யா ரசூலல்லாஹ் எங்களின் முஹாஜிர் சகோதரர்கள் வெளியிட்ட கருத்தை செவியுற்றும் அதனைச் செவியுறாதவர்கள் போல் எங்கள் பக்கம் திரும்பி மீண்டும் மீண்டும் கேட்கின்றீர்கள். அக்பா கணவாயில் தங்களுக்கும் எங்களுக்கும் நடந்த ஒப்பந்தத்தை நினைத்துக் கொண்டா எங்களை வினவுகிறீர்கள். தங்களை நபி என்று ஏற்று நாங்கள் இஸ்லாமைத் தழுவிய உடனேயே அந்த உடன்படிக்கை காலாவதியாகி விட்டது.

"கடலில் குதிக்குமாறு எங்களுக்கு தாங்கள் கட்டளையிட்டால் உடனே அதை நாங்கள் நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம்" என்று ஒருவரும், "மூஸாவே! நீரும் உமது ரப்பும் சென்று போர் புரியுங்கள், நாங்கள் இங்கேயே அமர்ந்திருக்கிறோம் என்று பனூ இஸ்ராயீல்கள் கூறியதுபோல் நாங்கள் சொல்ல மாட்டோம். அல்லாஹ்வின் பெயரால் போருக்குப் புறப்படுங்கள். தங்களின் முன்னும், பின்னும், வலப்புறமும் இடப்புறமும் நின்று நாங்கள் போரிடுவோம். வாளின் நிழலில் வளர்ந்தவர்கள் நாங்கள்" என்றுரைத்தார் மற்றொருவர். எனவே, இஸ்லாமைத் தழுவி அல்லாஹ்வையும் ரசூலையும் விசுவாசம் கொண்ட பின்னர் சன்மார்க்க கட்டளைக்கு மாற்றுக் கருத்து தெரிவிக்க எந்த உண்மை முஸ்லிமும் துணிவு கொள்ளார்.



## 5. பித்அத்துக்களைத் தவிர்ப்பீர்

عن أم المؤمنين ام عبد الله عائشة رضي الله تعالى عنها قالت: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هذَا مَا لَيْسَ مِنْهُ فَهُوَ رَدٌّ. رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

"நம்முடைய இந்தக் காரியத்தில் அதில் இல்லாததை (புதிதாக) எவர் புகுத்துகிறாரோ அது தள்ளுபடி ரத்து செய்யப்பட்டதாகும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- உம்முல் மூஃமினீன் உம்மு அப்தில்லாஹ் ஆயிஷா ரலியல்லாஹு தஆலா அன்ஹா

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

நம்முடைய கட்டளை இல்லாத ஒரு காரியத்தை எவர் செய்தாலும் அது ரத்துச் செய்யப்பட்டது என்றும் ஒரு ரிவாயத்து முஸ்லிம் என்ற நூலில் இருக்கிறது.

இந்த ஹதீஸை அறிவிப்பவர் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் இளைய மகளான அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் வயிற்றிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு குழந்தை பிறக்கவுமில்லை. அப்துல்லாஹ் என்று பெயரிடவுமில்லை. குறைமாதக் கர்ப்பம் ஒன்று விழுந்ததாக ஊர்ஜிதமில்லாத ஒரு தகவல் இருக்கிறது. இதனை மற்றவர்கள் அங்கீகரிக்கவில்லை.

ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மூத்த புதல்வியான அஸ்மா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் புதல்வர்களான அப்துல்லா ஹிப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு உர்வத்துப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகிய இருவரையும் அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்தான் வளர்த்தார்கள். இவ்விருவரில் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்தான் மூத்தவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து வெளியேறிய பின்னர் முஹாஜிர்களுக்கு பிறந்த குழந்தைகளில் இவர்தான் முதலாமவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமதீனாவிற்கு பக்கத்திலுள்ள குபாவில் தங்கி இருக்கையில் தான் இக்குழந்தை பிறந்தது. இச்செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் எட்டியபோது முதல் குழந்தை ஆண் என்ற சந்தோஷத்தால் அங்கு குழுமி இருந்த முஹாஜிர்கள் தக்பீர் முழங்கினர். பின்னர் குழந்தை அங்கு கொண்டு வரப்பட்ட போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குழந்தையை வாங்கி மடியில் வைத்து பேரீச்சம் பழத்தை மென்று அதன் நீரை குழந்தைக்கு ஊட்டி அப்துல்லாஹ் என்று பெயர் வைத்தார்கள்.

அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தமக்கு ஒரு குன்னியத்துப் பெயர் வைக்குமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கேட்டுக் கொண்டபோது இக்குழந்தை அன்னை ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சிறிய தாயாக இருப்பதைக் கருதி உம்மு அப்தில்லாஹ் என்று குன்னியத்துப் பெயரிட்டார்கள். அக்காலந் தொடுத்து இன்று வரை அன்னை ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு இப்பெயர் கூறப்படுகிறது. இன்ஷா அல்லாஹு தஆலா இறுதிநாள் வரை இது கூறப்பட்டுக் கொண்டிருக்கும்.



ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தவ்ராத் வேதம் அருளப்பட்டது. அவர்கள் காட்டிய வழி முறைகளுக்கு ஷரீஅத்தே மூஸவீ என்று பெயர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இஞ்ஜீல் வேதம் அருளப் பட்டது. அவர்கள் காட்டிய வழிமுறைக்கு ஷரீஅத்தே ஈஸவீ என்று பெயர். இவ்விருவரும் மறைந்த பின்னர் இவர்களின் உம்மத்தில் (யூதர்களிலும் கிறிஸ்துவர்களிலும்) தோன்றிய மதத்தலைவர்கள் இவர்கள் காட்டிய மூஸவீ, ஈஸவீ ஷரீஅத்துகளுக்கு புது முறையில் விளக்கங்கள் கூறி, புதிய விஷயங்களையும் கொள்கைகளையும் கிரியைகளையும் புகுத்தி அவ்விரு ஷரீஅத்துகளும் போதித்தவை யாவை என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள இயலாத விதமாக மறைத்து விட்டனர். இன்றைய உலகில் போதிக்கப்படுகிற யூத கிறிஸ்துவ மதங்கள் அவ்விருவரும் கொணர்ந்து உபதேசித்த மூஸவீ ஈஸவீ அசல் ஷரீஅத்துகளல்ல. அவற்றைப் புரிந்து கொள்ள எவரேனும் முயன்றால் அவர் அவற்றைக் கண்டு பிடிக்கவும் இயலாது.

இவ்வாறான தவறு பிற்காலத்தில் ஏற்படலாகாது என்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஹதீஸில் கண்டவாறு கூறி குழப்பவாதிகளுக்கு இடமில்லாமற் செய்து விட்டார்கள்.

திருமக்காவில் யூத கிறிஸ்துவர்கள் இல்லை. கிறிஸ்தவ உலகிலிருந்து அடிமையாக வந்த இரண்டொருவர் இங்குள்ள

பிரபுக்களின் அடிமையாக இருந்து அவர்களிடம் வேலை செய்து கொண்டிருந்தனர். வியாபார அலுவலாக யூத கிறிஸ்துவர்கள் இங்கு அபூர்வமாக வரப்போக இருந்தனர். இங்கு நிரந்தரமாக வாழ்ந்து வந்தவர்கள் யாவரும் முஷ்ரிக்குகளும் (இணைவைத்து வணங்குபவர்களும்) இணைவைத்து வணங்குவதை வெறுத்து ஒதுங்கி இருந்த சிலரும்தான். இவர்களுக்கு ஸாபீகள் என்று பெயர். இவர்கள் வணக்கம் சம்பந்தப்பட்ட மட்டில் ஒதுங்கி இருந்தனரேயன்றி கொள்வினை கொடுப்பினை, லேவா தேவி வர்த்தகம் போன்ற காரியங்களில் முஷ்ரிக்குகளுடன் ஒன்றித்து வாழ்ந்தனர்.

திருமதீனாவின் நிலை வேறுவிதமாக இருந்தது. அங்குள்ள பூர்வீக குடிமக்களாகிய அன்ஸார்கள் முஷ்ரிக்குகளாகவும் விவசாயிகளாகவும் இருந்தனர். யூதர்கள் பெருவாரியாக வாழ்ந்தது மட்டுமின்றி படிக்காதவர்களாகவும் வியாபாரிகளாகவும் வட்டித்தொழில் செய்பவர்களாகவும் இருந்தனர். கிறிஸ்தவர்கள் சிறுபான்மை யினராக இருந்ததுடன் மதிக்கத்தக்க அளவிற்கு செல்வந்தராகவோ பெருந்தொழில் அதிபர்களாகவோ வர்த்தகப் பிரமுகர்களாகவோ இருக்கவில்லை. முற்காலத்து ஷரீஅத்துகளுக்கு தங்கள் மனம்போல் விளக்கங்களைக் கூறியும் அவைகள் காட்டிய வணக்க முறைகளை மாற்றியும் தங்கள் நோக்கம் போல் மதத்தை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிற வர்க்கங்களை இவர்கள் சேர்ந்தவர்கள் என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உணர்ந்திருந்ததால், இவர்கள் முஸ்லிம்களுக்கு தர்க்க வாதங்களைக் கற்றுக் கொடுத்து இஸ்லாம் மார்க்கத்தையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டிய வழிமுறைகளாகிய முஹம்மதிய ஷரீஅத்தையும் கெடுக்க முனைவர் என்பதை உணர்ந்து இந்த



ஹதீஸின்படி புதிய விஷயங்களை எவர் புகுத்தினாலும் இஸ்லாம் மார்க்கத்திலும் முஹம்மதிய்ய ஷரீஅத்திலும் அவை செல்லா என்பதை முஸ்லிம்களுக்கு உணர்த்தினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் முஷ்ரிக்குகளுக்கு தீய போதனைகளைக் கூறி உஹத், அகழ் யுத்தத்தை தோற்றுவித்தவர்கள் யூதர்கள்தாம். இவர்களுடைய அட்டூழியங்களை ஒடுக்க பனூ குறைளா, பனூ கைன்காஃ என்ற யூத வர்க்கங்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போரிட்டு அவர்களைத் தண்டித்ததுடன் திருமதீனாவை விட்டு நாடு கடத்தினார்கள். கடைசி காலத்தில் أَخْرِجُوا الْيَهُودَ وَالنَّصَارَى مِنْ جَزِيرَةِ الْعَرَبِ **யூத கிறிஸ்துவர்களை அரப் தீபகற்பத்திலிருந்து வெளியேற்றி விடுங்கள்** என்று கட்டளையிட்டார்கள். அவர்களுடைய இக்கட்டளை ஹளரத் உமர்ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கலீஃபாவாக இருந்த காலத்தில் செயல்படுத்தப்பட்டது. எனவே, அடிமைகளாய் இருந்த ஒரு சிலரைத் தவிர்த்து மற்றைய யூத கிறிஸ்துவர்கள் யாவரும் அரபு தீபகற்பத்தை விட்டு முற்றிலும் வெளியேற்றப்பட்டு ஷாம் தேசத்தில் குடியேற்றப்பட்டனர். என்றாலும் வர்த்தகம் போன்ற அலுவல்கள் காரணமாக அவர்கள் மக்கா மதீனா போன்ற நகரங்களுக்கும் இதர ஊர்களுக்கும் அவர்கள் வரப்போக கட்டுப்பாடு இல்லை. இவ்வாறெல்லாம் செய்தும் கூட அவர்களின் பகைமையோ குறும்புகளோ அடியுடன் நிற்கவில்லை.

பகிரங்கமாக ஆயுதமேந்தி போர் செய்வதில் அவர்கள் வெற்றி காண முடியவில்லை என்பதை உணர்ந்த பின்னர், இஸ்லாமைத் தழுவுவதாகக் கூறி நயவஞ்சகமான முறையில் இஸ்லாமைத் தழுவி அரபு தீப கற்பத்தினுள் மீண்டும் குடியேறினர்.

முஸ்லிமாக இருப்பவரை தடை செய்ய சட்டமில்லாததால் அவர்கள் மக்கா மதீனா போன்ற ஊர்களில் நிரந்தரமாக வாழவும் சன்மார்க்கத்தை கற்றுக் கொள்ளவும் கற்றுக் கொடுக்கவும் தடை விதிக்கப்படவில்லை. நயவஞ்சகமாக இஸ்லாமைத் தழுவியவர்கள் என்பதை இஸ்லாமிய அரசாங்கம் அறிந்திருந்தாலும் ஆதாரப் பூர்வமான ருஜு இல்லாததால் சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. என்றாலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக சில செய்திகளை இட்டுக்கட்டி முஸ்லிம் பாமரர்களிடம் உலாவ விட்டனர். இதனை அறிந்த ஸஹாபிகளும் தாபிஈன்களிலுள்ள அறிஞர்களும் ஹதீஸ்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஸனது (ஆதாரம்)கள் தேவை. அந்த ஆதாரங்களுக்கு விளக்கங்கள் தேவை என்பன போன்ற சில விதிகளை ஏற்படுத்தி பொய் ஹதீஸ்கள் இவை, ஆதாரமற்றவை இவை என்று அறிவித்து பல்லாயிரக்கணக்கான இட்டுக் கட்டுகளை ஹதீஸ்கள் என்ற பட்டியலிலிருந்து நீக்கியதுடன், இஸ்லாமிய சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படத் தகுந்த ஹதீஸ்களுக்கு இன்னின்ன விதமான அம்சங்கள் இருக்க வேண்டும் என்ற விதிகளையும் ஏற்படுத்தினர். இதன் பலனாக உஸூல் ஹதீஸ் என்ற தனிப் பெருங்கலை உருவாயிற்று. இது சம்பந்தமான விவரங்களை எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட **தஜ்ரீதுல் ஜாமிஇஸ் ஸஹீஹில் புகாரி** எனும் நூலின் ஆரம்பத்தில் காணலாம்.

ஹதீஸ்களில் பிரவேசித்து இஸ்லாமைக் கெடுக்க எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வியுறவே தஃப்ஸீர் என்ற பெயரில் திருக்குர்ஆன் விரிவுரையில் விளையாடத் தொடங்கினர். திருக்குர்ஆனுக்கு ஹதீஸ் ஆதாரமில்லாமல் தன்னுடைய சொந்த



யுக்தியால் விரிவுரை செய்யலாகாது என்ற சட்டத்தின் மூலம் இந்த விளையாட்டுக்கும் தடை வந்து தோல்வியடைந்தது. பின்னர் போர் வீரர்களாக இஸ்லாமிய படையில் சேர்ந்தனர். முஸ்லிம் அல்லாதார் ராணுவ சேவை செய்ய வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் ராணுவ வரி (ஜிஸ்யா வரி) கொடுத்தால் போதும் என்ற விதியை ஏற்படுத்தி கிறிஸ்துவர்களும் யூதரும் மஜூஸியரும் உள்பட முஸ்லிம் அல்லாதார் ஒதுக்கி வைக்கப்பட்டனர். வெளித் தோற்றத்தில் தொழுகை நோன்பு போன்ற இஸ்லாமிய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற நயவஞ்சக கிறிஸ்துவர்களை ராணுவத்திலிருந்து ஒதுக்கி வைக்க சட்டமில்லாததால் ராணுவத்தினுள் அவர்கள் ஊடுருவி பல விதத்தாலும் முஸ்லிம்களுக்கு ஊறு விளைவித்தனர். இதன் பலனாக ஹளரத் முஆவியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹளரத் அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகிய இருவருக்குமிடையில் போராட்டங்கள் ஏற்பட்டு இரு கட்சிகளிலும் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் உயிரிழந்தனர். அப்புறம் கர்பலா சம்பவம் அதனைத் தொடர்ந்து பல போராட்டங்கள் உண்டாகி அரசியல் என்ற பெயரால் அநேக கட்சிகள் உண்டாயின.

கல்வி அறிவற்றவர்களும் எழுதப் படிக்காத உம்மி களுமாகிய அரபியரை யூதரும் கிறிஸ்துவரும் தங்களுடைய அடிமைகள் போல் பாவித்து ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூலம் போதிக்கப்பட்ட சுத்தமான இஸ்லாமை அரபியர்கள் தழுவியதன் மூலம் மேன் மக்களாகி தங்கள் நாட்டிலிருந்து யூத கிறிஸ்துவர்களை வெளியேற்றி அவர்களின் ஆதிக்கத்தை ஒழித்ததை பதினான்கு நூற்றாண்டுகளாகியும்

அவ்வர்க்கத்தார் மறக்காமல் தங்கள் ஆதிக்கத்தை மீண்டும் நிலை நாட்ட கிட்டத்தட்ட பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவ்வுலகிலிருந்து ஒழிந்த யூத அரசாங்கத்தை முற்றிலும் அரபியரைக் கொண்ட ஷாம் தேசத்தில் இஸ்ரேல் என்ற பெயரால் மேனாட்டினர் தோற்றுவித்து அதனை ஸ்திரம் செய்வதற்கு முழு மூச்சாக திரண்டிருக்கின்றனர். இதனை நேர்முகமாகச் செய்வது மட்டும் போதாதென்று உலகில் பரவி வாழ்கிற முஸ்லிம் நாடுகளுக்குள் கட்சி பிளவுகளையும் கலகங்களையும் மூட்டிவிட்டு அந்நாடுகளின் பலத்தை சிதறச் செய்து கொண்டிருக்கின்றனர். இது அரசியல் பெயரால் செய்யும் சூழ்ச்சி.

கல்வி என்ற பெயரால் முஸ்லிம்களை பின்னுக்குத்தள்ள மதம் வேறு; அரசியல் வேறு என்ற ஒரு கொள்கையை புதிதாகத் தோற்றுவித்து முஸ்லிம் நாடுகளிலிருந்த இஸ்லாமிய அரசாங் கங்களை லோகாதய சர்க்கார் என்ற பெயரால் அரசாங்கங்களை அமைக்கச் செய்து நாடெங்கும் குழப்பத்தை உண்டு பண்ணி இருக்கின்றனர். மெய்யான கிறிஸ்துவத்திற்கு ஈடுகொடுக்க இயலாமல் கிறிஸ்துவமதத்தை நயவஞ்சகமாகத் தழுவி கிறிஸ்துவ மதத்தை அதன் பரிசுத்தத் தன்மையிலிருந்து மாற்றிய சுயநலங்கொண்ட யூதரும் இன்று கிறிஸ்துவமதம் என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு அசல் கிறிஸ்துவமதத்தின் உயிரைக் குடித்து லோகாதாய சர்க்கார் என்ற பெயரால் தங்கள் நாட்டில் ஆதிக்கம் செலுத்துவது போல, முஸ்லிம் நாடு, இஸ்லாமிய ராஜ்யம் என்ற பெயரை வைத்துக் கொண்டு இஸ்லாமின் அசல் கொள்கைக்கு முற்றிலும் மாறான லோகாதய அரசுகளை இஸ்லாமிய நாடுகளில் புகுத்தி ஒரே தலைமையின் கீழ் இயங்கிய கிலாஃபத் ஆட்சியை உடைத்து நாட்டுக்கு ஒரு அரசாங்கம்



மொழிவாரி அரசாங்கம் என்ற உணர்வைத் தூண்டி இஸ்லாமிய உலகை சிதற அடித்து அவைகள் ஒன்றை ஒன்று எதிர்த்துப் போர் செய்யுமாறு அமைத்திருக்கின்றனர்.

லோகாதய அரசு மதத்திற்கு ஆதிக்கம் கொடுக்காது, நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்களுக்கும் நாட்டை ஆள சம சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கூறி இஸ்லாத்தை அரசியல் பெயரால் அழித்துக் கொண்டிருக்கின்றனர். இன்றைய மேனாட்டினார் கூறுகிற ஜனநாயகம் கூட இஸ்லாமுக்கு விரோதமானது தான். எவ்வாறெனில், ஒருவருக்குச் சொந்தமாக இல்லாத ஒன்றை அவர் ஆட்சி செய்வது முறையல்ல. இந்த உலகம் மனிதனுடைய சொந்த முயற்சியால் உண்டு பண்ணப்படவுமில்லை. படைக்கப்படவு மில்லை. இந்த உலகையும் இதிலுள்ள யாவற்றையும் படைத்தவன் அல்லாஹ் ஒருவன் தான். அவனால் படைக்கப்பட்ட இந்த உலகில் வாழ்கிற மனிதன் அவனுடைய கட்டளைப்படிதான் இந்த உலகில் வாழ வேண்டுமே யன்றி தன் மனப்போக்கில் வாழ்வது முறையல்ல. ஆதலின், இந்த நாட்டில் பிறந்தோம்; இதனை ஆள எங்களுக்குத்தான் உரிமை இருக்கிறது என்ற சித்தாந்தத்தை மேனாட்டினார் தோற்றுவித்து, அதனை அடிப்படையாக வைத்து பெரும்பான்மையினரின் வாக்குப்படி சட்டம் இயற்றுகின்றனர். இது படைத்தவனின் கட்டளைக்கு மாறானது. இவ்வுலகமும் இதிலுள்ள யாவும் இறைவனால் படைக்கப்பட்டவை. எனவே, ஆட்சிக்குரியவன் அவனே. அவனுடைய விருப்பத்திற்கிணங்க நாங்கள் வாழ்கிற நாட்டை நன்கு பரிபாலிப்போம். அவனுடைய விருப்பத்திற்கு எதிரான சட்டங்களை இயற்ற மாட்டோம் என்ற அரசியல் கொள்கையை நிறைவேற்றி அதற்கியைந்தவாறு

சட்டங்களை இயற்றி நாட்டை நிர்வகித்தால், நாட்டில் தெய்வ பக்தி வளரும். நாட்டு மக்களிடம் நல்ல பண்பாடுகள் வளர்ந்தோங்கும் இதற்கு மாறான முறையில் லோகாதய அரசுகளை அமைத்து ஜனநாயகம் என்ற பெயரால் சட்டங்களை இயற்றி ஆட்சி புரிவதன் பலனாக இன்றைய உலகில் மதபக்தி குன்றி நல்லொழுக்கம் நலிந்து நாடெங்கும் அமைதியின்மை தோன்றியுள்ளது. யூத கிறிஸ்துவ முஸ்லிம்கள் என்பதெல்லாம் அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அந்த நாட்டில் பெரும் பான்மையினராக வாழ்கின்றனர் என்பதையே குறிக்கின்றன. மெய்யான யூதர் வாழ்கின்றனர், மெய்யான கிறிஸ்துவர் வாழ்கின்றனர், மெய்யான முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதையோ சுத்தமான யூத கிறிஸ்துவ இஸ்லாமிய அரசாங்கங்கள் அந்த நாட்டை நிர்வகிக்கின்றன என்பதையோ குறிப்பனவன்று.

யூத கிறிஸ்துவர்கள் என்ற பெயர் தாங்கிகளான இஸ்லாமிய விரோதிகள் முஸ்லிம் என்று நடித்து ஹதீஸ் தஃப்ஸீர்களில் விளையாண்டதன் காரணமாகவும் இஸ்லாமிய ராணுவத்தில் படைவீரர்களாகவும் சேர்ந்து இஸ்லாமில் ஊடுறுவல் செய்து இஸ்லாமிய அரசாங்கத்தில் குழப்பங்களைத் தோற்றுவித்ததன் காரணமாகவும் முஸ்லிம் பொது மக்கள் பற்பல கட்சிகளாகப் பிரித்து விட்டனர். இதன் பலனாக முஸ்லிம் களுக்குள் ஷியா, காரிஜி, ராபிளி என்பன போன்ற பெயர்களால் முஸ்லிம் சமூகம் சிதறி தன்னுடைய வலிமையை இழந்து மேனாட்டினரின் சுயநலத்துக்கு அடிமைகளாகி தங்களின் மத அரசியல், பொருளாதார உரிமைகளைப் பறிகொடுத்து தவிக்கிறது. போதாததற்கு இக்காலத்தில் காதியானி, பஹாயி,



வஹ்ஹாபி, அஹ்லஹதீஸ், அஹ்லுல் குர்ஆன் என்றெல்லாம் பல கட்சிகள் புதிதாகத் தோன்றி இருக்கின்றன. இன்னும் எத்தனை தோன்றுமோ யார் அறிவர்?

عن عبد الله بن عمرو قَالَ: قَالَ رَسُوْلَ اللهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ لَيَأْتِيَنَّ عَلَى أُمَّتِيْ مَا أَتَى عَلَى بَنِيْ إِسْرَائِيْلَ حَذْوَ النَّعْلِ بِالنَّعْلِ حَتَّى إِنْ كَانَ مِنْهُمْ مَنْ أَتَى أُمَّهُ عَلَانِيَةً لَكَانَ فِيْ أُمَّتِيْ مَنْ يَصْنَعُ ذٰلِكَ وَ إِنَّ بَنِيْ إِسْرَائِيْلَ تَفَرَّقَتْ عَلَى ثِنْتَيْنِ وَسَبْعِيْنَ مِلَّةً وَتَفْتَرِقُ أُمَّتِيْ عَلَى ثَلَاثٍ وَسَبْعِيْنَ مِلَّةً كُلُّهُمْ فِي النَّارِ إِلَّا مِلَّةً وَاحِدَةً قَالُوْا: وَمَنْ هِيَ يَا رَسُوْلَ اللّٰهِ قَالَ: مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِيْ. رَوَاهُ التِّرْمِذِيْ.

**“பனூ இஸ்ராயீலுக்கு வந்தது போல எனது உம்மத்துக்கும் செருப்புக்குச் செருப்பு ஜோடியாக சரிசமமாக வரும். அவர்களில் பனூ இஸ்ராயீல்களில் ஒருவர் தன் தாயிடம் பகிரங்கமாக (உடலின்பம் கொள்ள) வருவாராயின், அதனைச் செய்ய என் உம்மத்திலும் ஒருவர் இருப்பார். பனூ இஸ்ராயீல்கள் எழுபத்து இரண்டு கூட்டங்களாகப் பிரிந்தனர். என்னுடைய உம்மத்தினர் எழுபத்து மூன்று கூட்டங்களாகப் பிரிவர். அவற்றில் ஒன்றைத் தவிர்த்து (மற்றைய) யாவரும் நரகவாதிகள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அப்பொழுது ஸஹாபிகள்) அல்லாஹ்வின் ரசூலே அந்த (ஒரு) கூட்டம் எது? என்று வினவினர். நானும் எனது ஸஹாபி (தோழர்) களும் எதிலிருக்கிறோமோ அதிலிருப்பவர்கள்” என்று பதிலளித்தார்கள்.** அறிவிப்பாளர்:- அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு அல் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா நூல்:-திர்மிதீ.

وَفِي رِوَايَةِ احمد وابي داود وعن معاوية بن ابي سفيان أنَّهُ قَامَ فِينَا
فَقَالَ: أَلاَ إِنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَامَ فِينَا فَقَالَ: أَلاَ إِنَّ
مَنْ قَبْلَكُمْ مِنْ أَهْلِ الْكِتَابِ افْتَرَقُوا عَلَى ثِنْتَيْنِ وَسَبْعِينَ مِلَّةً. وَ إِنَّ
هٰذِهِ الْمِلَّةَ سَتَفْتَرِقُ عَلَى ثَلاَثٍ وَسَبْعِينَ ثِنْتَانِ وَسَبْعُونَ فِي النَّارِ وَ
وَاحِدَةٌ فِي الْجَنَّةِ وَهِيَ الْجَمَاعَةُ. زاد ابن يحي وعمرو في حديثهما
وَإِنَّهُ سَيَخْرُجُ مِنْ أُمَّتِي أَقْوَامٌ تَجَارَى بِهِمْ تِلْكَ الْأَهْوَاءُ كَمَا
يَتَجَارَى الْكَلْبُ لِصَاحِبِهِ وَ قَالَ عمرو: اَلْكَلْبُ بِصَاحِبِهِ لاَ يَبْقَى
مِنْهُ عِرْقٌ وَلاَ مَفْصِلٌ إِلاَّ دَخَلَهُ.

"எழுபத்து இரண்டு நரகிலும் ஒன்று சுவர்க்கத்திலும் இருக்கும். அதுதான் அல்ஜமாஅத்து. இன்னும் என் உம்மத்தில் சீக்கிரத்தில் சில கூட்டத்தார் தோன்றுவர். (வெறி) நாய் அதனுடைய தோழரை ஒரு நரம்பையும் எலும்பையும் மிச்சம் வைக்காமல் புகுந்து அடிமைப்படுத்துவதைப் போல் (அவர்களை) அந்தப் பேராசைகள் அடிமைப்படுத்திவிடும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- முஆவியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- அஹ்மது, அபூதாவூது.

عن عبد الله بن عمر رضي الله تعالى عنهما قَالَ: أَنَّ رَسُولَ اللهِ
صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: إِنَّ اللهَ لاَ يَجْمَعُ أُمَّتِي أَوْ قَالَ أُمَّةَ مُحَمَّدٍ



صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى ضَلاَلَةٍ وَيَدُ اللهِ مَعَ الْجَمَاعَةِ وَمَنْ شَذَّ
شَذَّ إِلَى النَّارِ. رَوَاهُ التِّرْمِذِيُّ.

"என்னுடைய உம்மத்தை அல்லது முஹம்மதுடைய உம்மத்தை வழிகேட்டின் மீது அல்லாஹ் நிச்சயமாக ஒன்று சேர்க்க மாட்டான். அல்லாஹ்வின் உதவி ஜமாஅத்தின் (பெரும் கூட்டத்தார்) மீதிருக்கிறது. இன்னும் எவர் பிரிந்திடுகிறாரோ அவர் நரகில் பிரிந்திடுவார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:- அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா நூல்:- திர்மிதீ

"பெரும் கூட்டத்தைப் பின்தொடருங்கள், நிச்சயமாக எவர் (பெரும் கூட்டத்தை விட்டு) பிரிந்திருக்கிறாரோ அவர் நரகில் பிரிந்திடுவார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா.

நூல்:-இப்னுமாஜா, அனஸுடைய ஹதீஸிலிருந்து.

இம்மூன்று ஹதீஸ்களில் ஸிஹாஹ் ஸித்தா என்று புகழ் பெற்ற ஆறு சரியான ஹதீஸ் தொகுப்புகளைச் சேர்ந்த திர்மிதீ என்ற நூலில் முதல் இரண்டு ஹதீஸ்களும், கடைசி ஒரு ஹதீஸ் இப்னுமாஜா என்ற நூலிலும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த ஹதீஸ்களை அறிவிக்கிற அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அப்துல்லாஹிப்னு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்கள் ஸஹாபிகளில்

பிரபலமானவர்கள். இந்த ஹதீஸ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்புகளைச் சேர்ந்தவை என்று கருதப்படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் யூத கிறிஸ்துவர்களின் முயற்சி பலிக்கவில்லை. ஸஹாபிகள் காலத்தில் அவர்கள் நயவஞ்சகத்துடன் இஸ்லாமைத் தழுவி தங்கள் நடவடிக்கைகளை பொய்ச் செய்திகளை ஹதீஸ் என்ற பெயரால் பிறருக்கு சொல்லத் தொடங்கினர். சங்கைவான்களான ஸஹாபிகள் இவற்றைக் கண்டுபிடித்து நிராகரிக்கும் பணியில் ஈடுபட்டனர். கள்ள விசுவாசிகளான வேடதார புது முஸ்லிம்கள் பொய் செய்திகளை புனைந்து ஹதீஸ் என்ற பெயரில் வெளியிடுவது ஓரளவு மட்டுப்பட்டாலும் அடியுடன் நின்றுவிடவில்லை. இதனால் ஹதீஸ்களை சலித்து எடுக்கும் பணி ஸஹாபிகளுக்குப் பின்னர் தாபியீன்கள் தபஉ தாபியீன்கள் காலத்திலும் அதற்குப் பின்னரும் தொடர்ந்தன. இதனால் ஃபிக்ஹு மஸ்அலாக்கள் இஸ்லாமிய சட்டம் என்ற பெயரால் இயற்றப்பட்டு நூல் வடிவில் உருவாயின. இதன் பலனாக ஃபிக்ஹு, உஸுல் ஃபிக்ஹு என்ற தனிப் பெருங்கலை தோன்றி இன்றளவும் இருந்து வருகிறது. இதே நேரத்தில் ஹதீஸ் ஒரு பெருங்கலையாகி ஹதீஸ் நூல்கள் தோன்றின. உஸுல் ஹதீஸ் என்ற ஹதீஸ் சட்ட நுணுக்கங்கள் அதற்கு உதவியாக ஏற்பட்டன.

இவற்றை தர்க்கவாதிகள் எதிர்த்து பெரும் விதண்டா வாதங்களைச் செய்து கட்சிகளை உண்டு பண்ணினர். இவர்களுக்கு அனுசரணையாக அரசியல் ராணுவத் துறைகளில் புகுந்து குழப்பம் செய்தவர்களும் சேர்ந்தனர். கிலாஃபத் அரசாங்கம் பலஹீனமடைந்தது. முஸ்லிம் நாடுகள் துண்டு



துண்டாகி தனி அரசாட்சியை ஏற்படுத்தின. மேல்நாட்டினர் இது நல்ல சமயமெனக் கருதி முஸ்லிம் நாடுகளில் நேசம் பாராட்டவும் கிலாஃபத் அரசாங்கத்திற்கு விரோதமாக ராணுவ பொருளாதார உதவிகளைச் செய்யவும் ஆரம்பித்து பல நாடுகளில் தங்களுக்கு ஆதரவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் யாவருடைய முயற்சியால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்து பல கட்சிகளாயிற்று. இதனைத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மேற்கண்ட முன்னறிக்கை குறிப்பிடுகிறது. அதில் சொல்லப்பட்ட எழுபத்து மூன்று கூட்டம் என்பது மெய்யான எழுபத்து மூன்றை மட்டும் குறிப்பிடவில்லை. ஏராளமான எண்ணத் தொலையாத கூட்டம் என்று கருத்துக் கொள்வதே பொருத்தமாகும். இன்றைய முஸ்லிம் உலகில் என்ன? நமது பாரத நாட்டையே எடுத்துக் கொண்டால் எழுபத்து மூன்றுக்கும் அதிகமான வெவ்வேறு கூட்டத்தார் தாங்கள் தாம் மெய்யான முஸ்லிம்கள் என்று கூறி புதுப் புதுக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆயினும், இவர்கள் சிறுபான்மையினர்தான். இவர்கள் இத்தனை பேர் என்பதை சுலபமாகக் கணித்து விடமுடியும். இந்திய அரசோ, இதர அரசுகளோ இந்தக் காரியத்தைச் செய்வதில்லை. ஏனெனில் அவர்களின் கணக்கெடுப்புக் கொள்கை அவரவரின் அரசாங்கக் கொள்கையைத் தழுவியது. முஸ்லிம்களுக்குள் எத்தனை கட்சிகள் தோன்றி இருக்கின்றன. அக்கட்சிகளை ஆதரிப்பவர் எத்தனை பேர் என்பதைக் கண்டுபிடிப்பது இக்கணக்கெடுப்பின் நோக்கமல்ல.

இக்கட்சிகள் யாவற்றிலும் ஸுன்னத்து வல்ஜமாஅத்து என்ற கட்சிதான் பெரும்பான்மையாக இருக்கிறது. இக்கட்சி இந்தியாவில் மட்டுமின்றி முஸ்லிம் உலகம் முழுவதிலும் பரவி

இருக்கின்றனர். திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவைதான் இவர்களுக்கு வழிகாட்டி. இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

عن مالك بن انس رضي الله تعالى عنه مرسلا. انه قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ تَرَكْتُ فِيكُمْ أَمْرَيْنِ لَنْ تَضِلُّوْا مَا تَمَسَّكْتُمْ بِهِمَا كِتَابُ اللهِ وَسُنَّةُ نَبِيِّهِ. رواه في مؤطا.

**"உங்களில் இரண்டை விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் எனக்குப் பின்னர் நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள்" என்று கூறியுள்ளார்கள்.**

அறிவிப்பவர்:- மாலிக் இப்னு அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஅத்தா.

இக்காலத்திலுள்ள ஸுன்னத்து வல்ஜமாஅத்தினர் ஹனஃபீ, மாலிக்கி, ஷாபிஈ, ஹன்பலி ஆகிய நான்கு மதுஹபு களுக்குள் அடங்கி விட்டனர். இந்நான்கு மதுஹபுகளின் சட்டங்கள் அத்தனையும் குர்ஆன் ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டவை. இந்நான்கு மதுஹபுகளின் ஸ்தாபகர்கள் சமவயதினருமல்லர். ஒரே இடத்தில் வாழ்ந்தவர்களுமல்லர். தங்களுக்கு கிடைத்த ஹதீஸ்களையும் திருக்குர்ஆனையும் ஆதாரமாக வைத்து சட்டங்களை இயற்றியதுடன் தங்களால் இயற்றப்பட்ட சட்டத்துக்கு மாறான உண்மை ஹதீஸ் கிடைத்தால் தங்கள் சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டாம். ஹதீஸைப் பின்பற்றுங்கள் என்று இந்நால்வருமே உலக மக்களுக்கு அறிவித்துச் சென்றிருக்கின்றனர். இதற்கு காரணம் நபி



ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் பரிசுத்தவான்களான ஸஹாபீகள், திருமக்காவில் மட்டுமோ, திருமதீனாவில் மட்டுமோ இவ்விரு ஊர்களில் மட்டுமோ தங்கி நிரந்தரமாக வாழாமல் கூஃபா, பஸரா, மோசூல், திமிஷ்கு, பிஸ்தாத் நகரங்களுக்கும் பல்லாயிரக்கணக்கான ஸஹாபிகள் அரசாங்கத்தால் குடியேற்றப்பட்டனர். இது தவிர வேறு பல இடங்களிலும் சன்மார்க்க சேவை காரணமாக குடியேறினர்.

ஹனஃபீ மத்ஹபு இமாம் அபூஹனீஃபா ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 150ல் இவ்வுலகை விட்டு மறைந்தார்கள். கூஃபா பஸராவில் வாழ்ந்த ஸஹாபிகளில் ஏறக்குறைய ஐந்தாறு ஸஹாபிகளை தங்கள் இளமை பருவத்தில் பார்த்திருக்கிறார்கள். மாலிக் மதுஹபு இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மதீனா முனவ்வராவில் பிறந்து வாழ்ந்து மறைந்தார்கள். இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களைப் பார்க்கினும் பதின்மூன்று வயது இளையவர். ஸஹாபிகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஷாஃபிஈ மதுஹபு இமாம் முஹம்மதுப்னு இத்ரீஸிஷ் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஷாம் தேசத்தில் ஹிஜ்ரி 150ம் வருடத்தில் பிறந்தார்கள். கஜா என்ற ஊரில் தந்தை மறைந்தவுடன் திருமக்கா வந்து தந்தையின் சகோதரரிடத்தில் ஆரம்பத்திலும் இடையில் திருமதீனாவிலும் பின்னர் பகுதாதிலும் கல்வி பயின்று எகிப்து கெய்ரோ நகரில் ஹிஜ்ரீ 205ல் மறைந்தார்கள். ஸஹாபிகளை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களைக் கூட சந்திக்கவில்லை. ஹன்பலீ மதுஹபு இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் ரஹ்மத்

துல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரீ 180க்குப் பிறகு பகுதாதில் வாழ்ந்தவர். இமாம் அபூஹனீஃபா, இமாம் மாலிக் ரஹ்மத் துல்லாஹி அலைஹிமா ஆகிய இருவரையும் சந்திக்கவில்லை. இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் சிஷ்யர்களையும், இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களையும் சந்தித்தவர். எனவே, இவர்களில் எவருக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ்கள் யாவும் பூரணமாகக் கிடைக்காததால் இவர்கள் இயற்றிய சட்டங்களில் சொற்ப வித்தியாசம் ஏற்பட்டது. என்றாலும், இவர்கள் இயற்றிய சட்டங்களுக்கு அடிப்படை ஆதாரம் திருக்குர்ஆனும் ஹதீஸ்களும்தான். எனவே, இவர்களின் சட்டங்களை அக்காலத்து முஸ்லிம் அரசாங்கங்கள் செயல்படுத்தி இவற்றைத் தழுவி நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன. இக்காலத்திலும் கூட வாரிசுரிமை, திருமணம் போன்ற காரியங்களில் இவர்கள் இயற்றிய சட்டங்கள் முஸ்லிம் நாடுகளிலுள்ள லோகாதய அரசுகளால் செயல்படுத்தப்படுகின்றன.

இந்த நான்கு மத்ஹபுகளும் தான் முஸ்லிம் உலகில் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படுகின்றன. இந்த மத்ஹபுகளுக்கு மாறாக உபதேசிக்கப்படும் மார்க்கக் கொள்கைகளும் மார்க்கக் கிரியைகளும் இஸ்லாமுக்கு புறம்பான புதுக்காரியங்களாகும். இவற்றிற்கு பித்அத்துகள் என்று பெயர். இந்நான்கு மத்ஹபுகளுக்கு புறம்பான புதுக்கட்சிகள் யாவும் பித்அத்துகளே. அவைகள் போதிக்கும் மதக் கொள்கைகளிலும் அனுசரிக்கும் கிரியைகளிலும் பல குர்ஆன் ஹதீஸ்களுக்கு மாறானவை. எனவே, பெரும்பான்மை முஸ்லிம்கள் இவற்றை



சன்மார்க்கப் பிரச்சனை சம்பந்தப்பட்ட மட்டில் அங்கீகரிக்க வில்லை.

இஸ்லாம் மார்க்கத்தை அழித்து விட முயலுகிற மேல் நாட்டினர் முஸ்லிம் நாடுகளில் ஆதிக்கம் செலுத்தியவுடன் செய்த முதல் வேலை மார்க்கத்தில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று பிரகடனம் செய்து இஸ்லாமிய கல்விக்கு அரசாங்க ஆதரவு இல்லாமல் செய்ததேயாகும். அத்துடன் தங்கள் நாட்டு மொழியை தங்கள் ஆதிக்கமுள்ள முஸ்லிம் நாடுகளில் அரசாங்க மொழியாக ஏற்படுத்தி, தங்கள் நாட்டு மொழியை கற்பிக்கும் கல்விக் கூடங்களை அமைத்து அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசாங்க பதவிகளைக் கொடுத்தனர். இதுபோல இன்னும் பல தந்திரங்களைச் செய்து இஸ்லாமியக் கல்வியை குன்றச் செய்தனர். தங்கள் நாட்டு ஆசாரங்களைப் புகுத்தினர். தங்களால் எழுதப்பட்ட புத்தகங்களை பள்ளிக் கூடங்களில் பாடப்புத்தகங் களாக வைத்து, சிறுவர்களுக்கு அவற்றைப் படித்துக் கொடுத்து, மேலை நாட்டு நாகரிகத்தில் பொது மக்களுக்கு ஆர்வம் உண்டாகும்படி செய்தனர். இதன் பலனாக இஸ்லாமிய ஆசாரங்களுக்கு விரோதமான ஆதாரங்கள் முஸ்லிம் நாடுகளில் பரவின. இவை யாவும் இந்த ஹதீஸில் கண்டபடி பித்துஅத்துகள். இவை ஒதுக்கித் தள்ளப்படவேண்டியவை.

ஒரு மனிதன் அணியும் பாதரட்சைகள் நீளம், அகலம், எடை முதலியவற்றில் சரிசமமாக இருப்பது போல, யூதருக்கு சரிஜோடியாக என் உம்மத்தும் இருப்பர் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பது மற்றொரு முன் அறிக்கையாகும்.

4

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனாச்சார செயல்களை ஒழித்தார்கள். ஸஹாபிகள் தங்களில் இருந்த அனாச்சாரங்களைத் துறந்து தூயவர்களாயினர். இவர்களின் குழந்தைகளையும் சிஷ்யர்களையும் திருத்தினர். இந்த நிலையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் خَيْرُ الْقُرُوْنِ قَرْنِي ثُمَّ الَّذِيْنَ يَلُوْنَهُمْ ثُمَّ الَّذِيْنَ يَلُوْنَهُمْ. **நல்ல தலைமுறை என் தலைமுறை; பின்னர் அவர்களைச் சேர்ந்த அடுத்த தலைமுறை. பின்னர், அவர்களைச் சேர்ந்த அடுத்த தலைமுறை** என்று மூன்று தலைமுறைகளை குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஸஹாபிகள், தாபியீன்கள், தபஉதாபியீன்கள் இம்மூன்று தலைமுறைகளிலும் பிற சமூகங்களிலுள்ள அனாச்சாரங்கள் புகவில்லை. இவர்களுக்குப் பின்னருள்ள தலைமுறைகளில் பிற சமூகங்களிலுள்ள அனாச்சாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக புகுந்தன. இன்றும் புகுந்து கொண்டிருக் கின்றன. இறுதியாக மெய்யான யூத மதத்தையும் மெய்யான கிறிஸ்துவ மதத்தையும் உலகை விட்டு அகற்றிய சுயநலவாதிகள் உலகாதாயவாதிகள் தோற்றுவித்த அனாச்சாரங்கள் அத்தனையும் ஒன்றுவிடாமல் முஸ்லிம்களுக்குள்ளும் புகுந்து விடும் என்பதைத் தான் حَذْوَ النَّعْلِ بِالنَّعْلِ **செருப்புக்குச் செருப்பு ஜோடி** என்ற வார்த்தைகளும் அதற்குப் பின்னருள்ள செய்தியும் குறிப்பிடு கின்றன. இதனையன்றி

عن سعيد الخدري رضي الله تعالى عنه: أن النبي صلى الله عليه وسلم قال: لَتَتَّبِعُنَّ سَنَنَ مَنْ قَبْلَكُمْ شِبْرًا بِشِبْرٍ وَ ذِرَاعًا بِذِرَاعٍ حَتَّى لَوْ سَلَكُوْا جُحْرَ ضَبٍّ لَسَلَكْتُمُوْهُ قُلْنَا يَا رَسُوْلَ اللهِ اَلْيَهُوْدَ وَالنَّصَارَى قَالَ: فَمَنْ. رواه البخاري.



**"உங்களுக்கு முன்னர் இருந்தவர்களின் ஆசாரங்களை சாணுக்கு சாண் முழத்துக்கு முழம் நிச்சயமாக நீங்கள் பின்பற்றுவீர்கள். எதுவரையில் என்றால்? அவர்களில் ஒருவர் உடும்பு வளையினுள் நுளைந்தால் அதில் நீங்களும் நுழைவீர்கள். யா ரசூலல்லாஹ் யூதர்களையும், கிறிஸ்துவர் களையும் குறிப்பிடுகிறீர்கள் என்று ஸஹாபாக்கள் வினவினார்கள். பின்னர் யாரை?" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள்.**

அறிவிப்பவர்:- அபூஸயீது குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரி.

இந்த ஹதீஸ் நாம் கண்மூடித்தனமாக முன்பின் யோசனையின்றி பிறசமூக ஆசாரங்களைப் பின்பற்றுவோம் என்பதைக் குறிப்பிடுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இம்முன்னறிக்கை பெரும் அளவில் இக்காலத்தில் நிறைவேறி இருக்கிறது என்பதை இக்காலத் திலுள்ள நம்மவருக்கு விவரிக்க வேண்டிய அவசியமின்றியே நன்கு புரியும். இன்ஷா அல்லாஹ் இன்னும் சில காலத்தினுள் எஞ்சி இருக்கிற அனாச்சாரங்களும் நம்மவரில் பிரவேசித்து விடலாம். நம்மையும் மீறி இவைகள் பிரவேசிப்பதால் நாம் மனந்தளர வேண்டியதில்லை. நமது முயற்சி வெற்றி பெற்றாலும் சரி தோல்வியடைந்தாலும் சரி, பிறர் போற்றினாலும் சரி தூற்றினாலும் சரி, புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி நம்மீதுள்ள கடமையை நாம் செய்வதினின்று பின்வாங்கலாகாது. கடமையைச் செய்ய நாம் தவறினால் மறுமையில் இதனைக் குறித்து விசாரிக்கப்படுவோம். இவ்வாறு கடமையை உணர்ந்து சன்மார்க்க சேவை செய்யும் ஒரு பெரும் கூட்டம் முஸ்லிம்களுள்

எக்காலத்திலும் இருந்து கொண்டே இருக்கும். அக்கூட்டத்தை சேர்ந்தவர்கள் பழிப்பையும் இழிவையும் ஏசலையும், பூசலையும் பொருட்படுத்தமாட்டார்கள்.

وعن معاوية رضي الله تعالى عنه سمعت النبي صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: لاَ يَزَالُوْا مِنْ أُمَّتِي أُمَّةٌ قَائِمَةٌ بِأَمْرِ اللّٰهِ لاَ يَضُرُّهُمْ مَنْ خَذَلَهُمْ وَلاَ مَنْ خَالَفَهُمْ حَتَّى يَأتِيَهُمْ أَمْرُ اللّٰهِ وَهُمْ عَلَى ذٰلِكَ. رواه البخاي ومسلم.

"என்னுடைய உம்மத்தில் (வர்க்கத்தில்) ஒரு கூட்டம் (முஸ்லிம்களில் ஒரு கூட்டத்தார்) அல்லாஹ்வின் கட்டளை வரும் (இறுதிநாளில்) வரையில் அல்லாஹ்வின் கட்டளையில் உறுதியாக இருப்பர். அவர்களுக்கு உதவி மறுப்பவரோ, அவர்களை எதிர்ப்பவரோ அவர்களுக்கு தீங்கு செய்து விடமாட்டார்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன்.

அறிவிப்பவர்:- ஹளரத் முஆவியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- முஅத்தா மாலிக்

عن معاوية بن قرة عن أبيه قال: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا فَسَدَ أَهْلُ الشَّامِ فَلاَ خَيْرَ فِيكُمْ لاَ تَزَالُ طَائِفَةٌ مِنْ أُمَّتِي مَنْصُوْرِيْنَ لاَ يَضُرُّهُمْ مَنْ خَذَلَهُمْ حَتَّى تَقُوْمَ السَّاعَةُ. رواه الترمذي

"ஷாம் வாசிகள் கெட்டு விட்டால் உங்களில் நல்லதில்லை. என் உம்மத்தில் ஒரு கூட்டத்தார் இறுதிநாள் வரை (இறைவனால்) உதவி செய்யப்பட்டுக் கொண்டே இருப்பர். அவர்களுக்கு உதவி மறுப்பவர் அவர்களுக்கு தீங்கு செய்து விட முடியாது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.



அறிவிப்பவர்:- முஆவிய்யத்துப்னு குர்ரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு தன் தந்தை கூறியதாக நூல்:- திர்மிதீ.

பிற சமூகங்களிலுள்ள ஆசாரங்களை முஸ்லிம்கள் பின்பற்றினாலும் அவர்களில் ஒரு கூட்டத்தார் இஸ்லாமிய ஆசாரங்களை முற்றிலும் தழுவி நடப்பதுடன் இஸ்லாமிய ஆசாரத்துக்கு விரோதமான பித்அத்துக்காரர்களைக் கண்டனமும் செய்வர். அவர்களிடம் சன்மார்க்கப் பிரசாரமும் செய்வர். அவர்களுக்கு ஆதரவாளர்கள் குறைவாக இருப்பர். அவர்களை எதிர்ப்பவரும் இருப்பர். இதற்காக அவர்கள் மனம் தளர மாட்டார்கள். அவர்களுக்கு இறைவனின் உதவி இருக்கும். எனவே, ஒரு வர்க்கத்தார் எதிர்த்தாலும் ஓரிடத்தில் ஆதரவில்லா விடினும் வேறு ஒரு இடத்தில் ஆதரவிருக்கும். எனவே, அவர்களுடைய சன்மார்க்கப் பிரசாரம் இறுதிநாள் வரையில் இருந்து கொண்டே இருக்கும் என்பது இந்த ஹதீஸிலிருந்து நாம் புரிந்து கொள்ளும் விஷயங்களாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் இஸ்லாம் மார்க்கத்தில் இல்லாத யாவற்றுக்கும் பிதுஅத்து என்று கூறலாம். இவற்றில் நல்லவைகளும் இருக்கின்றன கெட்டவைகளுமிருக்கின்றன. இஸ்லாமுக்கு எதிரான பிதுஅத்துகள் தாம் இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டவை. பிது அத்துக்களை பெரியோர்கள் ஐந்து வகைகளாகப் பிரித்திருக் கின்றனர். அவைகளாவன.

1. ஷரீஅத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கிற அரபி இலக்கண இலக்கியங்கள் திருக்குர்ஆன் ஹதீஸ்களிலுள்ள நுட்பங்களை உணர்வதற்கு தேவையான கல்வி போன்றவைகள் வாஜிபானவை.

2. கத்ரிய்யா, ஜபரிய்யா, முஜஸ்ஸமிய்யா போன்ற வர்க்கத்தினரின் மதக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ளல், போன்றவை ஹராமானவை.

3. சத்திரங்கள், மத்ரஸாக்கள் போன்றவற்றை நிர்மாணித்தல் மன்தூபுகள் (விரும்பத்தக்கவை).

4. மஸ்ஜிதுகளில் சித்திரவேலைப்பாடுகளைச் செய்து அலங்கரித்தல், குர்ஆன் ஷரீபில் தங்கள் வெள்ளி கிளிட்டு கொடுத்தல் போன்றவை மக்ரூஹானவை.

5. ஃபஜ்ரு, அஸர் தொழுகைக்குப் பிறகு தொழுகையில் கலந்து கொண்டவர்கள் ஒருவரோடொருவர் முஸாஃபஹா செய்தல், உடை, உணவு, பானம் ஆகியவற்றில் அதிக செலவு செய்தல், போன்றவை முபாஹானவை (ஆகுமானவை) இவை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் ஷரீஅத்தே முஹம்மதியாவில் இல்லாதவை. பிற்காலத்தில்தான் இவைகள் ஏற்பட்டன.

இக்காலத்தில் மீலாது விழாக்கள் நம்நாட்டில் ஏற்பட்டிருக் கின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாறுகளை, சேவைகளை உணரும்படி செய்வதற்காக விழாக்களை நடத்துவது சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்படுவது வரவேற்க வேண்டியவையாகும். இதற்காக ஏராளமான பணத்தை



பந்தல் அலங்காரத்தில் விரயம் செய்வதும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ரசூல் என்று ஏற்றுக் கொள்ளாதவர்களையும் அழைத்து இஸ்லாமைப் பற்றியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றியும் பேசச் செய்வதும் அதனைப் பாராட்டுவதும் தவறான காரியங் களாகும். மீலாது விழாக்களில் கலந்து அலங்காரமாக பேசி முஸ்லிம்களைத் தங்கள் கட்சியில் சேர்க்கலாம். தங்களுக்கு ஆதரவளிக்கச் செய்யலாம் என்ற எண்ணத்தில்தான் முஸ்லிம் அல்லாதார் இஸ்லாமை ஏற்றிப் போற்றி பேசுகிறார்களேயன்றி இஸ்லாமை மனதார நம்பி பிரசங்கம் செய்வதில்லை. தான் நம்பாத ஒன்றை பிறரை மெய்ப்பிப்பதற்காக ஏற்றிப் போற்றி வாழ்த்திப் பேசுவது மன சாட்சிக்கு விரோதமான பொய்யன் அன்றோ? ஒருவரை பொய் சொல்லச் செய்து அதனை பலர் கேட்டு பாராட்டுவதும் குற்றமாகும்.

இதுபோல ஆடவர்கள் குழுமிய கூட்டத்தில் பெண்களை மேடை ஏறிப் பேசச் செய்வதும் ஷரீஅத்துச் சட்டப்படி குற்றமாகும். ஆகுமான ஒரு காரியத்தை சன்மார்க்கச் சட்டம் தெரியாதவர்கள் பிற சமூகத்தார் செய்யும் வழக்கத்தை அனுசரித்து கூட்டங்களைக் கூட்டி மீலாது பிரசங்கங்களைச் செய்விப்பதில் பல தவறுகள் ஏற்படுகின்றன. இது மட்டுமல்ல வேறு பல தவறுகளும் நிகழ்கின்றன. இவை யாவையும் விவரிக்க இந்த நூலில் இடமில்லை, எனவே, பிது அத்துக்களைச் செய்யாமல் விலகி இருப்பதே சிறந்தது.

முஸ்லிமாக இருக்கிற நாம் நமது சிறார்களுக்கு சன்மார்க்க அறிவை ஊட்டும் விஷயத்தில் மிகவும் பிற்போக்கில் இருக்கிறோம். அதே சமயத்தில் நமது செல்வர்களும்

செல்விகளும் நல்ல முஸ்லிமாகவும் இஸ்லாமிய ஆசாரங்களில் தவறாமல் இருக்கவும் வேண்டுமென்று எதிர்ப்பாக்கிறோம். சன்மார்க்க அறிவை ஊட்டி சன்மார்க்கக் கிரியைகளைத் தவறாமல் நிறைவேற்றும் பயிற்சியை இளமையிலேயே கொடுக்காமல் அவர்கள் பெரியவர்களான பிறகு அவர்களிடம் மார்க்கப் பண்பாட்டை எதிர்ப்பார்ப்பது நமது மதீயீனமாகும். சன்மார்க்க அறிவு வளர்வதற்காக நமது நாட்டில் குர்ஆன் மத்ரஸா என்னும் மக்தபுகளையும், அறபிக் கல்வி போதிக்கவென்று அறபி மத்ரஸாக்களையும், மௌலவிகளை உற்பத்தி செய்ய தஹ்ஸீல் மத்ரஸாக்களையும் நாம் ஏராளமாக நிறுவியிருக்கிறோம். இம்மூவகை மார்க்கக் கல்வி ஸ்தாபனங்களில் எதுவும் இல்லாத முஸ்லிம் கிராமமோ நகரமோ இல்லையெனலாம். இவற்றில் முடக்கப்பட்ட பணம் பல லட்சங்களாக இருக்கலாம். என்றாலும், இவற்றின் நிர்வாகம் ஒழுங்காக இருக்கின்றனவா? நல்ல திறமை வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனரா? மார்க்கப் பண்பாட்டில் அக்கறையுள்ளவர்கள் நிர்வாகிகளாக இருக்கின் றனரா? இவற்றின் நிர்வாகம் சீராக இருக்கிறதா? இவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் திறமை என்ன? என்பது பரிசீலிக்கப்படுகிறதா? இவற்றில் கல்வி பயில வருவோர் செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளா? நடுத்தரக் குடும்பத்துப் பிள்ளைகளா? ஏழைகளின் மக்களா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

செல்வந்தர்களும் நடுத்தரவாசிகளும் குழந்தைகளை லௌகீகக் கல்விக் கூடங்களுக்கு அனுப்பி விடுகின்றனர். அவர்களுக்கு மார்க்க அறிவு ஊட்டப்படுவதில்லை. சன்மார்க்கப் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. பெயரும் உடையும் முஸ்லிம் சமூகத்தை ஓரளவு அனுசரித்ததாக இருக்கின்றன. ஆனால், அவர்களின் உள்ளமும் நடத்தையும் பிற சமூகங்களை அனுசரிக்கின்றன. ஏழைகள் தங்கள் குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வியைக் கற்பிக்க ஆர்வங் கொள்கின்றனர். மார்க்கக் கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகங்கள் ஏனோதானோ வென்றி ருப்பதால் அவர்களுக்கு தேவையான மார்க்க அறிவு கிடைப்ப தில்லை. இந்த நிலையில் பிது அத்துகள் பெருகாமல் இருக்க முடியுமா? இவ்வாறான சீர் கேட்டில் நாம் இருந்தாலும், மேலேயுள்ள ஹதீஸில் கூறப்பட்ட படி நம்மில் ஒரு கூட்டத்தார் சன்மார்க்க பிரசாரத்தை சளைக்காமல் செய்து கொண்டு தானிருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான உதவியை நாம் செய்வதுமில்லை. அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதுமில்லை. இந்நிலையில் அவர்கள் தங்களின் சன்மார்க்கப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றனர். இதனை இந்த ஹதீஸிலுள்ள (இறைவனால்) உதவி செய்யப்பட்டுக் கொண்டே இருப்பார்கள் என்ற வாசகம் அறிவிக்கிறது. எனவே, பிதுஅத்துகள் மலிந்தாலும், பிதுஅத்துகளைச் செய்வோர் பெருகினாலும், சன்மார்க்கர்களின் ஒரு கூட்டம் இறுதிவரை இருந்து கொண்டிருக்கும். பெயரைத் தவிர்த்து மெய்யான யூத கிறிஸ்துவ மதங்கள் உலகை விட்டு மறைந்ததுபோல, இஸ்லாம் உலகை விட்டு மறையாது. அதனை உறுதியுடன் பின்பற்றும் கூட்டம் உலகம் முடியும் வரையில் இருந்து கொண்டிருக்கும் என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

## 6. ஹலாலும் ஹராமும்

عن النعمان بن بشير رضي الله تعالى عنهما قال: سمعت رسول اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ يقول: إِنَّ الحَلَالَ بَيِّنٌ وَ إِنَّ الحَرَامَ بَيِّنٌ وَ بَيْنَهُمَا أُمُورٌ مُشْتَبِهَاتٌ لاَ يَعْلَمُهُنَّ كَثِيرٌ مِنَ النَّاسِ فَمَنْ اِتَّقَى الشُّبُهَاتِ فَقَدْ اِسْتَبْرَأَ لِدِينِهِ وَ عِرْضِهِ. وَمَنْ وَقَعَ فِي الشُّبُهَاتِ وَقَعَ فِي الحَرَامِ كَالرَّاعِي يَرْعَى حَوْلَ الحِمى يُوشِكُ أَنْ يَرْتَعَ فِيهِ أَلاَ وَ إِنَّ لِكُلِّ مَلِكٍ حِمى أَلاَ وَإِنَّ حِمَى اللهِ مَحَارِمُهُ أَلاَ وَ إِنَّ فِي الجَسَدِ مُضْغَةً إِذَا صَلُحَتْ صَلُحَ الجَسَدُ كُلُّهُ وَ إِذَا فَسَدَتْ فَسَدَ الجَسَدُ كُلُّهُ أَلاَ وَهِيَ القَلْبُ. رواه البخاري ومسلم.

"ஹலாலும் (அனுமதிக்கப்பட்டதும்) தெளிவாக இருக்கிறது. ஹராமும் (விலக்கப்பட்டதும்) தெளிவாக இருக்கிறது. இவ்விரண்டுக்குமிடையில் முஸ்தபிஹாத்து (சந்தேக மானவை)களை எவர் தவிர்த்துக் கொள்கிறாரோ அவர் தன்னுடைய சன்மார்க்க பக்தியையும் தன்னுடைய அந்தஸ்தையும் காத்துக் கொள்வதற்காக ஒதுங்கி விட்டார். சந்தேகமானவற்றில் வீழ்ந்து விடுபவர் ஹராமில் (விலக்கப்பட்டதில்) வீழ்ந்து விட்டார். (இது) வேலியைச் சுற்றிலும் மேய்கிற (தன்னுடைய கால் நடைகளை) மேய்ப்பவரைப் போல. அதில் அவன் வீழ்ந்து விட முயலுகிறான். அறிந்துகொள்! ஒவ்வொரு உரிமைக்கும் (அதனை பாதுகாக்கும்) வேலியுண்டு. அல்லாஹ்வின் வேலி அவன் விலக்கியவைதான். அறிந்துகொள்! உடலில் ஒரு தசைக்கட்டி இருக்கிறது. அது



சரியாக இருந்தால் உடல் முழுவதும் சரியாக இருக்கும். அது கெட்டுப்போனால் உடல் முழுவதும் கெட்டு விடும். அறிந்துகொள்! அதுதான் இதயம்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன்.

அறிவிப்பவர்:- அபூ அப்தில்லாஹ் அந்நுஃமான் இப்னு பஷீர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்:- புகாரீ.

அனுமதிக்கப்பட்ட காரியங்கள் இன்னின்னவை என்று அல்லாஹ்வும் அவனுடைய ரசூலும் விளக்கமாகக் கூறி இருக்கிறார்கள். தவிர்க்க வேண்டிய இன்னின்னவை என்றும் விளக்கமாகக் கூறி இருக்கிறார்கள். திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் இவற்றைப் படிக்கலாம். இவ்விரண்டையும் தவிர்த்து வேறு பல காரியங்களிருக்கின்றன. அவை அனுமதிக்கப் பட்டவையா? விலக்கப்பட்டவையா? என்பதைப் பற்றிய விளக்கம் திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் சொல்லப்படவில்லை. பெரும் பாலான மக்களுக்கு இவை சம்பந்தமான விளக்கம் தெரியாது. எனவே, இவற்றைக் குறித்து ஆராய்ந்து தன் யுக்திப்படி அவற்றைச் செய்ய முற்படுவது சில சமயங்களில் கெடுதலாக அமைந்து விடும். எனவே, அவற்றைச் செய்யாமல் ஒதுங்கி விடுவதுதான் சிறந்தது.

ஆடுமாடுகளை மேய்ப்பவர் தோட்டங்கள், கழனிகளின் அருகில் அவற்றை நெருங்க விட்டு மேய்த்தால் அவைகள் வேலியைத் தாண்டி உள்ளே சென்று பயிர்களை அழித்து விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். வேலி ஓரங்களில் அவைகள் வந்தால் காவல்காரர்கள் அவற்றைத் துரத்தியடிப்பதையும்,

இவர்கள் இப்படி விரட்டுவதை மாடு மேய்ப்பவர்கள் ஆட்சேபிக்கவும் மாட்டார்கள். இதுபோல ஒவ்வொரு காரியத்திற்கும், பணிக்கும் தொழிலுக்கும் ஒரு எல்லையுண்டு. எல்லைக்குள் கட்டுப்பட்டிருந்தால்தான் அக்காரியம், அப்பணி, அத்தொழில் சிறக்கும். எல்லையை மீறினால் சீரழிவு தான். இவ்வுண்மையை மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் நன்கு அறிந்திருக்கின்றனர். இஸ்லாம் மார்க்கம் என்ற வட்டத்திற்கு எல்லை அதாவது வேலி அல்லாஹ் ஹராமாக்கிய (விலக்கிய) காரியங்கள் தாம். அவற்றிற்குப் பக்கத்தில் கூட முஸ்லிம்கள் செல்லலாகாது. அதற்குப் பக்கத்தில் சென்றால் வேலிக்கு அப்பால் உள்ளவைகளும் கண்ணுக்கு புலப்படும். தூரத்து பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி என்பதற்கேற்ப வேலிக்கு அப்பால் சென்றால் அங்கு என்னென்ன ஆபத்துகள் காத்திருக்கின்றனவோ? யார் அறிவார். வேலிக்கு பக்கத்தில் சென்றவர் பேராசையின் காரணமாகவோ அறியாமையினாலோ, ஞாபகப்பிசகாகவோ வேலியைத் தாண்டிச் சென்று விடவும் முடியும். வேலிக்கு அப்பால் சென்றவருக்கு பாதுகாப்பு இல்லை. எனவே, அங்குள்ள தொல்லைகளில் தீமைகளில் சிக்கி தன்னுடைய ஈமானையும் இஸ்லாம் மார்க்க பக்தியையும் இழந்து விட நேரிடும் என்ற இந்த ஹதீஸ் முஸ்லிம்களாகிய நம்மை எச்சரிக்கை செய்கிறது.

இக்காலத்து முஸ்லிம்களில் பலர் ஹராம் என்று தெளிவாகத் தெரிந்ததையும் கூட பகிரங்கமாகச் செய்கின்றனர். செய்த ஹராமைப் பிறரிடம் சொல்லிக் காண்பித்து பெருமையும் கொள்கின்றனர். அவர்கள் செய்யும் இக்காரியங்களுக்குரிய தண்டனை இந்த உலகிலும் கூட வந்து விடுகிறது. தாங்கள் செய்த தீவினையின் பலன் தான் இது என்பதைக் கூட அவர்கள் உணருவதில்லை. ஹராமான காரியத்தை மீண்டும் மீண்டும் செய்து அவர்களின் மனம் மரத்து விட்டதால் தங்களுக்கு வந்திருக்கிற வேதனை தங்கள் தீவினையின் பலன்தான் என்பதைக் கூட உணரச் சக்தியற்றவர்களாகி விட்டனர். மது அருந்துதல், விபச்சாரம் செய்தல், வட்டியுண்ணல் போன்ற காரியங்கள் ஹராமானவைகள் என்பது முஸ்லிம்களுக்கு மட்டுமில்லாமல் முஸ்லிம் அல்லாதாரும் கூட தெரிந்த விஷயங்கள்தாம். இவற்றை எல்லோரும் சர்வ சாதாரணமாக நாணமின்றி பகிரங்கமாகச் செய்கின்றனர்.



இதன் பலனாக தொத்து நோய்கள், சமூகக் கலகங்கள் வறுமைகள் வளருகின்றன. இதனையும் கூட அவர்கள் தெரிந்தே செய்கின்றனர். இவற்றை விட்டு விலகி தௌபாச் செய்து நற்கிரியைகளைச் செய்யும் மனமாற்றம் உண்டாகுவதில்லை.

இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள மற்றொரு செய்தி இதயத்தைப் பற்றியது. சந்தேகமானவற்றைப் பலமுறை செய்வதால், பகிரங்கமாக அவற்றைச் செய்வதற்கான துணிச்சல் உண்டாகி விடுகிறது. இறுதியாக ஹராமானவற்றைச் செய்வதற்கு துணிந்து விடுகின்றனர். எனவே, பெற்றோர்கள் தங்கள் சிறார்களுக்கு இவற்றைக் கூறி ஹராமா ஹலாலா என்று நன்கு புரியாத காரியங்களைச் செய்யாமல் விலகி இருக்குமாறு செய்வது அவசியம். குழந்தைகள் எந்தக் காரியத்தையும் செய்து விடுவர். பாவமான காரியம் எது? பாவமில்லாத காரியம் எது? என்ற விவரம் தெரியாமல் அவர்கள் செய்வர். குழந்தைகள் என்று நினைத்து அவர்களை பெற்றோர்கள் தடுக்காமலோ கண்டிக்காமலோ இருந்து விட்டால் தவறுகள் செய்வது அவர்களுடைய அன்றாடப் பழக்கமாகிவிடும். பெரியவர்களான பிறகு அவர்களைக் கண்டித்தால் அக்கண்டனத்தை அவர்கள்

மதிக்காமல் மீறி அதனையே மீண்டும் மீண்டும் செய்யத் தொடங்கி விடுவர். குழந்தைகள் பிற்காலத்து சமூகத் தலைவர்கள். எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் செயலைக் கண்காணித்து அவ்வப்போது கண்டித்துத் திருத்துவது அவசியம். ஆரம்பத்தில் கவனமின்றி அஜாக் கிரதையாக இருந்தால் அதன் கசப்பான பலனை பெற்றோர்கள் தங்கள் முதுமையில் அனுபவிக்க நேரிடும். எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் மக்களால் அவதியுறுவதை நாம் அனுபவத்தில் காண்கிறோம்.

**உலக வாழ்வுடன் இத்தொல்லை முற்றுப் பெறுவதில்லை. மறு உலகிலும் இது தொடருகிறது.**

عن عبد الله بن دينار عن عبد الله بن عمر رضي الله تعالى عنه أن رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: أَلاَ كُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْؤُوْلٌ عَنْ رَعِيَّتِهِ. فَالإِمَامُ الَّذِىْ عَلَى النَّاسِ رَاعٍ وَهُوَ مَسْؤُوْلٌ عَنْ رَعِيَّتِهِ. وَالرَّجُلُ رَاعٍ عَلَى أَهْلِ بَيْتِهِ وَهُوَ مَسْؤُوْلٌ عَنْ رَعِيَّتِهِ. وَالْمَرْأَةُ رَاعِيَةٌ عَلَى أَهْلِ بَيْتِ زَوْجِهَا وَ وَلَدِهِ وَهِيَ مَسْؤُوْلَةٌ عَنْهُمْ. وَ عَبْدُ الرَّجُلِ رَاعٍ عَلَى مَالِ سَيِّدِهِ وَهُوَ مَسْؤُوْلٌ عَنْهُ. أَلاَ فَكُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْؤُوْلٌ عَنْ رَعِيَّتِهِ. رواه البخاري ومسلم.

"அறிந்துகொள்:- நீங்கள் ஒவ்வொருவரும் **ஒருதலைவர் (மேய்ப்பர்). உங்களில் ஒவ்வொருவரும் அவருடைய பாதுகாப்பில் உள்ளதைக் குறித்து வினவப்படுவார். மக்களின் மீது நியமிக்கப்பட்டிருக்கிற தலைவர் (ஜனாதிபதி)**



**அவருடைய பிரஜையைக் குறித்து வினவப்படுவார். ஆடவர் தலைவர், அவருடைய பொறுப்பிலுள்ளதைக் குறித்து வினவப்படும். பெண்டீர் அவளுடைய கணவரின் வீட்டுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் தலைவி. அவர்களைக் குறித்து அவள் வினவப்படுவாள். மனிதனின் அடிமை தன்னுடைய எஜமானர் பொருளுக்கு தலைவர். அதனைக் குறித்து அவர் வினவப்படுவார். அறிந்துகொள், உங்களில் ஒவ்வொருவரும் தலைவர். உங்களில் ஒவ்வொருவரும் தம்முடைய பொறுப்பிலுள்ளதைக் குறித்து வினவப்படுவார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பவர்:- அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு தஆலாமா அன்ஹு நூல்:- புகாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸ் உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்புகளை விளக்குகிறது. இவ்வுலகிலுள்ளவர் ஜனாதிபதி யாகவோ அரசர்களாகவோ இருக்க முடியும் மற்றவர்கள் அவருடைய பிரஜைகளாவார்கள். வசதி படைத்தோர் அடிமைகளை விலைக்கு வாங்கி அல்லது பணியாளர்களை தினக் கூலிக்கோ மாதச் சம்பளத்திற்கோ, வருடாந்திர ஊதியத்திற்கோ அமர்த்தி அவர்கள் மாறலாக வியாபாரம், தொழில், விவசாயம் முதலியவற்றைச் செய்யலாம், கணவன், மனைவி இருவரில் ஆடவர்கள் குடும்பத்துக்கு அதிபதி. தலைவி கணவருடைய சகல பொருட்களுக்கும் கணவரின் பிள்ளைகளுக்கும் அதிபதி. இவ்வாறாக ஒவ்வொருவருக்கும் ஒருவிதமான தலைமைத்துவம், ஒரு விதமான பொறுப்பு இறைவனால் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இப்பொறுப்பை அவர் இறை நோக்கப்படி நிர்வகிக்க வேண்டும். இதில் அவர் தவறு செய்தால், பொறுப்பை சரியாக நிர்வகிக்கா

விட்டால் இறுதிநாளில் இதனைக் குறித்து அவர் இறைவனால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

ஒரு நாட்டுக்கு ஒருவர் அரசராகவோ அதிபதியாகவோ பதவி ஏற்றால், அந்த நாட்டில் வாழ்கிற மக்கள் யாவருக்கும் அவர் எஜமானரல்லர். உரிமையாளர் அல்லர். அவர் விருப்பப்படி எதையும் செய்யலாகாது. அவருடைய அதிகார எல்லைக்குள் வாழ்கிற பிரஜைகளுக்கு உண்ண உணவு, உடுத்த உடை, குடியிருக்க வீடு, நோய் வந்தால் சிகிச்சை பெற்றுக் கொள்ள மருத்துவ வசதி, அறிவை பெற்றுக் கொள்ள கல்வி வசதி, பிரஜைகளுக்குள் ஏற்படுகிற பிணக்குகளைத் தீர்த்து வைக்க நீதிமன்ற வசதி, வெளியாரால் தொல்லைகள் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு, இவை போன்றவற்றைச் செய்வதற்கான பொறுப்புகளை ஜனாதிபதி அல்லது அரசர் தன்னுடைய நாட்டு மக்களின் நலன் காக்கும் பிரதம பொது ஊழியர். இவர் ஒருவரால் மட்டும் இவை யாவற்றையும் தன்னந்தனியே திறம்பட நிர்வகிப்பது இயலாத காரியம். எனவே, இவருக்கு ஆலோசனைகள் கூறவும், இவரது பணிகளைப் பகிர்ந்து கொள்ளவும் அமைச்சர்கள் ஆலோசகர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இச்சிலராலும் இவற்றை நிர்வகிக்க முடியாது என்பதற்காக நாடெங்கும் அரசாங்க ஊழியர்கள் நியமிக்கப் படுகின்றனர். இவர்களுக்கு அதிகாரிகள் என்ற கௌரவப் பெயர்கள் கூறப்படுகின்றனவேயன்றி உண்மையில் பிரஜைகளின் ஊழியர்களே இவர்கள். அரசாங்கத்திலிருந்து நேரடியாக சம்பளம் வாங்கினாலும், இவர்கள் அடையும் சம்பள ஊதியம் உண்மையில் பிரஜைகளின் வரிப்பணம் தான். எனவே. இவர்களுக்கு பிரஜைகள் அந்தரங்கத்தில் மறைமுகமாக சம்பளம் கொடுக்கின்றனர். எனவே,



அதிகாரிகள் தங்களை பொது மக்கள் சேவகர்கள் என்ற எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். இவர்கள் நமது பொது நலனுக்காக உழைப்பவர்கள் என்ற எண்ணத்துடன் பொது மக்கள் இவர்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். நம்முடைய சொந்த ஊழியர், வேலைக்காரர், பண்ணையார் என்ற எண்ணத்துடன் இவர்களிடம் நடந்து கொள்ளலாகாது. பரஸ்பரம் கண்ணியமாக இருசாராரும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த முறையைக் கை விட்டு விட்டு அரசாங்க ஊழியரோ, ஜனாதிபதியோ மன்னரோ தன் நாட்டு மக்களை தன்னுடைய அடிமைகள் போல, தனக்குக் கீழ்ப்பட்டவர் போல நடத்தினாலும், தனக்கு மக்களால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தாலும், நீதிக்குப் புறம்பாக நடந்தாலும், தன் கடமைகளைச் செய்யத் தவறினாலும் மறுமையில் இறைவனால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார். இதுபோல, அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்ய விடாமல் பிரஜைகள் தடை செய்தாலும், அரசாங்க அதிகாரிகள் நியாயமாக நடந்து கொள்கையில் பிரஜைகள் அரசாங்கக் கட்டளையை மீறினால், அவர்களும் இறைவனால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவர். இவ்விரு சாராரும் தங்கள் கடமையைச் சரிவர செய்யாததால் இவ்வுலகிலேயே புரட்சியையும் கிளர்ச்சியையும் அரசாங்க அதிகாரிகள் எதிர்நோக்கவும் அரசாங்க அடக்கு முறைக்கு பிரஜைகள் ஆளாகி பல தொல்லைகளுக்கு உட்பட வேண்டிய திருக்கிறது.

ஆடவர் தன் குடும்பத்திற்கு தலைவர். தம்முடைய தலைமையின் கீழுள்ளவர்களை நன்கு பரிபாலித்து காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறார். அக்கடமையில் அவர் தவறிழைப்

பாராயின் இறுதிநாளில் அவர் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப் படுவார். பெரும் பணத்தைச் சம்பாதித்தல், மாளிகைகளைக் கட்டுதல், நிலம்புலன்களை வாங்கிச் சேகரித்தல் தாம் தம் குடும்பத்திற்குச் செய்யும் கடமை என்ற எண்ணத்தில் இக்காலத்திலுள்ளவர்களில் அநேகர் வாழ்வதாகத் தோன்றுகிறது. இது மட்டும் கடமையல்ல. வேறு பல காரியங்களும் அவரது கடமைகளாகும்.

يَا ايها الذين آمنوا قوا انفسكم واهليكم نارا

"மூமின்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றுங்கள்" (66:6) என்று அல்லாஹ் தன்னுடைய திருமறையில் கூறியுள்ளான். இக்கட்டளைக்கேற்ப தன் மனைவி மக்கள் சன்மார்க்க பக்தியுள்ளவர்களாகவும் இஸ்லாமியக் கடமைகளைச் செய்பவர் களாகவும் இருக்குமாறு கவனித்துக் கொள்வதும் குடும்பத் தலைவனின் கடமைகளாகும்.

மனைவி மக்களுக்கு இஸ்லாமியக் கல்வியைக் கற்பித்தல், அவர்களின் ஒழுக்கங்கள் சன்மார்க்கத்திற்கு இணங்கியதாக இருக்கும்படி அவர்களுக்கு பயிற்சி அளித்தல் குடும்பத் தலைவனின் கடமை. இவற்றைக் கவனியாமல் அவர்களை சன்மார்க்க அறிவற்றவர்களாக வளர்த்தல், பெரியதிரை, சின்னத்திரை, நாடகம், கூத்து கும்மாளங்களுக்கு அனுப்புதல், சன்மார்க்க விரோதமான செய்கைகளைச் செய்வதை விட்டு அவர்களைத் தடுக்காதிருத்தல் போன்றவைகளால் குடும்பத் தலைவர் இறுதி நாளில் தண்டனைக்குட்பட வேண்டிய திருக்கும்.

ஸல்மான் ஃபார்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் திருமதீனாவில் வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி



வஸல்லம் அவர்களை நேரில் தரிசித்து இஸ்லாமைத் தழுவினார். முற்காலத்து பாரசீக நாட்டை (இக்காலத்து ஈரான் நாட்டை)த் துறந்து அரப் நாட்டில் பல நூறு மைல் தூரத்தைக் கடந்து திருமதீனாவில் குடியேறிய அகதி (முஹாஜிர்). இவரை திருமதீனா வாசியான ஹளரத் அபூதர்தா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் ஒப்புவித்து, உமது இஸ்லாமிய சகோதரருக்கு தேவையான சாத்தியமான சகல உதவியையும் புரியும்படி கட்டளையிட்டு இருவருக்குமிடையில் சகோதரத் துவத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்படுத்தி வைத்தார்கள்.

இவ்விதமாக சகோதரத்துவ பந்தம் ஏற்படுத்தப்பட்ட முஹாஜிர்களுக்கு மதீனத்து அன்ஸார்கள் தங்களால் இயன்ற சகல உதவிகளையும் புரிந்து ஆதரித்த நிகழ்ச்சிகள் 1432 வருடங்கள் கடந்தும் இன்றும் கூட அகதிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நிகரற்ற முன் மாதிரியாக விளங்குகிறது. இம்முன் உதாரணத்தை இன்றும் கூட பல நாடுகள் பின்பற்றி தங்களில் ஏற்படுகிற அகதிப் பிரச்சினையை தீர்த்துக் கொள்கின்றன.

அகதிகளாகிய முஹாஜிர்கள் தியாகிகளாக இருந்தால் தங்களுடைய அன்ஸாரி சகோதரர்களுக்கு பாரமாக நீண்ட நாள் இருக்கவில்லை. முடிந்த வரை மிகக் குறுகிய கால உதவி களையே அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். வெகு துரிதமாக தங்களைத் தாங்களே பராமரித்துக் கொண்டனர். ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் இதே முறையில் நடந்து கொண்டாராயினும், அவர்களுக்கு இடையிலும் சகோதரத்துவ பாசம் இறுதிவரை தொடர்ந்தது.

ஒருநாள் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வீட்டிற்கு அவர் வந்தார். அங்கு அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு இல்லை. அவருடைய வாழ்க்கைத் துணைவியான உம்முதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹா இருந்தார். அவர் இருந்த நிலையை அவர் பார்த்து மனங்கலங்கி "என்ன உம்முதர்தாஉ உனக்கு உடல் நலமில்லையா? ஏன் இப்படி இருக்கிறாய்? எனக்கு தெரிவிக்கலாகாதா? தேவையான மருத்துவ உதவி செய்யலாமே" என்று பரிதாபத்துடன் விசாரித்தார். அதற்கு அவ்வம்மை "எனக்கு நோய் நொடியில்லை. இறைவன் கிருபையால் உடல் நலமாகத்தான் இருக்கிறேன். உங்கள் சகோதரருக்கு துன்யா (இவ்வுலக ஆசை) தேவை இல்லை. எனவே, நான் இப்படி இருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

இந்நிலையில், மஸ்ஜிதுந் நபவிய்யில் வணக்கத்தில் இருந்த தன் கணவருக்கு இவர் வந்திருக்கிற செய்தியை சொல்லி அனுப்பி விட்டு, உங்கள் சகோதரருக்கு தகவல் சொல்லி ஆள் அனுப்பி இருக்கிறேன். தாங்கள் இங்குதான் பகல் உணவு அருந்த வேண்டும் என்ற கூறி அவர் அமருவதற்கு வசதி செய்து கொடுத்து விட்டு, உணவு தயாரிப்பில் ஈடுபட்டார். இவர் வந்திருக்கிற செய்தியைத் தெரிந்த அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் வீடு வந்து தம்முடைய அகதிச் சகோதரரைச் சந்தித்து இருவரும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்து பேசிக் கொண்டிருந்தனர்.

இதற்குள் உணவு தயாராகி விட்டது. உம்முதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹா உணவைக் கொண்டு வந்து அவர்கள் முன்னிலையில் வைத்தார். "இன்று நான் நோன்பு நோற்றிருக்கிறேன். நீங்கள் உணவருந்துங்கள். உங்களுடன் நான் இருக்கிறேன்" என்று அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறினார். அதற்கு ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு "நான் விருந்தாளியல்லவா? விருந்தாளியுடன் வீட்டுக்காரரும் சேர்ந்து உணவருந்துவது தான் விருந்தோம்பல். உணவை வைத்து விட்டு நீர் அருந்தும் என்று கூறுவது ஸதக்காவன்றோ? என்னுடன் நீரும் அமர்ந்து உணவருந்து வதாக இருப்பின் நான் உணவருந்துவேன். இல்லையேல் நான் உணவருந்தேன்" என்றார். "நான் நோன்பாளியாயிற்றே? எப்படிச் சாப்பிடுவது" என்றார் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு. அப்பொழுது ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "இது ரமலான் மாதமா? ரமலான் மாதத்து ஃபர்லான நோன்பையா நீர் நோற்றிருக்கிறீர்?" என்றார். "இல்லை. ரமலான் மாதமல்ல. ஃபர்லான நோன்புமல்ல, நஃபிலான நோன்புதான்" என்றார் அபூதர்தா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்.



அப்படியானால் "நஃபில் நோன்பை முறிக்கலாமே" என்றார் ஸல்மான் பாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு. "ஃபர்லான நோன்பை முறித்தால் அதனை களா செய்வதுடன், வேண்டுமென்றே ஃபர்லான நோன்பை முறித்ததற்கு தண்டனை யாகக் கஃப்பாரா கொடுக்க வேண்டும். நஃபிலான நோன்பை வேண்டுமென்று முறித்தால் வேறு ஒருநாளில் அதனைக் களா செய்து விடவேண்டும். கஃப்பாரா என்னும் பரிகாரம் இல்லை. எனவே, நோன்பை முறித்து விட்டு. என்னுடன் சேர்ந்து உணவருந்தும். அதற்கு சம்மதமில்லாவிடில், நான் இப்பொழுது உணவருந்தப் போவதில்லை" என்றார்.

சகோதர வாஞ்சை மேலீட்டால் அபூதர்தாஉ ரலியல்லாஹுதஆலா அன்ஹு நோன்பை முறித்து விட்டு

அவருடன் உணவருந்தினார். இருவரும் அங்கிருந்து அளவளாவி பேசிக் கொண்டிருந்தனர். தொழுகைக்கு நேரமாயிற்று. இருவரும் மஸ்ஜிதுக்குச் சென்று தொழுதனர். மீண்டும் பேசினர். இப்படியாக அன்று முழுதும் அவ்விருவரும் பேசினர். இஷா தொழுகையையும் நிறைவேற்றினர். இரவு சாப்பாட்டை இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அருந்தினர். தூங்கும் நேரம் வந்தது. ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நோக்கி, "நீங்கள் இங்கேயே வீட்டில் தூங்குங்கள். நான் பள்ளிக்குச் செல்கிறேன். தொழ வேண்டும்" என்றார்.

"என்னை வீட்டில் தனிமையாக தூங்கச் செய்து விட்டு, நீர் பள்ளிக்கு சென்று தொழுகிறீரா? சிறிது நேரத்திற்கு முன்னர் தானே இருவரும் தொழுதோம்" என்றார் ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

"ஃபர்லுத் தொழுகை அல்ல, நஃபில் தொழுகைதான். நான் இரவில் நஃபில் தொழுகைகளை வழக்கமாக நிறைவேற்று கிறேன்" என்றார் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

"நஃபில் தொழுகையை இப்பொழுது நிறைவேற்ற வேண்டாம். என்னுடன் நீரும் இங்கு படுத்துக் கொள்ளும். பின்னர் நிறைவேற்றலாம். அப்பொழுது உம்முடன் நானும் வருகிறேன்" என்றார் ஸல்மான் ஃபார்ஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

தப்பிச் செல்வதற்கு வழியில்லை. அவரும் படுத்துக் கொண்டார். இருவரும் சயனித்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு சப்தமின்றி மெதுவாக எழுந்து மஸ்ஜிதுக்கு புறப்பட்டார். ஸல்மான்



ரலியல்லாஹு தஆலா அன்ஹு நன்றாக தூங்குகிறார் என்பது அவர் எண்ணம்.

"உடனே எங்கு செல்கிறீர். தொழுகைக்கு இன்னமும் நேரம் வரவில்லை" என்றார் ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு மீண்டும், படுத்துக் கொண்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் எழுந்தார். அப்பொழுது ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு "இன்னமும் தொழுகைக்கு நேரம் வரவில்லை, படுத்துக் கொள்" என்றார். இப்படியாக மூன்று நான்கு முறை நிகழ்ந்தது. மூன்றாவது ஜாமம் வந்தது. இரவு மணி மூன்று இருக்கலாம். அப்பொழுது ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு படுக்கையை விட்டு எழுந்து, இப்பொழுது "வாரீர், மஸ்ஜிதுக்கு சென்று தொழுவோம்" என்றார். அவரும் தயாரானார். அச்சந்தர்ப் பத்தில் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நோக்கி ஸ்ல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

وَلِرَبِّكَ حَقٌّ عَلَيْكَ وَلِنَفْسِكَ حَقٌّ عَلَيْكَ وَلِأَهْلِكَ حَقٌّ عَلَيْكَ.

"உமது ரப்புக்கு நீர் செய்ய வேண்டிய கடமை உம்மீது இருக்கிறது. உமது உடலுக்கு நீர் செய்ய வேண்டிய கடமை உம் மீதிருக்கிறது. உமது குடும்பத்திற்கு நீர் செய்ய வேண்டிய கடமை உம்மீது இருக்கிறது என்று உபதேசித்து குடும்பஸ்தன் மூன்று கடமைகளை நிறைவேற்ற வேண்டியவனாக இருக்கிறான்" என்பதை விவரித்தார்.

இருவரும் மஸ்ஜிதுக்குச் சென்று தஹஜ்ஜுதுத் தொழுது இதர வணக்கங்களையும் புரிந்தனர். ஃபஜ்ருத் தொழுகையையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சேர்ந்து இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றினர். இக்காலத்தில் நம் நாட்டில் தொழுகை முடிந்தவுடன் இமாமும் ஜமாஅத்தும் பிரிந்து சென்று விடுவதுபோல் அக்காலத்தில் பிரிந்து செல்வதில்லை. ஸஹாபிகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சிறிது நேரம் தங்குவர். ஸஹாபிகள் தங்களுக்குத் தேவையான சன்மார்க்க விளக்கங்களைக் கேட்பர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விவரித்துக் கூறுவார்கள். சிலர் தங்களுடைய கனவுகளைக் கூறி பொருள் கேட்பர். சில சமயங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்கள் கண்ட கனவுகளைக் கூறி அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்கள். சிலசமயங்களில் உபதேசமும் செய்வார்கள்.

இவ்வழக்கத்திற்கேற்ப அன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகைக்குப் பிறகு தாமதித்த சமயத்தில் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் முந்தைய நாளில் தமக்கும் ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கும் இடையில் நிகழ்ந்தவற்றைக் கூறி இறுதியில் தமக்கு ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறிய மூன்று கடமை பற்றிய மேற்கண்ட உபதேசத்தைக் குறிப்பிட்டு விளக்கம் கேட்டார். அவர் கூறியவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டு صَدَقَ سَلْمَان **"ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு மெய்யுரைத்தார்"** என்று பதிலளித்தார்கள்.



இந்த விவரத்திலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்ன வெனில் ஆடவர் திருமணத்தைத் துறந்து தனிக்கட்டையாக இருக்க வேண்டியதில்லை. திருமணம் செய்து குடும்பஸ்தர்களாக இருக்க வேண்டியதுதான். திருமணம் செய்த பின்னர் மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றாமல் பகலில் நோன்பு இரவில் வணக்கம் என்று காலத்தைக் கழிக்காமல் இறைவன் விதித்த ஃபர்லான தொழுகைகளை ஃபர்லான நோன்புகளை ஜக்காத்து ஹஜ்ஜு போன்ற கடமைகளை குறித்த காலத்தில் நிறைவேற்றி விட்டு குடும்பக் காரியங்களையும் கவனிக்க வேண்டும்.

தவிர, மனிதனுக்கு இருக்கிற உடல் அவன் தானாக உண்டாக்கிக் கொண்டதல்ல. அவ்வுடலிலுள்ள எந்த ஒரு அங்கத்தையுமோ ரோமத்தையோ மனிதனால் உண்டாக்க இயலாது. அவனுடைய உடலும் அதன் அங்கங்களும். அதிலிருக்கிற உயிரும் மனிதனுக்கு இரவலாக இறைவனால் கொடுக்கப்பட்டவை. அவற்றை அவன் இறைவனின் கட்டளைக்கும் விருப்பத்திற்கும் உட்பட்டுத்தான் உபயோகித்துக் கொள்ள வேண்டும். அவன் இஷ்டப்பட்ட போது அவனிடம் ஒப்புவிக்கப்பட்ட இவற்றை அவன் திரும்ப எடுத்துக் கொள்வான். எனவே, அவன் கூறிய முறைப்படிதான் இவற்றை மனிதன் உபயோகிக்க வேண்டும். தவறினால் மறுமையில் விசாரணை உண்டு. எனவே, நஃபிலான வணக்கங்களைப் புரிவது சிறந்த காரியம்தான். ஆயினும் அவன் கடமையாகவுள்ள காரியங்களை நிறைவேற்றாமல், நஃபிலான வணக்கங்களைப் புரிவது சிறந்த காரியமல்ல. நஃபிலான வணக்கத்திற்கு மறுமையில் நன்மைப் பயனுண்டு. அதே சமயத்தில் கடமையைச் செய்யாமல் விட்ட குற்றத்திற்குரிய தண்டனையையும் அனுபவிக்க வேண்டும்.

எனவே, நஃபிலான வணக்கங்களை புரிவோர் தங்கள் மீதுள்ள கடமைகளை முதலாவதாக நிறைவேற்றி விட்டு அப்புறம் நஃபிலான வணக்கங்களைப் புரிவார்களாக.

திருமணம் செய்தவர் குழந்தைகளுக்கு தந்தையாக இருப்பவர் மனைவி மக்களுக்கு உணவு, உடை கொடுத்து அவர்களை போஷிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அதே நேரத்தில் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளாகிய தொழுகை நோன்பு போன்ற கடமைகளைச் செய்கிறார்களா என்று கண்காணித்து இவற்றை நிறைவேற்றுமாறு செய்ய வேண்டும். தேவையான அளவிற்கு சன்மார்க்க அறிவைப் புகட்ட வேண்டும். சன்மார்க்க பக்தியில் ஆர்வமுள்ளவர்களாக்க வேண்டும். இஸ்லாமிய பண்பாட்டில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். இஸ்லாமிய கொள்கைக்கும் நடைமுறைக்கும் விரோதமானவற்றில் அவர்கள் ஈடுபடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இக்கடமைகள் குடும்பத்தலைவனுக்கு இருக்கிற நிலையில் அவர் இவற்றைக் கவனிக்காமல் பகலெல்லாம் நஃபில் நோன்பு நோற்றுக் கொண்டும் நஃபில் தொழுகைகளில் இரவு பகலெல்லாம் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அவர் இறைவனின் திருப்தியை அடைவதற்குப் பதிலாக அதிருப்திக்குத்தான் ஆளாகிறார். இந்த உண்மையைத் தான் ஹளரத் அபூதர்தாஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு ஸல்மான் ஃபாரிஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நினைவு படுத்தினார்கள். இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **ஸல்மான் உண்மையுரைத்தார்** என்று கூறி ஊர்ஜிதம் செய்தார்கள். இக்கடமைகளை நிறைவேற்ற உடல் நலம், உடல் வலிமை



தேவையான அளவுக்கு இருக்க வேண்டியது அவசியம். எனவே, தன் உடலைப் பாதுகாத்துக் கொள்வது கடமை. வருடமெல்லாம் நஃபில் நோன்பு நோற்றுக் கொண்டு தேவையான அளவுக்கு தூங்காமல் வணக்கத்தில் ஈடுபடுவது நாளடைவில் உடல் வலிமையைக் குன்றச் செய்து நோய்கள் வருவதற்கு இடம் கொடுக்கும்.

குடும்ப பாரம் இல்லாதவர்கள், குடும்பஸ்தர்கள் ஆகுவதற்கு வாய்ப்பும் வசதியும் பெறாதவர்கள் தினசரி நோன்பு நோற்பதும், தேவையான குறைந்த பட்ச அளவிற்கு தூங்கி விட்டு அதிகமான நேரங்களில் வணக்கங்களிலும் திக்ரு முழக்கத்திலும் இருப்பது குற்றமல்ல. இவர்களைத் தவிரவுள்ளவர்கள் இவ்விதமாக வாழ்வது இஸ்லாமிய சித்தாந்தத்துக்கு விரோதமாகும். لَا رَهْبَانِيَّةَ فِي الدِّيْنِ **சன்மார்க்கத்தில் சந்நியாசம் இல்லை** என்பது ஹதீஸ். மனிதரை இவ்வுலகில் படைத்த அல்லாஹ், அவர்கள் பலுகிப் பெருகுவதற்காக ஆண் பெண் என்று இரண்டு ஜாதிகளாக்கி இருவருக்கும் பசி தாகத்தைக் கொடுத்து உண்ணவும் உறங்கவும் தேவையுள்ளவர்களாக்கி இச்சையை இருபாலரிலும் அமைத்து அதன்மூலம் மனித சமுதாயம் பெருகுவதை ஏற்படுத்தியுள்ளான். உண்ணவும் பருக்வும் உறங்கவும் செய்கிற மனிதன் தன் உடலில் உற்பத்தியாகிற இச்சையை அதற்கென ஏற்பட்ட முறையில் தணித்துக் கொள்ளாதிருந்தால் அது உடல் நலத்தைக் கெடுக்கும். இதனை உத்தேசித்து குறுக்கு வழியில் இச்சையை தணித்தால் அது ரஹ்மான் ஜல்லா ஷானுஹுவதஆலாவின் கோபத்தை வருவிக்கும். எனவே, அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள முறையில் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்று அவர்களை

காப்பதற்காக உழைத்து சம்பாதித்து நியாயமான முறையில் அவர்களை வளர்த்து வாலிபமாக்கி அவர்களை குடும்பஸ்தர் ஆக்குவதுதான் மனிதனை படைத்ததன் நோக்கம். சரீர இச்சையை தணிப்பதற்காக திருமணம் செய்து, பிரஜா உற்பத்தியை தடுக்க செயற்கை உபாயங்களை கையாள்வதும் தவறு. இவை யாவற்றையும் மனிதன் சிந்திக்க வேண்டும்.

பெண் ஒரு ஆடவனை மணந்து மனைவி என்ற அந்தஸ்திற்கு வந்தால், இல்வாழ்க்கையில் கணவனுக்குத் துணைவியாகிறாள். கணவனின் இன்ப துன்பங்களையும் சுக துக்கங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறின்றி பெண் உரிமை என்ற பெயரில் கணவனுக்கு பலவிதத்திலும் தொல்லைகளைக் கொடுத்து குடும்ப வாழ்வை நரக வாழ்வாக மாற்றுவதும், கணவனின் பொருள்களை வீண் செலவு செய்து கணவனை கடன்காரனாக்குவதும், குழந்தைகளை சரியான முறையில் பரிபாலனம் செய்யாதிருப்பதும் தவறு. குழந்தை பிறந்தால் அதற்கு ஆரம்பத்தில் அமுதூட்டி குறிப்பிட்ட வயது வரை கவனமாக வளர்த்தல் தாயின் கடமையாகும். தந்தை வெளியில் சென்று சம்பாதிக்க வேண்டியதிருப்பதால் குழந்தையை இளமையில் பரிபாலனம் செய்ய தந்தையால் இயலாது. இதற்காக வேறு ஒருவரிடம் குழந்தையை ஒப்புவித்தால் பணச் செலவைத் தவிர பரிபாலனம் பரிபூரணமாக இருக்காது. இதனைத் தான் இந்த ஹதீஸிலுள்ள கணவனின் வீட்டுக்கும் அவரின் குழந்தைகளுக்கும் மனைவி பொறுப்பாளி. இதில் அலட்சியம் செய்தால் மறுமையில் அவள் விசாரிக்கப்படுவாள் என்ற வாசகம் சுட்டிக் காட்டுகிறது.



இக்காலத்துப் பெண்களில் பெரும்பாலர் இப்பொறுப்பு களை உணர்ந்து செயலாற்றுவதாகத் தெரியவில்லை. சின்னத்திரை, பெரியதிரை, நாடகம் கூத்து மேடைகளுக்கு தங்கள் மக்களையும் கூட அழைத்துக் கொண்டு செல்வது சர்வ சாதாரணமாகி விட்டது. சிற்சில இடங்களில் சில பெண்கள் கூட்டுச் சேர்ந்து நகரங்களிலுள்ள ஹோட்டல் அறைகளையோ தெருக்களிலுள்ள காலி வீடுகளை மாத வாடகைக்கு எடுத்துக் கொண்டு இரவு நேரங்களில் சினிமா பார்த்து விட்டு அங்கு தங்கி விட்டு மறுநாள் வீடு திரும்புகின்றனர் என்ற பேச்சு பல இடங்களிலும் அடிபடுகிறது. வெளியூர்களில் வர்த்தகம் தொழில் களைச் செய்கிற கணவன்மார்களில் பலர் தங்கள் இருக்கும் இடங்களுக்கு மனைவியரையும் அழைத்து சென்று குடித்தனம் செய்யாமல் தங்களுடைய சொந்த ஊர்களிலேயே அவர்களை விட்டுச் செல்கின்றனர். தங்கள் மனைவியர் தங்களை விட்டுப் பிரிந்திருப்பதால் அவர்களுக்கு அதிருப்தி ஏற்படலாகாது என்பதற்காக அவர்கள் கேட்பவைகளை தாராளமாகக் கொடுத்து, அவற்றைப் பற்றி கணக்கு கேட்காமலும் இருந்து விடுகின்றனர். சில பெண்கள் நோய் என்று பொய் வேஷம் போட்டு பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப் போவதாகக் கூறி பெரிய நகரங்களுக்குச் சென்று சினிமாக்களையும் கூத்து மேடை களையும் தரிசிக்கின்றனர். சிலர் தர்காக்களுக்குச் சென்று நாற்பது நாள் இரண்டு மாதம் மூன்று மாதங்கள் என்று தங்குவதாக சாக்கு போக்குச் சொல்லி இவ்வாறான காரியங் களைச் செய்வதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வாறான பழிச் சொற்கள் வருவதற்குக் காரணம் மஹ்ரமான ஆடவரின் துணையின்றி பெண்கள் வெளியிடங்கள் சென்று தங்குவதும் அடக்கமின்றிச் சுற்றுவதும் தான் காரணம்.

சில வாலிபக் கணவர்கள் சன்மார்க்க அறிவின்மையின் காரணமாக தங்களுடைய மனைவியரை வெளியில் அழைத்துச் சென்று ஏனைய சமூகத்தாரைப் போல் உடையணிந்து ஜோடியாக உலாவுதல், கைகோர்த்துக் கொண்டு நடமாடுதல், சினிமாவுக்கும் கூத்து மேடைகளுக்கும் கூட்டிச் செல்லல் போன்ற காரியங்களால் முஸ்லிம் பெண்களுக்கு இயற்கையாக இருந்த நாணம், கூச்சம், சன்மார்க்க பக்தி போன்ற நற்குணங்களைக் கெடுத்து விடுகிறார்கள். கணவர்களுடன் சேர்ந்து சென்று பழகிய இவர்கள் தன்னந் தனியாக இவற்றைச் செய்யவும் துணிந்து விடுகிறார்கள். இவை யாவும் குடும்பத் தலைவனும் தலைவியும் தங்களுடைய பொறுப்பு என்ன வென்பதை உணராமலிருப்பதேயாகும். இவற்றைப் பற்றியெல்லாம் இறுதி நாளில் அவர்கள் விசாரிக்கப் படுவார்கள். அங்கு தயை காட்டப்படமாட்டாது. பொய் சாக்குப் போக்குகள் கூறித் தப்பித்துக் கொள்ளவும் இயலாது. பணங்காசு களை லஞ்சம் கொடுத்து நீதிபதியை வசப்படுத்தவும் இயலாது என்பதை திருக்குர்ஆனும் ஹதீஸ்களும் பல இடங்களில் தெளிவுபடுத்தி இருக்கின்றன. இதனை முஸ்லிம்களாகிய நாம் நன்கு தெரிந்திருக்கிறோம்.

عن أبي هريرة رضي الله تعالى عنه كان يحدث قَالَ النبي صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَا مِنْ مَوْلُودٍ إِلاَّ يُولَدُ عَلَى الْفِطْرَةِ فَأَبَوَاهُ يُهَوِّدَانِهِ أَوْ يُنَصِّرَانِهِ أَوْ يُمَجِّسَانِهِ كَمَا تُنْتَجُ الْبَهِيمَةُ بَهِيمَةً جَمْعَاءَ هَلْ تُحِسُّونَ فِيهَا مِنْ جَدْعَاءَ. ثُمَّ يَقُولُ ابو هُرَيْرَةَ رضي الله تعالى عنه فِطْرَةَ اللَّهِ الَّتِي فَطَرَ النَّاسَ عَلَيْهَا (لاَ تَبْدِيلَ لِخَلْقِ اللَّهِ ذَلِكَ الدِّينُ الْقَيِّمُ) رواه البخاري ومسلم.



**"இயற்கைப் படியல்லாமல் எந்தக் குழந்தையும் பிறப்பதில்லை. அவருடைய பெற்றோர்கள் அவரை யூதராக்கு கின்றனர் அல்லது கிறிஸ்துவராக்குகின்றனர் அல்லது மஜூஸியராக்குகின்றனர் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். பிராணி அங்கஹீனமில்லாத குட்டியை ஈனுவதுபோல அதில் அவர்கள் காது அறுபட்டிருப்பதை உணர்வார்களா? பின்னர், அல்லாஹ்வின் இயற்கை அதன்படி தான் மனிதனைப் படைத்தான். அல்லாஹ்வின் படைப்பில் மாற்றமில்லை. அதுதான் நிலையான மார்க்கம்"** என்ற ஆயத்தை ஓதினார்கள்.

அறிவிப்பவர்:- அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

பிராணிகள் அங்கஹீனமில்லாத குட்டிகளை ஈனுகின்றன. அவற்றில் காது அறுக்கப்பட்டனவாகக் காண முடியாது. குட்டிகள் பிறந்த பிறகு குறிப்பிட்ட வயதுக்கு வந்த பிறகு அவற்றிற்கு உரிமையுள்ள மனிதன் அவற்றின் காதுகளை அறுத்து பழுதாக்குகிறான். இதுபோல மனிதருக்குப் பிறக்கும் குழந்தைகளும் பழுதற்றனவாகப் பிறக்கின்றன. பெற்றோர்கள் தான் முதலாவதாக பேசக் கற்றுக் கொடுக்கின்றனர். யூத மதத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு யூத மத பக்தியை ஊட்டி யூதர்களாக்குகின்றனர். கிறிஸ்துவப் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்கு கிறிஸ்துவ மத அறிவையூட்டி கிறிஸ்துவராக்கு கின்றனர். மஜூஸியப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மஜூஸி மதபக்தியை ஊட்டி மஜூஸியராக்குகின்றனர் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிவிட்டு

இயற்கையைப் பற்றி அருளப்பட்ட திருக்குர்ஆன் ஆயத்தையும் ஓதிக் காட்டினார்கள் என்பது இந்த ஹதீஸின் சாரம்.

குழந்தைகள் யாவும் இயற்கைப் படி தான் அதாவது எந்த மொழியையும் பேசத் தெரியாதவர்களாகவும் எந்தக் கல்வி யுமில்லாதவர்களாகவும், எந்த அறிவுமற்றவராகவும், எந்தப் பாவத்தையுமோ நன்மையையுமோ செய்ய முடியாதவராகவும் பிறக்கின்றனர். பெற்றோர்கள் எதைக் கற்பிக்கின்றனரோ அதைத் தான் அவர்கள் கற்றுக் கொள்கின்றனர். எந்த பக்தியில் பண்பாட்டில் அவர்கள் வளர்க்கிறார்களோ அதில் தான் அவர்கள் வளருகின்றனர். பள்ளிக்குச் சென்று படிக்கும் வயதை அவர்கள் அடைந்தால் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். அங்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் சக மாணவர்கள் எந்தெந்த கொள்கை யிலும் பழக்க வழக்கத்திலுமிருக்கிறார்களோ அந்தக் கொள்கை களிலும் பழக்க வழக்கத்திலும் பரிச்சியம் அடைகின்றனர். மேற்படிப்புக்கு வந்து சுயேச்சையாக செயல்படும் வயதை அடைந்ததும் தங்களுக்கென தனிவழியில் செல்கின்றனர். இதனை இந்த ஹதீஸ் உணர்த்துகின்றது. எனவே, முஸ்லிமாக இருக்கிற பெற்றோர்கள் தங்கள் மக்களை முஸ்லிம்களாக வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும். இஸ்லாமியப் பண்பாட்டில் வளர்க்க வேண்டும். சன்மார்க்க அறிவும் சன்மார்க்க பக்தியும் உள்ளவர்களாக திகழச் செய்ய வேண்டும். இது அவர்களின் பொறுப்பு. இதனை உணர்ந்து செயலாற்றத் தவறினால் மறுமையில் இறைவனால் விசாரிக்கப்பட்டு தண்டனையடைவர்.

முற்காலத்தில் நமது நாட்டில் முஸ்லிம் மன்னர்கள் இருந்தனர். ஆரம்பத்தில் இஸ்லாமிய ஆட்சியும் இருந்தது. பின்னர் முஸ்லிம் மன்னர்கள் இருந்தனர். ஆயினும், அவர்கள்



ஷியா வகுப்பினராக இருந்ததால், இந்த ஹதீஸில் அறிவிக்கப் பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தேவையான அளவிற்கு கவனம் செலுத்தாமல் உலகாதாய அரசுகளை அமைத்து ஆட்சி புரியத் தொடங்கினர். இதன் பலன் இந்தியாவிலிருந்து இஸ்லாமிய ஆட்சியும் முஸ்லிம் அரசாங்கமும் ஒழிந்தன. அந்நிய நாட்டாரின் ஆட்சிக்கு உட்பட நேர்ந்தது. அவர்கள் இந்தியாவில் வாழ்கிற யாவருக்கும் மத சுதந்திரம் உண்டு. அவர்களின் மத உரிமைகளில் அரசாங்கம் தலையிடாது. இந்தியாவில் வாழ்கிற எந்த சமூகத்திற்கும் மத விஷயத்தில் அரசாங்கம் தனிச் சலுகை காட்டாது. அனைவரிடத்திலும் சமமாக நடந்து கொள்ளும் என்று அக்காலத்து வெளிநாட்டு அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தவுடன் பிரகடனம் செய்தது.

அந்நிய நாட்டார் ஆதிக்கத்துக்கு வந்தால், பிரஜைகளில் ஒரு வகுப்பாருக்கு மட்டிலும் விசேஷ சலுகை அளிப்பது ஏனைய சமூகங்களுக்கு விரோதத்தை உண்டு பண்ணும். எனவே, யாவரிடத்திலும் சமமாக நடந்து கொள்வதாக பொது அறிக்கை விடுத்து, அதனை செயல்படுத்துவது தான் முறை. இது பொது மக்களின் அன்பை உற்பத்தி செய்யும். துவேஷத்தையும் பகையையும் குறைக்கும். என்றாலும், இவ்வறிக்கையை அடிப்படையாக வைத்து மத விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கியதுடன், பிரஜைகளிலுள்ள மதப் புரட்டர்களை அடக்காமல் ஒதுங்கி இருந்தது. இதன் காரணமாக இந்தியாவில் வாழ்கிற சகல சமூக மக்களும் தங்களின் மதாசாரங்களை நிறைவேற்றுவதில் பின்தங்கினர். மதபக்தியும் கூட குறைந்தது.

இந்நிலையில் ஆட்சி புரியும் அந்நிய நாட்டார் தங்கள் நாட்டு மொழியை இந்நாட்டில் அரசாங்க மொழியாக ஏற்படுத்தி,

அம்மொழியை இந்த நாட்டு சுதேசிகளுக்கு கற்பிப்பதற்காக பள்ளிக் கூடங்களையும் கல்லூரிகளையும், உருவாக்கியதுடன், மேற்படிப்புகளை கற்க தங்கள் நாட்டிற்கு மாணவர்கள் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். அத்துடன் கல்வித் திட்டத்தையும் பாடப் புத்தகங்களையும் தங்கள் நலத்திற் கியைந்தவாறு அமைத்து தங்கள் நாட்டு ஆசாரங்களில் பற்றும் பாசமும் ஏற்பட வகை செய்தனர். இதன் பலனாக வெளி நாட்டு நாகரீகம் இந்நாட்டு மக்களிடம் பரவத் தொடங்கிற்று. இதனை உணர்ந்த இந்நாட்டு மக்கள் தங்கள் மத ஆசாரங்களும் பழக்க வழக்கங்களும் அழியாமல் இருப்பதற்காக தங்களின் சமூக பள்ளிக் கூடங்களையும் வித்தியாலங்களையும் அமைத்தனர். இவற்றிற்கு அரசாங்கத்திலிருந்து நிதியுதவி கிடைக்கவில்லை. தங்கள் சமூகத்தாரின் நன்கொடைகளிலிருந்தும் தர்ம ஸ்தாபனங்களிலிருந்தும் உதவி பெற்று நடத்தினர்.

இதன் பலன் தான் தற்போதுள்ள குர்ஆன் மத்ரஸாக்கள் என்னும் மக்தபுகளும், அரபி மத்ரஸாக்களும், ஜாமிஆ என்னும் தஹ்ஸீல் மத்ரஸாக்களும். இவற்றில் கல்வி போதிக்க என்று அக்காலத்திலேயே மார்க்கக் கல்வித் திட்டமும் அதற்கியைந்த பாடப்புத்தகங்களும் அமைக்கப்பட்டன. இவை மார்க்கக் கல்வியை மட்டும் போதிக்கிற ஸ்தாபனங்களாக இருப்பதால் இதில் கல்வி பயிலுவோருக்கு அரசாங்கத்தில் பதவி கிடைப்பதில்லை. வர்த்தகம் தொழில் போன்ற ஸ்தாபனங்களில் இடம் கிடைப்ப தில்லை. இவற்றில் இடங்கிடைக்கத் தக்கவாறு இக்கல்வித் திட்டம் அமைக்கப் படவுமில்லை. மஸ்ஜிதுகளில் இமாமாக இருத்தல், பொது மக்களுக்கு சன்மார்க்க உபதேசம் செய்தல், மார்க்க விஷயத்தில் ஏற்படுகிற சிக்கல்களுக்கு விளக்கம் சொல்லல்,



மார்க்கக் கல்வியை போதிக்கும் ஆசிரியர்களை தயார் செய்தல் ஆகிய இந்நான்கு காரியங்களுக்கும் தேவையான, இமாம், முதர்ரிஸ், வாயிஜ், முஃப்தி ஆகியவர்களை இக்கல்வித் திட்டம் உற்பத்தி செய்ததால் பணக்கார வர்க்கம், நடுத்தர வர்க்கம் ஆகிய இரண்டிலு முள்ளவர்கள் இக்கல்வி ஸ்தாபனங்களில் கல்வி பயில ஆர்வம் கொள்ளவில்லை. ஏழை மக்கள்தான் பெரும்பாலும் இக்கல்வியில் ஆர்வம் கொண்டு பயின்றதுடன் இந்நான்கு வகைச் சேவைகளையும் செய்தனர். இதனால், சன்மார்க்க பக்தர்களை வளர்க்கவோ இஸ்லாமியப் பண்பாடுள்ளவர்களை பெருக்கவோ இவர்களால் இயலவில்லை. என்றாலும், இவைகள் முற்றிலும் மடிந்து விடாமல் அவற்றிற்கு உயிர் கொடுத்துக் காப்பாற்றிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அந்நிய அரசாங்கம் இந்த நாட்டை விட்டகன்றது. இந்நாட்டு மக்களே நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். என்றாலும், இந்நாட்டில் ஹிந்து, முஸ்லிம் கிறிஸ்துவ சமூகங்களும் இதர பல சமூகங்களும் வாழ்வதால் அந்நிய அரசாங்கம் ஏற்படுத்திய கல்வித் திட்டத்தை அடியுடன் மாற்ற தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இயலவில்லை. அதே தண்டவாளத்தின் மீது தான் தங்களுடைய புகை வண்டியை ஓட்டுகின்றனர். எனவே, அரசாங்க உதவியுடன் சமூக ஸ்தாபனங்கள் இயங்க இடங் கிடைக்கவில்லை. எனவே. முஸ்லிம்களாகிய நாம் நமது சந்ததியினர் யூதர் கிறிஸ்துவர் மஜூஸியராக மாறாமல் முஸ்லிம்களாக வாழ்வதற்கான ஏற்பாட்டை நாம் செய்து கொள்ள வேண்டும். இதில் சோம்பி இருந்தால் நாம் அனைவரும் இறுதி நாளில் விசாரணைக்கு உட்பட்டு தண்டிக்கப்படுவது திண்ணம்.

இதனைக் கருதியே கடந்த 1968ம் வருடத்தில் **முஸ்லிம்களுக்கு ஓர் வேண்டுகோள்** என்ற பெயரில் சில பெரியார்கள் கையொப்பமிட்டு ஒரு கூட்டு அறிக்கையை விடுத்தனர். அதில் கையொப்பமிட்டவர்களில் அடியேனும் ஒருவன். தேவையானவர்கள் என்னிடம் பெற்றுக் கொள்ளலாம். இதனை படித்து விட்டு அமைதியாக இருந்து விடாமல் நம் சிறார்களின் சன்மார்க்க வாழ்விற்காக தங்களால் இயன்ற முயற்சியை செயல் வடிவில் கொண்டு வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். பணக்காரர்கள் செய்வார்கள் என்று ஏழைகள் மௌனமாக இருப்பதும், படித்தவர்கள் செய்வார்கள் என்று வர்த்தகர்களும் தொழிலதிபர்களும் மௌனமாக இருப்பதும் நாங்கள் ஏழைகள் பொருள் இல்லாமல் எதுவும் இயலாதென ஏழைகள் இயம்புவதும், ஆலிம்கள் அசிரத்தையாக இருக்கிறார்கள் என்று அவர்கள் மீது மற்றவர்கள் பழிபோடுவதும் இந்த உலகில் வேண்டுமானால் விலை போகலாம். மறு உலகில் இவற்றிற்கு விலையில்லை. அங்கு அனைவரும் அகப்பட்டுக் கொள்ள நேரிடும். எனவே, ஒவ்வொருவரும் அவரவரால் இயன்ற முயற்சியை தனித்தனியாகவும் கூட்டாகச் சேர்ந்தும் செய்து, மெய்யான நீதிபதியான அல்லாஹ்வின் திருப்தியைச் சம்பாதிப்போமாக.

அடிமை தன்னுடைய எஜமானரின் பொருளுக்கு பொறுப்பாளி என்று இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகத்தை நாம் கவனிக்கவேண்டும். இந்த நாட்டில் ஆட்சி புரிந்த அந்நிய அரசாங்கம் கடந்த 19வது நூற்றாண்டின் மத்தியில் அடிமை ஒழிப்புச் சட்டத்தை செயல்படுத்தும் வரையில் நம்நாட்டிலும் அடிமை வழக்கம் இருந்தது. இச்சட்டம் செயல்படுத்தப்பட்டதால் இப்பொழுது இங்கு அடிமை இல்லாவிடினும், இவர்களின் ஸ்தானத்தில் தொழிலாளர்களும் எஜமானர்களின் ஸ்தானத்தில் தொழிலதிபர்களும் இருந்து



வருகின்றனர். எனவே, தொழிலாளர்கள் தொழில் வளத்திற்குரிய தங்கள் கடமையைச் செய்ய வேண்டும். தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்கு செய்ய வேண்டிய தங்கள் கடமையைச் செய்ய வேண்டும். தங்களுடைய கடமையைச் செய்யாமல் தங்களுடைய உரிமைகளை வற்புறுத்தி உரிமைப் போராட்டத்தை எவர் தூண்டினாலும் செய்தாலும் மறுமையில் அவர் விசாரிக்கப் படுவார் என்பதை மறக்கலாகாது.

இந்த ஹதீஸ் முழுவதும் கடமையைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியே கூறுகிறது. உரிமைக்குப் போராடுமாறு கூறவில்லை. இஸ்லாம் உலக மன்பதைகளுக்கு அவர்களுடைய கடமையைத் தான் நினைவூட்டுகிறது. ஒவ்வொருவரும் தம்முடைய கடமையை பூரணமாக நிறைவேற்றிவிட்டால் உரிமைப் போராட்டத்திற்கு இடமில்லை என்பது நினைவு கூரத்தக்கது.

أَلاَ وَ إِنَّ فِي الْجَسَدِ مُضْغَةً إِذَا صَلُحَتْ صَلُحَ الْجَسَدُ
فَسَدَتْ فَسَدَ الْجَسَدُ كُلُّهُ أَلاَ وَهِيَ الْقَلْبُ.

மேலேயுள்ள ஆறாவது ஹதீஸின் கடைசி வாசகம் உடலில் ஒரு தசைக்கட்டி இருக்கிறது. அது நன்றாக இருந்தால் உடல் முழுதும் நன்றாக இருக்கும். அது கெட்டுப் போனால் உடல் முழுதும் கெட்டு விடும் என்பதாகும்.

மனிதனுக்கு இருதயம் பிரதானமானது. அது நல்ல நிலையில் இருந்தால் உடலில் நோய் நொடி இருக்காது. அது கெட்டு விட்டால் உடலில் பலவிதமான நோய்கள் ஏற்படுவதை நாம் நேரில் பார்த்தும், கேள்விப்பட்டும் நன்கு தெரிந்தும் இருக்கிறோம். அனுபவத்திலும் இதனை உணர்ந்தும் இருக்கிறோம்.

மருத்துவர்கள் நம்மைப் பார்க்கினும் இவ்வுண்மையை நன்கு புரிந்திருக்கின்றனர். இதனை பிறருக்கு நம்மைப் பார்க்கினும் அதிக திறமையுடன் விளக்கிக் கூறுவர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஏனைய நபிமார்களும் ஒலிமார்களும் மார்க்க அறிஞர்களும் மருத்துவர்கள் தாம். இக்காலத்து மருத்துவர்கள் உடலுக்கு சிகிச்சை செய்பவர்கள். மேற்கண்ட மருத்துவர்கள் உடலுக்கு சிகிச்சை செய்வதில்லை. உயிருக்கு சிசிக்சை செய்பவர்கள். இப்புற உடலுக்கு சிகிச்சை செய்பவர்களுக்கு ஹக்கீமுல் அப்தான் என்று பெயர். ஆன்மாவுக்கு சிகிச்சை செய்கிற நபிமார்கள் ஒலிமார்கள் உலமாயே ரப்பானிகளுக்கு ஹக்கீமுல் அர்வாஹ் என்று பெயர். இந்த வாசகம் ஹக்கீமுல் அர்வாஹ் என்ற முறையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திரு நாவிலிருந்து வெளியானது.

மனிதன் கோழையாக இருக்கிறான். முரடனாக இருக்கிறான். கெட்டவனாக இருக்கிறான். பொய்யனாக இருக்கிறான். திருடனாக இருக்கிறான். இவர்களைப் போல் சன்மார்க்கத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்வோர் யாவரும் ஆத்மார்த்தமான அகநோயாளிகள். தர்மம், ஈகை, நற்குண நல்லொழுக்கங்கள் யாவும் ஆத்மார்த்தமான அகநோய் இல்லாதவர் என்பதை காட்டுபவன். இவை யாவற்றுக்கும் உற்பத்தி ஸ்தாபனம் இதயம்தான். இதனை கல்பு என்று அரபியில் கூறுவர். சிலர் நஃப்ஸு என்றும் கூறுவர்.

அகநோய் மருத்துவர்களான ஒலிமார்களும் நபிமார் களும் இந்த நஃப்ஸை ஏழுவகைகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பெயரிட்டிருக்கின்றனர். அவை



வருமாறு:- النفس الأمارة அன்னஃப்ஸுல் அம்மாறா, النفس المطمئنة அன்னஃப்ஸுல் முத்மஇன்னா, النفس اللوامة அன்னஃப்ஸுல்லவ்வாமா. النفس الملهمة அன்னஃப்ஸுல் முல்ஹிமா, النفس الراضية அன்னஃப்ஸுர்ராளிய்யா, النفس المرضية அன்னஃப்ஸுல் மர்ளிய்யா, النفس الكاملة அன்னஃப்ஸுல் காமிலா.

இவ்வேழு வகைக் கல்புகளும் ஒரு இதயத்தினுள் ஏழு பிரிவுகளாக இருக்கின்றன. என்றோ, இவை ஒவ்வொரு மனிதருக்கும் இருக்கின்றன என்றோ கொள்ளலாகாது. ஒருவருக்கு ஒரு கல்பு தான் இருக்கிறது. அந்த ஒரு கல்பில் ஏழு விதமான நிலைகளை இந்தப் பெயர்கள் குறிப்பிடுகின்றன. மனிதனுக்குச் சில சமயங்களில் பாவமான காரியங்களில் சன்மார்க்கத்திற்கு விரோதமான காரியங்களில் ஆர்வம் உண்டாகும். இவ்வாறான நேரங்களில் மனித இதயத்திற்கு நஃப்ஸுல் அம்மாரா அதாவது தீமையைச் செய்யுமாறு மனிதனைத் தூண்டுகிற நஃப்ஸு என்று பெயர். 2. மனக் கிளர்ச்சியால் மனிதன் பாவத்தைச் செய்த பிறகு இந்தக் காரியத்தை ஏன் செய்தோம். இது அல்லாஹ்விற்கு அதிருப்தியை உண்டாக்குமே என்று மனச்சாட்சி மனிதனை நிந்திக்கும். இவ்வித சிந்தனை ஏற்படும் போது மனிதன் பிறர் தூண்டுதலின்றி தன்னைத்தானே நிந்தித்துக் கொள்வான். இந்த நிலையில் கல்புக்கு நஃப்ஸுல் லவ்வாமா (நிந்திக்கும் நஃப்ஸு) என்று பெயர்.

பாவம் செய்யக் கூடாது என்ற ஆர்வமுள்ள மனிதர் பாவத்தைச் செய்து விட்டு. பின்னர் மனம் வருந்தி தௌபா இஸ்திஃபாரும் செய்து. இனிமேல் மீண்டும் அப்பாவத்தைச் செய்வதில்லை என்று உறுதியும் கொள்கிறார். பின்னர் மீண்டும்

அதே பாவத்தைச் செய்து விடுகிறார். இவ்விதமாக பலமுறை செய்த பின்னர் அவரது மனநிலையில் ஒருவிதமான மாறுதல் ஏற்பட்டு பாவம் செய்யக் கூடாது என்ற உறுதியுடனிருக்கிறேன். ஆயினும் மீண்டும் மீண்டும் பாவம் நிகழ்ந்து விடுகிறது. மனதைக் கட்டுப்படுத்துவது எனது சக்திக்கும் மீறியதாக இருக்கிறது. இதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று ஒருவிதமான அமைதிநிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த நேரத்தில் கல்புக்கு நஃப்ஸுல் முத்மஇன்னா (அமைதியான இதயம்) என்ற பெயர் வருகிறது.

இதன் பின்னர் அவருக்கு ஒரு விதமான உணர்வு விளக்கம் ஞானம் திடீரென ஏற்படுகிறது. இவ்வாறான நேரத்தில் இதற்கு நஃப்ஸுல் முல்ஹிமா (ஞானோதய நஃப்ஸு) என்று பெயர்.

பின்னர், அவருக்கு உலகில் நிகழ்வனவற்றைப் பார்த்தும் தனக்கு சம்பவிப்பதை அனுபவித்து ஆரம்பத்தில் துன்பமாகத் தோன்றியவை பின்னர் இன்பமாக மாறுவதையும் தெரிந்ததன் காரணமாக துன்பமோ இன்பமோ எது வந்தாலும் ஏற்றுக் கொள்வோம். அல்லாஹ்வின் செய்கைக்கு மனப்பூர்வமாகத் தலைசாய்க்க வேண்டியது தான் என்ற நிலைக்கு மனிதன் வரும்போது அதற்கு நஃப்ஸுர் ராளிய்யா (பொருந்திக் கொள்ளக் கூடிய நஃப்ஸ்) என்று பெயர்.

அல்லாஹ்வின் செய்கைக்கு அது துன்பமாகத் தோன்றினாலும் இன்பமாகத் தோன்றினாலும் மனப் பூர்வமாக ஏற்று மகிழ்கிற மனிதன் பால் அல்லாஹ்விற்கு, சந்தோஷமும் திருப்தியும் ஏற்பட்டு விடும். இந்த நிலையில் அவருடைய மனத்திற்கு நஃப்ஸுல் மர்ளிய்யா (திருப்தி அடைந்த மனம்) என்ற பெயர் ஏற்படுகிறது.



இவ்வாறான நிலையை அடைந்த பின்னர் உயர் நிலையை அடைந்த கல்புக்கு அந்நஃப்ஸுல் காமிலா (பரிபூரண நிலையை அடைந்த மனம்) என்று பெயர். இவற்றில் நான்காவது நிலையை அடைந்ததிலிருந்து ஏழாவது நிலையை அடையும் வரை ஞான விளக்கங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். அற்புதங்களும் கூட வெளியாகலாம். ஆயினும், இந்த நிலைகளில் உள்ளவர்கள் ஒலியாக இல்லை. வலிமார்களுக்கு உரிய விலாயத்தும் கிடைக்கவில்லை. பரமார்த்திகத் துறையிலுள்ள அறிவைப் பெறாத சாமான்யர்கள் இவர்களை ஒலி என்றும் குத்துபு என்றும் தங்கள் மனம் போக்கில் ஏற்றிப் போற்றுவர். ஆயினும், இது ஞான வழியில் செல்கிற ஸாலிஹுக்குப் பெரும் சோதனை யாகும். அறியாத மக்களின் புகழ் மொழிகளைக் கேட்டு ஸாலிக்கானவர் மகிழ்ந்து தனக்கு பதவி கிடைத்ததாக பெருமை கொள்வாராயின் அது வரை அவர் அடைந்த ஆத்மார்த்த அந்தஸ்துக்களையும் பறி கொடுத்து கீழ்த்தரத்துக்கு தள்ளப்பட்டு விடுவார். இது சம்பந்தமான விரிவான விளக்கங்களை **அல்அன்வார், அகத்தூய்மை** என்ற பெயர்களால் நாம் எழுதியுள்ள நூல்களில் காணலாம்.

மேலே சொல்லப்பட்ட ஏழுவகை நிலைகளுக்கும் தகுந்த திக்ரு இஸ்லாமிய ஞானநூல்களில் காணப்படுகின்றன. லாஇலாஹ இல்லல்லாஹு என்ற திருக்கலிமாவும் திக்ரு இனத்தைச் சேர்ந்ததே. இந்த வாசகத்தை திக்ராக குறிப்பிட்ட முறைப்படி ஜபித்தால் நஃப்ஸுல் அம்மாறாவின் சேஷ்டைகளை அடக்கி விடலாம்.

இந்த திக்ருக்கு அடுத்தபடியாக உள்ளது. அல்லாஹ் அல்லாஹ் என்ற திக்ராகும். நஃப்ஸுல் அம்மாராவை விட்டுக்

கடந்து நஃப்ஸுல் லவ்வாமாவின் நிலையில் இருப்போருக்கு இந்த திக்ரு சிறந்தது. இவ்விரண்டாவது நிலையில் இந்த திக்ரை செய்து மூன்றாவது நிலையை அடைந்தவர்கள். ஹூ ஹூ என்ற திக்ரைச் செய்ய வேண்டும்.

இம் மூன்றும் தான் திக்ருகளில் சிறந்தவை. நஃப்ஸுல் அம்மாராவையும் நஃப்ஸுல் லவ்வாமாவையும் நஃப்ஸுல் முத்ம இன்னாவையும் திருத்தி நஃப்ஸுல் முல்ஹிமாவுக்கு இவைகள் இட்டுச் செல்கின்றன. இதற்கிடையில் மனதில் சோர்வு மன ஓர்மையின்மை முதலியவை ஏற்பட்டு மேற்கண்ட திக்ருகளின் பயன் மனிதனுக்கு ஏற்படா வண்ணம் தடைகள் வருவது உண்டு. இச்சமயங்களில் யா காதிர், யா கஹ்ஹார், யா ஜப்பார், யா லத்தீஃப் போன்ற திக்ருகளைச் செய்ய வேண்டும். இவை யாவும் மேற்கண்ட மூன்று அசல் திக்ருகளுக்கு உப திக்ருகள். இவற்றைப் பற்றிய விப்ரம் **அகத்தூய்மை** என்ற நமது நூலில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது.

இக்காலத்தில் அநேகர் முரீது கொடுப்பதாகக் கூறி முஸ்லிம் ஆண் பெண்களை வழிதவறச் செய்கின்றனர். இவர்கள் யாவருக்கும் பணம் தான் குறிக்கோள். முரீது கொடுக்கும் போது இவ்வளவு என்று ஒரு கட்டணத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர். பின்னர் ஃபாத்திஹா, திக்ரு மஜ்லிஸ் என்ற பெயரால் இடையிடையே கட்டணங்கள் வசூல் செய்யப்படுகின்றன. வருடாந்திரக் கட்டணம் என்ற பெயரில் ஒரு தொகை. இப்படியாக முரீதுகளிடம் அவர்களின் ஷெய்குமார்கள் வசூல் செய்கின்றனர். இப்பணியைச் செய்ய முரீதுகளுக்குள் சிலருக்கு கிலாஃபத் கொடுக்கின்றனர். கிலாஃபத்து பெற்ற இவர்களும் தங்கள் குருவின் பெயரால் முரீது கொடுத்து தங்கள் முரீதுகளிடம் வசூல் செய்கின்றனர். இந்நிதியில் ஒரு பகுதி அவர்களுடைய பிரதம ஷெய்குக்கு அனுப்பப்படுகிறது என்று கிலாஃபத் பெற்றவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். சில ஷெய்குகள் தங்கள் முரீதுகளிடம் எதையெதையோ சொல்லி வைத்து இதனை நீங்கள் செய்தால் போதும் என்று கூறுகின்றனர். குருவின் இவ்வுபதேசத்தை இவர்கள் பலமாகப் பிடித்துக் கொண்டு தொழுகை நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றுவதை நிறுத்தி விடுகின்றனர்.



முரீது கொடுத்தல், பைஅத்துச் செய்தல் என்று ஒன்றுண்டு. அதனை மறுப்பதற்கில்லை. என்றாலும், மேற்கண்ட விதமாக பணவசூல் வருடாந்திர மாதாந்திரக் கட்டணங்களை வசூலித்தல், இஸ்லாமின் அடிப்படை கடமைகளாகிய தொழுகை நோன்பு போன்ற கடமைகளைச் செய்வதை நிறுத்திவிடல் போன்ற காரியங்கள் மெய்யான பைஅத்தில் இல்லை. மெய்யான பைஅத்து மனிதனின் ஆத்மார்த்த நோய்களை அகற்றி அகத்தூய்மையை உண்டு பண்ணி கல்பு என்னும் இதயத்தை ஞானவழியில் திருப்பி விடக்கூடிய ஞான மார்க்கம். இது பற்றிய விவரங்களை **ஞானவழி** என்ற பெயரில் நாம் எழுதியுள்ள நூலில் காணலாம்.

முரீது கொடுத்தல் என்பது மூன்று வகை 1. பைஅத்தே ஆம், 2. பைஅத்தேகாஸ், 3. பைஅத்தே அகஸ் என்பன. பைஅத்தே ஆம் என்பது கல்வியறிவற்றவர்களுக்கு முரீது கொடுத்து விட்டு ஃபர்லு தொழுகைகளுக்குப் பின்னரோ காலை மாலை இருவேளைகளிலோ குறிப்பிட்ட ஸலவாத்து, விர்துகளை ஓதுமாறு செய்தல். பைஅத்தே காஸ் என்பது முரீதுகளில் சன்மார்க்க அறிவு இஸ்லாமியப் பண்பாடு உள்ள சில குறிப்பிட்ட நபர்களைப் பொறுக்கி எடுத்து. அவர்களுக்கு ஞான வழியிலுள்ள

சில திக்ருகளை விசேஷமாகக் கற்பித்து அவர்களை தன்னுடைய நேர்மேற்பார்வையின் கீழில் வழி நடத்தல். இவர்களுக்கு குடும்ப பழு அதிகமில்லாமலும் தேவையான ஓய்வும் மார்க்கக் கல்வி போதுமான அளவும் இருக்க வேண்டும். பைஅத்தே அகஸ் என்பது பைஅத்தே காஸ்ஸிலிருந்து சிலரைப் பொருக்கி எடுத்து கடும் ஜப தபத்தில் ஈடுபடுத்துதல். இவர்கள் இளமையிலேயே இந்தத் துறைக்காக ஒதுக்கப்படுபவர்கள். குருவுடன் வருடக் கணக்கில் தங்கி நோன்பு நோற்றல், சரீர இச்சையைத் தூண்டக் கூடிய சத்தான உணவுகளை உட்கொள்ளாதிருத்தல், நெய், பால், இறைச்சி போன்ற புலால்களைக் குறைத்தல் போன்றவற்றின் மூலம் அவர்களின் நஃப்ஸுல் அம்மாராவை நசுக்கி அகத் தூய்மைக்குரிய கடும் தபங்களில் ஈடுபடுத்தல், இப்படிப் பட்டவர்களில் சிறந்தவர் எவரோ அவரை அந்த ஷெய்கு தம்முடைய கலீஃபாவாக நியமிப்பார்.

ஷெய்கு என்னும் ஞான ஆசிரியரும் மூன்று வகைப்படுவர். 1. ஷெய்குத்தஃலீம், குர்ஆன் ஓதிக் கொடுப் பதிலிருந்து தஹ்ஸீலாகும் வரையில் எத்தனை ஆசிரியர்களிடம் கற்கிறாரோ அவர்கள் யாவரும் ஷெய்குத் தஃலீமின் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். ஷெய்குத் தஃலீம் என்பதற்கு சன்மார்க்கக் கல்வி போதித்த ஆசிரியர் என்பது கருத்து.

2. ஷெய்குத் தர்பியத்து என்பவர் இரண்டாமவர். கல்வி பயின்ற மாணவரை ஆதரித்து அவருக்கு நல்ல அமல்கள் என்னும் நற்கிரியைகளைக் கற்றுக் கொடுத்து அவற்றைச் செய்வித்து பரமார்த்திகத் துறையில் வழி நடத்துபவர்.

ஹளரத் ஸெய்யிது முஹ்ய்யத்தின் அப்துல் காதிரில் ஜீலானீ குத்திஸ ஸிர்ருஹூ அவர்கள் தங்களுடைய பிறந்த



நாடான ஜீலானிலும், அங்கிருந்து பகுதாதுக்கு வந்து நிஜாமிய்யா பல்கலைக் கழகத்தில் மாணவராகச் சேர்ந்து கல்வி பயின்ற ஏழு வருட காலத்தில் யார் யாரிடம் கல்வி பயின்றார்களோ அவர்கள் யாவரும் ஷெய்குத் தஃலீம்களாவார்கள்.

பகுதாதில் கல்வி பயில வந்த முதல் நாளிலேயே ஹளரத் ஹம்மாது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடைய ஆஸ்ரமத்தில் தங்கினார்கள். அன்று முதல் ஹம்மாது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவ்வுலகை விட்டு மறையும் வரையில் அவர்கள் இடத்திலேயே தங்கி ஜப தப யோகாப்பியாசங்களில் பயிற்சி பெற்றார்கள். எனவே, அவர் கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்கு ஷெய்குத் தர்பியத்தாவார்கள்.

3. மூன்றாமவருக்கு ஷெய்குல் பைஅத்து என்றும் ஷெய்குல் ஃபத்தஹ் என்றும் பெயர். கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பகுதாது நிஜாமிய்யா பல்கலைக் கழகத்தின் தப்ஸீர் ஆசிரியர் அபூஸயீதுப்னுல் முபாரக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் பைஅத்து என்னும் ஞான தீட்சை பெற்றார்கள். இவர் தான் கௌதுல் அஃலம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்கு தஃப்ஸீர் கற்றுக் கொடுத்த ஷெய்குத் தஃலீம். அப்புறம் இவர் பைஅத் என்னும் ஞானதீட்சை கொடுத்ததால் ஷெய்குல் பைஅத் ஆனார். இவரிடம் பைஅத்துப் பெற்ற அதே நாளில் ஒலிப்பதவியும் கிடைத்தது. எனவே, ஷெய்குல் பைஅத்தும் ஆனார்.

எனவே, போலி ஷெய்குகளுக்கு காணிக்கை மாதாந்திர வருடாந்திர சந்தாக்களைக் கொடுத்து முரீது வாங்கி

ஏமாற்றமடையாமல் சரியான ஞான ஷெய்கிடம் பைஅத்துப் பெற்று ஆத்மார்த்த வியாதிகளை அகற்றி பரிசுத்தம் அடைய நம் யாவருக்கும் இறைவன் அருள் புரிவானாக - ஆமீன்.



## 7. நஸீஹத் என்றால் என்ன?

عن أبي رقية بن تميم ابن اوس الداري رضي الله تعالى عنه أن النبي صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: اَلدِّيْنُ النَّصِيْحَةُ قُلْنَا لِمَنْ قَالَ: لِلّٰهِ وَلِكِتَابِهِ وَلِرَسُوْلِهِ وَلِأَئِمَّةِ الْمُسْلِمِيْنَ وَعَامَّتِهِمْ. رواه مسلم

**“சன்மார்க்கம் என்பது நஸீஹத்து தான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் ரசூலே யாருக்கு? என்று (ஸஹாபீகள்) வினவினார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய வேதத்திற்கும், அவனுடைய தூதருக்கும், முஸ்லிம்களின் தலைவர்களுக்கும், அவர்களின் பொது மக்களுக்கும்” என்று பதிலளித்தார்கள்.**

அறிவிப்பவர்:- அபூருக்கய்யா தமீம் இப்னு அவ்ஸினித்தாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு நூல்:- முஸ்லிம்.

அத்தீன் அதாவது சன்மார்க்கம் என்பதைக் குறித்து விரிவான விளக்கம் இதே **அர்பஈனன்னபவிய்யா** என்ற நூலின் முதலாவது ஹதீஸில் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கேள்விக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அளித்த பதிலில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஹதீஸில் சன்மார்க்கம் நிலை நிற்பதற்கான முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. இம்முறைகள் அத்தனையையும் அன்னஸீஹத்து என்ற ஒரு அரபிப் பதம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது.

நம் நாட்டில் நஸீஹத்து என்பதற்கு உபதேசம் என்பது கருத்து என்பதை முஸ்லிம்கள் யாவரும் நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றனர். சன்மார்க்கத்தைக் குறித்த உபதேசங்கள்

நடைபெறவில்லையாயின் சன்மார்க்க அறிவு குன்றி விடும். சன்மார்க்க பக்தி நாளடைவில் குறைந்து முடிவில் சன்மார்க்கம் இல்லாதொழிந்து விடும். இதனைக் கருத்தில் கொண்டே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **என்னைப் பற்றி அறிவியுங்கள். அது ஒரு சிறு செய்தியாக இருந்தாலும் சரியே** என்று கட்டளையிட்டு இருக்கிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் உலக வாழ்க்கையிலுள்ள அறுபத்து மூன்று வருட காலத்தில் பல முறை ஹஜ்ஜுச் செய்திருக்கிறார்கள். ஹஜ்ஜுக்கு வருமாறு உலக மக்களுக்கு முதன் முதலாக அறிக்கை செய்தவர் ஸெய்யிதுனா இப்ராஹீம் கலீலுல்லாஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தாம். இவ்வுலகில் அவர்கள் பிறந்த காலம் எப்பொழுது என்பதை இப்பொழுது நாம் உத்தேசமாகக் கணிப்பதாயின் ஏறக்குறைய ஆறாயிரம் வருடங்கள் என்று கூறமுடியும். இவ்வளவு நீண்ட காலமாக ஹஜ்ஜு வருடந்தோறும் நடைபெற்றுக் கொண்டு தானிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த இடமாகிய மக்கமா நகரில் இது நிகழுவதால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்து நபிப் பதவியைப் பெற்ற நாற்பதாவது வயது வரையில் உள்ளூர் வாசிகளுடன், பந்துக்களுடன் சேர்ந்து பலமுறை ஹஜ்ஜு செய்திருக்க வேண்டும். நபிப்பதவியை அடைந்து ஹிஜ்ரத்துச் செய்யும் வரையுள்ள பதின்மூன்று வருடகாலத்திலும் பல ஹஜ்ஜுகளைச் செய்திருக்க வேண்டும். இந்த ஹஜ்ஜுகளைக் குறித்து திருக்குர்ஆனிலோ ஹதீஸ் ஷரீபிலோ எவ்விதத் தகவலும் இல்லை. என்றாலும், ஹிஜ்ரத்துக்கு முன்னர் நிகழ்ந்த மூன்று ஹஜ்ஜுகள் ஒவ்வொன்றிலும் திரு மதீனாவாசிகளை நபி



ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மினாவில் சந்தித்து அவர்களை முஸ்லிம்களாக்கிய விவரம், திரு மதீனாவில் இஸ்லாமியப் பிரசாரம் செய்ய திருமதீனா வாசிகளிலேயே பன்னிருவரை தங்களின் பிரதிநிதியாக்கிய விவரங்கள், இவர்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுப்பதற்காக முஸ்அபுப்னு உமைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை திரு மதீனாவிற்கு அனுப்பி வைத்தது, திருமக்காவை ஹிஜ்ரத்துச் செய்து திருமதீனாவில் குடியேறுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மதீனத்து முஸ்லிம்கள் அழைத்தது போன்ற விவரங்கள் சரித்திர நூல்களில் காணப் படுகின்றன. அக்காலத்தில் ஹஜ்ஜுச் செய்வது இஸ்லாமின் முக்கிய கடமைகளில் ஒன்றென இறைவன் கட்டளை வரவில்லை. எனவே, அக்காலத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எத்தனை ஹஜ்ஜுச் செய்தார்கள். எந்த விதமான ஹஜ்ஜுச் செய்தார்கள் என்ற விவரத்தை முஹத்திசுகள் சேகரித்து தங்கள் நூல்களில் எழுதவில்லை. ஹிஜ்ரீ 9வது வருடத்தில் ஹஜ்ஜு கடமையாக்கப்பட்டது. அவ்வருடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜுச் செய்யவில்லை. ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தலைமையின் கீழில் முஸ்லிம்கள் முதன் முதலாக இஸ்லாமிய முறைப்படி ஹஜ்ஜுச் செய்தனர். இந்த ஹஜ்ஜில்தான் இனிமேல் விக்கிரஹ ஆராதனைக்காரர்கள் மஸ்ஜிதுல் ஹறாமுக்குள் வரக்கூடாது என்ற கட்டளை அறிக்கையிடப்பட்டது. இதற்குப் பிறகு முஷ்ரிக்குகள் ஹஜ்ஜுக்கு வரவில்லை. எனவே, இந்த வருடத்து ஹஜ்ஜு முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய முதல் ஹஜ்ஜாகவும், முஷ்ரிக்குகளுக்கு அவர்களுடைய ஆசாரப்படிக்குள்ள இறுதி ஹஜ்ஜாகவும் அமைந்தது. மறுவருடம் ஹிஜ்ரீ 10ம் ஆண்டில்

முஸ்லிம் அல்லாதார் எவரும் இல்லாமல் முஸ்லிம்களை மட்டும் கொண்ட முதல் இஸ்லாமிய ஹஜ்ஜு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. இதனைப் பற்றிய முழுவிபரம் சரித்திரங்களிலும் ஹதீஸ் நூல்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவை யாவும் ஹஜ்ஜு சட்டங்களாக இமாம்களால் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த ஹஜ்ஜின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அரஃபாத் மைதானத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஹாஜிகளின் மத்தியில் செய்த பிரசித்தி பெற்ற ஹஜ்ஜு பிரசங்கத்தின் இறுதியில் فَلْيُبَلِّغُ الشَّاهِدُ الْغَائِبَ **இங்கு பிரசன்னமாகி இருப்பவர், ஹஜ்ஜு சம்பந்தமாக தாம் கண்டதையும் செவியுற்றதையும் இங்கு வராதவர்களுக்கு அறிவிக்க வேண்டும்** என்று கட்டளையிட்டார்கள். இக்கட்டளைப்படி கண்ணியவான்களான ஸஹாபிகள் இஸ்லாமின் சத்திய நெறிகளை உலகமக்களுக்கு உரைப்பதற்காக அரப் நாடுகளிலும் அரப் அல்லாத நாடுகளிலும் சென்று உலக மக்களிடம் நஸீஹத்து (உபதேசம்) செய்தனர். இவர்களைப் பின் தொடர்ந்து தாபியீன்களும் அவர்களைப் பின் தொடர்ந்த தபஉ தாபியீன்களும் இந்த ஹதீஸில் குறிப்பிட்டிருக்கிறவாறு நஸீஹத்து என்னும் சன்மார்க்க உபதேசம் செய்தனர். இதன் பலனாக மிகக் குறுகிய காலத்தில் அரபு நாட்டுக்கு வெளியில் ஷாம், சிரியா, இராக், மெசபடோமியா, ஈரான், அப்கானிஸ்தான் அக்கால இந்தியாவில் வடமேற்குப் பகுதி, துருக்கிஸ்தான் மத்திய ஆசியா, சின்ன ஆசியா, எகிப்து, லிபியா, சூடான், டூனிஸ், அல்ஜீரியா, மொராக்கோ போன்ற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இஸ்லாம் என்னும் தீன் பரவிற்று. அன்று இஸ்லாமிய நாடுகளாக மாறிய



இவைகள் இன்றும் இஸ்லாமிய நாடுகளாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகிற நாடுகளாக இருந்து வருகின்றன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய நஸீஹத்தை கடைப்பிடித்தொழுகிய முதன் மூன்று தலைமுறையினரான ஸஹாபிகள், தாபியீன்கள், தபஉ தாபியீன் களால் பலநாடுகள் முஸ்லிம் நாடுகளாயின. அதற்கப்புறமும் இந்த நஸீஹத்து தன்னுடைய முழுப் பங்கையும் நிறைவேற்றி இருக்குமாயின் இன்றைய உலகில் இஸ்லாமைத் தவிர வேறு எந்த மதமும் இருக்காது. இம்மூன்று தலைமுறைக்குப் பின்னருள்ளவர்கள் இக்கடமையை நிறைவேற்றுவதில் அசட்டை செய்யத் தொடங்கினர். இதன் பலனாக இஸ்லாம் பரவுவதும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. இந்த ஹதீஸில் கண்டவாறு நஸீஹத்து என்னும் சன்மார்க்க உபதேசப் பணி குறையக் குறைய இஸ்லாம் பரவிய நாடுகள் முஸ்லிம்களின் கரங்களி லிருந்து முஸ்லிம் அல்லாதாரால் பறிக்கப்பட்டன. தெற்கு ஐரோப்பாவும், மத்திய தரைக்கடலிலுள்ள கிரீஸ், சைப்ரஸ், சிசிலி போன்ற அநேக தீவுகளும் முஸ்லிம் நாடுகளாக இருந்தவைதான். அங்கு முஸ்லிம் ஆட்சி மட்டுமின்றி பெரும்பான்மையினராக இருந்தவர்களும் முஸ்லிம்கள்தான். இந்த ஹதீஸில் கூறப்பட்டவாறு முஸ்லிம்கள் நடந்து கொள்ளத் தவறியதால், இந்த நாடுகள் இன்று ஸ்பெயின், போர்ச்சுக்கல், பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ் முதலிய கிறிஸ்துவ நாட்டினரில் பெயரால் ஆட்சி செய்யப்படுவதும் இவற்றில் அக்காலத்தில் வாழ்ந்த பல லட்சம் முஸ்லிம்கள் கிறிஸ்துவர்களாக மாற்றப்பட்டும், கிறிஸ்துவர்களால் கொல்லப்பட்டும் ஒழிக்கப் பட்டனர். இன்று அவர்களின் ஞாபகார்த்தமான தொன்மை வாய்ந்த சில இடிந்த கட்டிடங்கள் இருக்கின்றன.

இவ்வாறான இழிந்த நிலைக்கு முஸ்லிம்கள் வந்ததற்குரிய காரணங்களுள் ஒன்று.. ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களுக்கு தலைவர்களாக இருந்தவர்களும் ஆட்சியாளர்களும் சன்மார்க்க அறிவும் தெய்வபக்தியும் சன்மார்க்க அபிமானமும் உள்ளவர்களாக இருந்தனர். அப்புறம் தோன்றியவர்களுக்கு சன்மார்க்க அறிவு போதுமான அளவிற்கு இல்லை. இவர்கள் தங்களை சன்மார்க்க பக்தர்கள் என்று நினைத்துக் கொண்டு மார்க்கத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்தனர். இஸ்லாமிய அரசாங்கம் என்று கூறுவதை நிறுத்தி முஸ்லிம் அரசாங்கம் என்று பெயரிட்டு லோகாதய சர்க்காராக ஆட்சி புரியத் தொடங்கினர். இஸ்லாம் மார்க்கத்தை கொஞ்சம் கூட புரிந்து கொள்ளாத லோகாதயவாதிகள் அரசியலில் ஆதிக்கமும் பெற்றனர். அரசியல் வேறு மதம் வேறு என்று பிரிந்தனர். தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத்து மட்டும் தான் மார்க்கம். மற்றவை அரசியல். எனவே, ஸ்தல அரசாங்கம் தங்கள் நோக்கம் போல் அரசியல் சட்டங்களை இயற்ற உரிமை பெற்றிருக்கிற தென்று வர்த்தகம், தொழில், நீதி, வாரிசுரிமைகள், குற்றப் பரிகாரங்கள் போன்றவற்றில் இஸ்லாம் கூறிய சட்ட திட்டங்களைக் கைவிட்டு தங்கள் விருப்பப்படி சட்டங்களை இயற்றி அமல் செய்தனர். இன்றுள்ள முஸ்லிம் நாடுகளும் இதே கொள்கைகளைக் கடைப்பிடித்து ஆட்சி புரிகின்றனர். இவர்களின் இந்த ஆட்சி முறை முஸ்லிம் அல்லாத இதர நாடுகளின் ஆட்சி முறைக்கு வேறுபட்டவைகளல்ல. இவை யாவும் இஸ்லாம் மார்க்கம் நமக்களித்து. கிரியாம்சையில் செய்து காட்டிய ஆட்சி முறைக்கு முற்றிலும் விரோதமானவை. இதன் காரணமாக



عَنْ ثَوْبَانَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ:
,,يُوْشِكُ الأُمَمُ أَنْ تَدَاعَى عَلَيْكُمْ كَمَا تَدَاعَى الآكِلَةُ إِلَى قَصْعَتِهَا
فَقَالَ: قَائِلٌ وَ مِنْ قِلَّةٍ نَحْنُ يَوْمَئِذٍ؟ بَلْ أَنْتُمْ يَوْمَئِذٍ كَثِيْرٌ وَلٰكِنَّكُمْ غُثَاءٌ
كَغُثَاءِ السَّيْلِ وَلَيَنْزَعَنَّ اللّٰهُ مِنْ صُدُوْرِ عَدُوِّكُمُ الْمَهَابَةَ وَلَيَقْذِفَنَّ
اللّٰهُ فِيْ قُلُوْبِكُمُ الْوَهْنَ. قَالَ قَائِلٌ: وَ مَا الْوَهْنُ؟ قَالَ: حُبُّ الدُّنْيَا
وَكَرَاهِيَةُ الْمَوْتِ" رواه ابو داود والبيهقي.

“பொது விருந்துக்குச் செல்பவர்கள் தங்களுக்கு விருப்பமான வர்களையும் பந்திக்கு அழைத்துக் கொள்வது போல முஸ்லிம் அல்லாத இதர வர்க்கங்கள் உங்களுக்கு விரோதமாக (மற்றவர்களையும்) அழைத்துக் கொள்வார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அன்றைய தினத்தில் நாம் குறைவாக இருப்பதன் காரணமாகவா? அல்லாஹ்வின் ரசூலே என்று (ஸஹாபிகளில்) அவர்களில் ஒருவர் வினவினார். (அதற்கு) அல்ல, அன்றைய தினத்தில் நீங்கள் (எண்ணிக்கையில்) மிக அதிகமாக இருப்பீர்கள். என்றாலும் நீங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிற குப்பைகளைப் போல் குப்பையாக இருப்பீர்கள். உங்களுடைய பகைவர்களின் நெஞ்சங்களை விட்டு உங்களைப் பற்றிய பீதியை அல்லாஹ் கழற்றி விட்டு, உங்களுடைய இதயங்களில் வஹ்னை ஏற்படுத்தி விடுவான் என்று பதிலளித்தார்கள். அப்பொழுது ஒருவர் வஹ்னு என்பது என்ன? யாரசூலல்லாஹ் என்று வினவினார். (அதற்கு) உலகப்

**பற்றும் மரணத்தின் மீது வெறுப்பும் தான்" என்று பதிலளித்தார்கள்.**

அறிவிப்பவர்:- தௌபான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- அபூதாவூத், பைஹக்கீ இமாம் எழுதிய தலாயிலுல் நுபுவ்வத்.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்ட செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபி என்பதை நிரூபிப்பதாக அமைந்த முன் அறிக்கையாகும். திருமக்கா முஸ்லிம்களிடம் வீழ்ச்சியடைந்து இஸ்லாமிய நாடாக மாறி ஹிஜ்ரீ 8ம் வருடத்திற்குப் பிறகு, அரப் நாட்டு முஷ்ரிக்குகள் கூட்டம் கூட்டமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, இஸ்லாமைத் தழுவிக் கொண்டிருந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட செய்தியாகும். முஸ்லிம்களின் படைவருகிற செய்தியை முஷ்ரிக்குகள் கேள்விப்பட்டவுடன் பீதியடைந்து தங்கள் கிராமங் களைக் காலி செய்து விட்டு பக்கத்திலுள்ள மலைகளுக்குச் சென்று தங்களை ஒழித்துக் கொள்வதும். தங்களை ஒழித்துக் கொள்ள வசதி இல்லாதவர்கள் இஸ்லாமைத் தழுவி தங்களைக் காப்பாற்றிக் கொள்வர். ஒரு மாத தூரத்துக்குட் பட்டவர்கள் அதாவது ஏறக் குறைய ஐனூறு மைல் தொலைவுக்கு உட்பட்ட மக்களின் இதயத்தில் இந்த பீதியை இறைவன் ஏற்படுத்தி இருந்தான். அரப் நாடு முழுவதும் பணிந்து விட்டது. இந்நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஹதீஸில் கண்டவாறு அறிக்கை செய்தார்கள்.

இது ஸஹாபிகளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர்களில் ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அந்தக் காலத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மை



யினராகி விடுவரோ? இதன் காரணமாக முஸ்லிம் அல்லாதாரின் ஆதிக்கம் ஓங்கி விடுமோ என்று தம்முடைய சந்தேகத்தைக் குறித்து வினவுகிறார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இல்லை, அன்று எண்ணிக்கையில் இப்பொழுதிருப்பதைப் பார்க்கினும் அதிகமாகத் தான் இருப்பர். என்றாலும், பெயரளவில் தான் முஸ்லிம்கள் இருப்பர். அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரசூலுக்கும் அவர்களுடைய நஸீஹத்து அதாவது கீழ்ப்படிதல் இருக்காது. அவனுடைய வேதமாகிய திருக்குர்ஆனை விசுவாசிப்பதாகக் கூறுவர், ஆனால், அதிலுள்ள ஏவல் விலக்கல்களைப் பேணி நடக்க மாட்டார்கள். தங்களுடைய நோக்கம் போல் நடப்பர். இந்த முறையில் வேதத்துக்கு அவர்களுடைய நஸீஹத்து அதாவது அவர்கள் கட்டுப்பட்டு நடப்பது என்பது இல்லை. திருக்குர்ஆனின் கட்டளைக்கு கீழ்ப்படியாமலும், அல்லாஹ்வையும் அவனுடைய ரசூலையும் மெய்யாகவே மனப்பூர்வமாக விசுவாசியாத இவர்கள் தங்களிலுள்ள அரசியல் தலைவர்களாகிய கலீஃபாவுக்கோ, மன்னருக்கோ, அரசாங்க அதிகாரிகளுக்கோ, அரசாங்கச் சட்டத்துக்கோ மரியாதை கொடுக்காமல் மீறி நடத்தல், சட்ட விரோதமாக நடத்தல், மாற்றாருடன் சேர்ந்து துரோகம் செய்தல், முஸ்லிம் சன்மார்க்க அறிஞர்களான ஆலிம்களின் உபதேசங் களை மதிக்காமல் சன்மார்க்க விஷயத்தில் தன் விருப்பப்படி நடத்தல் போன்றவற்றைச் செய்வர். இது முஸ்லிம்களின் தலைவர்களுக்கு (நஸீஹத்து பணிதல் என்பதற்கு) மாறான செயல்களாகும், முஸ்லிம் சமூகக் கட்டுப்பாட்டைக் குலைத்து, போட்டிக் கட்சியை தோற்றுவித்தல், வர்த்தகம் தொழில் போன்றவற்றில் போட்டியை உண்டுபண்ணி நலியச் செய்தல் போன்ற காரியங்கள் நஸீஹத்து லிஆம்மத்திஹிம் அதாவது

முஸ்லிம் பொதுமக்களின் நன்மையைக் கருதி உழைத்தல் என்பதற்கு விரோதமாகும். எனவே, அல்லாஹ்வை விசுவாசித்தல், அவனுடைய தூதரை முன்மாதிரியாக வைத்து நடத்தல், முஸ்லிம்களிலுள்ள ஜனாதிபதிகள் அரசர்கள் உலமாக்கள் போன்ற முஸ்லிம் தலைவர்கள் சன்மார்க்கத்திற்கு முரணில்லாமல் நடந்து கொள்ளும் வரையில் மார்க்க விஷயத்தில் அவர்களின் கருத்துக்கு இயைந்தவாறு நடத்தல், முஸ்லிம் பொதுமக்களுக்கு தீங்கு செய்யாமல் முடிந்த வரையில் அவர்களுடன் இணங்கி இருத்தல் ஆகியவை நஸீஹத்து என்ற வார்த்தையில் அமைந்துள்ள விசாலமான கருத்துக்களில் சிலவாகும். முஸ்லிம் என்று தன்னைக் கருதிக் கொண்டிருப்பவர் குறைந்த பட்சம் இந்த ஹதீஸில் கூறப்பட்டவற்றையாவது கடைப்பிடித் தொழுகுவது அவசியமாகும்.

இக்காலத்திலுள்ள முஸ்லிம்களில் பெரும்பாலர் இவற்றைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. இதன் பலன் தான் முஸ்லிம்களை பிறர் மதிக்காமல் இருப்பதும், முஸ்லிம்களின் உரிமைகளை, உடமைகளை, சொத்துக்களை, தொழில்களை, வர்த்தகங்களை முஸ்லிம் அல்லாதார் கைப்பற்றிக் கொண்டு அவர்களை பின்னுக்கு தள்ளுவதும். முஸ்லிம் நாடுகளில் கட்சிகளைத் தோற்றுவித்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும்படி செய்வதும் ஆகும். இந்த நிலை இன்றைய முஸ்லிம் நாடு ஒவ்வொன்றிலும் இருக்கிறது. இன்றைய முஸ்லிம்களின் சன்மார்க்க பக்தியினை முஸ்லிம் அல்லாதார் நன்கு புரிந்து கொண்டதால், இந்த ஹதீஸில் கண்டவாறு நம்மை ஆற்று வெள்ளம் அடித்துச் செல்கிற குப்பைக்குச் சமமாக மதிக்கின்றனர். இதனால் முஸ்லிம்களைப் பற்றி முற்காலத்தில் முஸ்லிம்



அல்லாதாரின் இருதயத்தில் இருந்த பயம் நீங்கிவிட்டது. முற்காலத்து முஸ்லிம்களின் மனதில் இருந்த ஈமான் இக்காலத்து முஸ்லிம்களின் மனதில் அகன்று அந்த இடத்தில் உலகப்பற்று அமர்ந்து விட்டது. எனவே, இவ்வுலகை விட்டு மறைந்தால் மறு உலகில் தங்களுக்கு நற்பயன் கிடைக்காது என்பதை உணர்ந்திருப்பதால் மரணத்திற்கு அஞ்சுகின்றனர். எனவே, அவர்களில் கோழைத்தனம் குடி கொண்டிருக்கிறது. ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னர் இவ்வுலகில் பிறந்து அறுபத்து மூன்று வருடங்கள் வாழ்ந்து மறைந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய இப்பொன்மொழிகள் இன்று பரிபூரணமாக வெளியாகி இருப்பதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிக்கைகளில் இதுவும் ஒன்றென ஹதீஸ் கலை நிபுணர்கள் கணித்து தங்கள் நூல்களில் எழுதியுள்ளார்கள்.

## 8. முஸ்லிமின் கண்ணியம்

عن ابن عمر رضي الله تعالى عنهما أن رسول الله صلى الله عليه وسلم قال: أمرت أن أقاتل الناس حتى يشهدوا أن لا إله إلا الله وأن محمدا رسول الله، ويقيموا الصلاة ويؤتوا الزكاة فإذا فعلوا ذلك عصموا مني دماءهم وأموالهم إلا بحق الإسلام وحسابهم على الله تعالى. رواه البخاري ومسلم.

"வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. முஹம்மது அல்லாஹ்வின் ரசூல் என்று மக்கள் சாட்சியம் கூறி தொழுகையை நிலைநிறுத்தி, ஜக்காத்தைக் கொடுக்கும் வரையில் அவர்களை எதிர்த்துப் போரிடுமாறு நான் கட்டளையிடப்பட்டிருக்கிறேன். இவற்றை அவர்கள் செய்து விட்டால் என்னிலிருந்து தங்களுடைய உதிரங்களையும் தங்களுடைய பொருள்களையும் இஸ்லாமின் உரிமைக்காக அல்லாமல் காப்பாற்றிக் கொண்டார்கள். அவர்களின் விசாரணை அல்லாஹு தஆலாவின் மீதிருக்கிறது" என்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபிப்பதவியை அடைந்து திருமக்காவில் பதின்மூன்று வருடகாலம் வாழ்ந்தார்கள். திருமதீனாவிற்கு ஹிஜ்ரத்துச் செய்து ஏறக்குறைய



இரண்டு வருட காலம் அங்கு தங்கி இருந்தார்கள். ஆக நபித்துவத்தை அடைந்து பதினைந்து வருடகாலம் வரையில் பொது மக்களுக்கு உபதேசம் செய்வதன் மூலம் சன்மார்க்க பிரசாரம் செய்தார்கள். முஸ்லிம் அல்லாதார் இப்பிரசாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் இஸ்லாமைத் தழுவிய சிலரைத் துன்புறுத்தினர். கடுமையாக வதைத்தனர். எதிர்ப் பிரசாரமும் செய்தனர். பொருள் தருவதாகவும் பெண் தருவதாகவும் தலைமைப் பதவி தருவதாகவும் கூறி இஸ்லாமிய பிரசாரம் செய்வதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டனர். இறுதியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொலை செய்யவும் அதனை செயல் படுத்து வதற்கான நேரம் காலம் ஆகியவற்றையும் நிர்ணயித்து குறித்த தேதியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வீட்டையும் இரகசியமாக முற்றுகையிட்டு, வீட்டிலிருந்து வெளியில் வந்தவுடன் கொலைச் செயலை நிறைவேற்றக் காத்துக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் திருமக்காவைத் துறந்து மதீனா புரி சென்று குடியேறுமாறு இறைவன் கட்டளை வந்தது. உடனே வீட்டை விட்டு வெளியேறி மதீனா புரியை நோக்கிச் சென்றார்கள். உருவிய வாளுடன் காத்திருந்த கொலைகாரர்களின் முன்னிலையில்தான் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றார்கள். ஆயினும் அவர்கள் செல்வதை கொலைகாரர்கள் பார்க்கா வண்ணம் அற்புதமாக இறைவன் காப்பாற்றினான். மதீனா புரியை அடைந்து அமைதியாக வாழ்வதை மக்காவாசிகள் விரும்ப வில்லை. திருமதீனாவை விட்டு வெளியேற்றி விட பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்தனர். இவைகள் பலிக்காமல் போகவே, போர் செய்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும்

ஸஹாபிகளையும் ஒழித்து விட முயன்றனர். போர் முஸ்திப்பு செய்து மக்காவை விட்டு அவர்கள் புறப்பட்ட பிறகு. அவர்களை எதிர்த்துப் போர் புரியுமாறு இறைவன் கட்டளையிட்டான்.

உலகில் சமாதானத்தையும் அமைதியையும். நிலை நாட்டவே இஸ்லாம் இறைவனால் அருளப்பட்டது. ஆயினும், துன்மார்க்கர்கள் படை திரட்டிக் கொண்டு போருக்கு வந்த பின்னர் அஹிம்சை என்ற பெயரால் அமைதியாக இருப்பின் அதுவரையில் இஸ்லாமைத் தழுவியவர்கள் பகைவர்களால் அழிக்கப்படுவர். எனவே, பகைவரை எதிர்த்துப் போர் செய்ய இறைவன் கட்டளையிட்டான். இதனைத்தான் கட்டளையிடப் பட்டிருக்கிறேன் என்ற வார்த்தையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். போர் செய்யுமாறு கட்டளையிட்டது அல்லாஹ்தான்.

பகைவர்களை அழித்து விடுமாறு இறைவன் கட்டளை யிடவில்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் தான். முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்பதை அவர்கள் பகிரங்கமாக அறிக்கை செய்ய வேண்டும். அதாவது பிறருக்குத் தெரியும் விதத்தில் நாவால் உரைக்க வேண்டும். எல்லா முஸ்லிம்களையும் போல் தொழுகையை அவர்கள் தவறாமல் நிறைவேற்றி ஜக்காத்து என்னும் செல்வ வரியை கொடுக்க வேண்டும். இக்காரியங்களை அவர்கள் செய்யும் வரையில் அவர்களை எதிர்த்துப் போரிட வேண்டும். இவற்றை அவர்கள் செய்து விட்டால் போரிடக் கூடாது. அவர்களின் உதிரம் சிந்தப்படலாகாது. அவர்களுடைய சொத்துக்கள் போர்ப்பரிசு களாக்கப்படக் கூடாது என்பது கட்டளை.



முஸ்லிம்களை அழித்து இஸ்லாமை ஒழிப்பதற்காக சன்மார்க்க விரோதிகள் படை வந்தால், அதனை எதிர்த்து முஸ்லிம்கள் போர் செய்து தங்கள் சன்மார்க்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் இஸ்லாமிய போரின் குறிக்கோள். இது தற்காப்பு யுத்தம் தான். நாட்டை விஸ்தரிப்பதற் காகவோ நாடு பிடிப்பதற்காகவோ போரிட இஸ்லாம் கட்டளையிட வில்லை. இந்தக் காரணத்திற்காக போர் மூண்டு, அது நிறுத்தப்பட வேண்டுமாயின், பகைவர்கள் சரணடைய வேண்டும். தங்கள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டுப் பணிந்து விடுதல் என்பதற்கு அடையாளம் அவர்கள் கலிமா சொல்லி இஸ்லாமைத் தழுவ வேண்டும். அத்துடன் இஸ்லாமிய கடமையாகிய தொழுகையை தவறாமல் நிறைவேற்ற வேண்டும். செல்வ வரியையும் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதுதான் பகைவர் பணிந்ததன் அடைளாயம். இல்லையேல் பணிந்ததாகக் கருதலாகாது என்பது இந்த ஹதீஸின் கருத்து.

ஒருவர் இஸ்லாமைத் தழுவினார் என்பதற்கு புற அடையாளம் அவர் கலிமா சொல்வதும், தொழுகையைத் தவறாமல் நிறைவேற்றுவதும், ஜக்காத்து என்னும் செல்வ வரியைக் கொடுப்பதும் தான். இம்மூன்றில் ஒன்றைச் செய்யாவிடினும் அவரை முஸ்லிம் என்று கருதமுடியாது. எத்தனையோ முஸ்லிம் அல்லாதார் கலிமாவைச் சொல்கின்றனர். மத விரோதம் வகுப்பு கலவரம் இருந்தால் முஸ்லிம் அல்லாதார் முஸ்லிம்களின் முன்னிலையில் தொழுவது போல் நடிக்கலாம் அல்லது முஸ்லிம்களின் முன்னிலையில் தொழலாம். அவர்கள் இல்லாத சமயங்களில் தொழாதிருக்கலாம். திரு மதீனாவில் வாழ்ந்த முனாஃபிக்குகளின் செய்கைகளும் இப்படித் தானிருந்தன.

மஸ்ஜிதுந் நபவிக்கு அவர்கள் வருவார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்திப்பார்கள். உபதேசங் களையும் செவிமடுப்பர். மஸ்ஜிதில் இருக்கையில் தொழுகை களிலும் கலந்து கொள்வர். போர்களில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டால் சாக்கு போக்குகளைக் கூறி ஒதுங்கிக் கொள்வர். போருக்கு நன்கொடை கொடுத்து உதவுமாறு வேண்டினால் அதிலும் இவ்வாறு கூறி பண உதவி செய்யாமல் இருந்து விடுவர். இவர்கள் வெளிக்கு தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்வதால் இவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நன்கு புரிந்திருந்தும் இவர்களை ஒதுக்கி வைக்காமலும், நீங்கள் முஸ்லிம்களல்லர் என்று பகிரங்கமாகக் கூறி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமலும் இருந்தார்கள். முனாஃபிக்குகளின் தலைவரான அப்துல்லா ஹிப்னு உபய்யி மரணமடைந்த போது அவருக்கு அணிவிக்க தங்களின் அங்கியைக் கொடுத்து உதவினார்கள். அவருடைய ஜனாஸா தொழுகையிலும் கூட கலந்து கொண்டார்கள். எனவே, அந்தரங்கத்தில் சன்மார்க்க விசுவாசமில்லாதவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று வெளியில் கூறிக் கொண்டால் ஏனைய முஸ்லிம்கள் அனுபவிக்கிற சகல சமூக உரிமைகளையும் அவர்களும் அனுபவிக்கலாம். அவற்றைக் கொடுக்க ஏனைய முஸ்லிம்கள் மறுக்கலாகாது என்பது இந்த ஹதீஸ் போதிக்கும் படிப்பினையாகும்.

தன்னை முஸ்லிம் என்று பகிரங்கமாகக் கூறிக் கொள்ளும் எவரையும் நீர் முஸ்லிம் அல்லர் என்று நிராகரிக்கவோ முஸ்லிம் சமூக உரிமைகளில் எதனையும் அனுபவிக்க விடாமல் தடை செய்யவோ ஏனைய முஸ்லிம்களுக்கு உரிமை இல்லை.



இக்காலத்து முஸ்லிம்களில் பெரும்பாலர் ஷஹாதத்து கலிமாவை ஓதுகின்றனர். ஒரு சிலருக்கு கலிமாவை அரபியில் ஓதத் தெரியாது. என்றாலும் கலிமாவின் பொருளை வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவன் தான்; அவனைத் தவிர வேறு யாரையும் வணங்கலாகாது. அவ்வாறு வணங்குபவர் முஸ்லிம் அல்லர். ஹளரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர். அவர்களுக்கு திருக்குர்ஆன் அல்லாஹ்வினால் அருளப்பட்டது. அதனை நிராகரிக்க கூடாது என்பதை மனப்பூர்வமாக நம்புகின்றனர். தங்களுடைய தாய் மொழியில் இதனைக் கூறுகின்றனர். இவர்களுக்கு அவர்களுடைய பெற்றோர்கள் இளமைப் பருவத்தில் சன்மார்க்கப் படிப்பை கற்பிக்காததனால் அரபு மொழியில் கலிமாவையே ஓத இயலவில்லை. தொழுகை நோன்பு போன்ற இஸ்லாமிய வணக்கமுறையில் பயிற்சி அளிக்காததால் அவற்றை நிறைவேற்றுவதில் சோம்பலாக இருக்கின்றனர். இதனால் சிலர் பெருநாள் தொழுகைகளை மட்டும் நிறைவேற்றுகின்றனர். சிலர் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ தொழுகைகளை நிறைவேற்று கின்றனர். சிலர் ரமலான் மாதத்தில் தராவீஹ் தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

இவர்கள் மெய்யான முஸ்லிம்கள். முஸ்லிம் பெற்றோர் களுக்குப் பிறந்தவர்கள். தங்களுக்கு பெற்றோர்கள் இளமை யிலேயே சன்மார்க்கக் கல்வியை ஊட்டவும் சன்மார்க்கப் பண்பாட்டில் வளர்க்கவும் தவறி விட்டனர். இவர்கள் பெரியவர் களான பின்னர் பெற்றோர்கள் செய்த தவறைத் திருத்தி தாங்களாக சன்மார்க்க அறிவைப் பெருக்கி இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றத் தவறினர். எனவே, இவர்களும்

இவர்களுடைய பெற்றோர்களும் மறுமையில் இறைவனால் விசாரிக்கப்படுவர். இவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த முனாபிக்குகளுக்கு சமமாக மதிக்கலாகாது. ஏனெனில், அப்துல்லாஹிப்னு உபய்யி என்பவர் திரு மதீனாவில் மிகவும் செல்வாக்குப் பெற்ற தலைவர். மதீனாவாசிகள் அவரை தங்களுடைய அரசர் என்று நியமித்துக் கொள்ள ஆயத்தமாக இருந்தனர். இச்சமயத்தில் தான் மதீனாவாசிகள் இஸ்லாமைத் தழுவி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் மக்கத்து முஹாஜிர் களையும் தங்களூரில் குடியேற்றினர். இதனால் அவரை அரசராக நியமிக்கும் சம்பவம் அன்ஸார்களால் கைவிடப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குடியேற்றம் தம்முடைய அரச பதவிக்குத் தடையாக இருந்தது. திரு மதீனாவில் பெரும்பாலர் முஸ்லிம்களாகி விட்டதால் அவர் பகிரங்கமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்க்க இயலாமல் அவரும் இஸ்லாமைத் தழுவினார். ஆயினும், அங்கு வாழ்ந்த யூதர்களுடன் சேர்ந்து சதி செய்து இஸ்லாமை ஒழிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இவர் இஸ்லாமை மனப்பூர்வமாக விசுவாசிக்கவில்லை. இஸ்லாமின் எதிரிகளுக்கு உடந்தையாக இருந்து உளவு பார்க்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். எனவே, மெய்யான முஸ்லிமாக இருந்தால் கலிமா சொல்வது மட்டும் போதாது, ஐங்காலத் தொழுகை களையும் நிறைவேற்றி ஜக்காத்தையும் கொடுக்க வேண்டும். முனாபிக்காக உள்ளவர் கலிமாவை ஓதவும் தொழவும் பின்வாங்க மாட்டார். ஜக்காத்துக் கொடுக்க முன்வர மாட்டார். அவரை நிர்ப்பந்தப்படுத்தி வாங்க வேண்டியதேற்படும்.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் வஹீ வந்து கொண்டிருந்ததால் இஸ்லாமிய பக்தி இல்லாதவர்கள் தங்களுடைய பொருள்களையும் உயிரையும் பாதுகாப்பதற்காக கலிமா சொன்னார்கள். முஸ்லிம்களின் முன்னிலையில் தொழுதார்கள். ஜக்காத்தையும் வெறுப்புடன் கொடுத்தார்கள். எனவே, அவர்களின் உயிர்களுக்கும் பொருள்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டதுடன் முஸ்லிம் களுக்குள்ள சகல உரிமைகளும் வழங்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைந்து ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கலீஃபா பதவியை ஏற்றுக் கொண்டபோது, இனிமேல் வஹீ வராது என்று நிச்சயமாக அவர்கள் தெரிந்து கொண்டதால் முனாஃபிக்குகள் தங்களின் விஷமத்தனத்தை இரகசியமாக இல்லாமல் பகிரங்கமாகச் செய்து ஜக்காத்துக் கொடுக்க வேண்டாம் என்று மற்றவர்களைத் தூண்டினர். அவர்களின் தூண்டுதல்களுக்குக் கட்டுப்பட்டு ஜக்காத்து கொடுப்பதை ஒரு பெரும் கூட்டம் நிராகரித்தது. அவர்களை எதிர்த்து ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார்கள். பெரும் போராட்டத்திற்கு பின்னர் முனாஃபிக்குகளையும் அவர்களின் துணைவர்களையும் அடக்கினார்கள். இந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்கு இந்த ஹதீஸ் ஒரு ஆதாரமாகும்.

இக்காலத்தில் இஸ்லாமிய அரசாங்கங்கள் ஜக்காத்து வரியை வசூல் செய்வதில்லை. எனவே, முஸ்லிம்களில் பெரும்பாலர் ஜக்காத்து வரியை கணக்குப் பார்த்து கொடுப்ப தில்லை. ஒரு சிலர் ஜக்காத்துக் கொடுக்கின்றனர். ஆயினும்

அவர்கள் ஜக்காத்து இவ்வளவு என்று கணக்குப் பார்த்து சட்டப்படிக்குள்ள நபர்களிடம் பரிபூரணமாகக் கொடுப்பதில்லை. ஜக்காத்து என்று பெயர் வைத்து சிலருக்கு ஓரளவு கொடுக்கின்றனர். இவை யாவற்றையும் குறித்து மறுமையில் விசாரணை நடைபெறும். இவர்கள் யாவரும் பதில் சொல்ல வேண்டியவர்களே. இந்த ஹதீஸில் நோன்பைப் பற்றியும் ஹஜ்ஜைப் பற்றியும் கூறவில்லை. எனவே, அவை இரண்டும் அவ்வளவு முக்கியமானவை களல்லவென்று எவரும் கருதலாகாது. நோயாளியாகவோ வெளியூர் சென்றவராகவோ இருப்பவர் ரமலான் மாத நோன்பை நோற்காமல் இருந்து நோய் தீர்ந்த பிறகு நோன்பு நோற்கலாம். பிரயாணத்திலிருப்பவர் தமதில்லத்திற்கு திரும்பவந்த பின்னர் விடப்பட்ட நோன்புகளை நோற்று களாச் செய்யலாம் என்று திருக்குர்ஆனில் அனுமதி இருக்கிறது. எனவே, அதனை விட்டவரை சன்மார்க்கத்துக்கு எதிரி என்று நிர்ணயிப்பது கடினம். ஹஜ்ஜுச் செய்வது வயதில் ஒரு முறைதான். ஹஜ்ஜு கடமையாகி விட்டால் உடனே அவசரமாக அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளை திருக்குர்ஆனில் இல்லை. கொஞ்சம் தாமதித்தும் நிறைவேற்றலாம். எனவே, ஹஜ்ஜு கடமையான ஒருவர் அதனை நிறைவேற்றாமல் இருந்தால் அவரை இஸ்லாமின் எதிரி என்று நிர்ணயிக்க முடியாது. எனவே, அவை இரண்டையும் குறித்து இந்த ஹதீஸில் கூறப்படவில்லையே அன்றி அவை இரண்டும் முக்கியமான கடமைகள் அல்ல என்ற கொள்கையில் இந்த ஹதீஸில் கூறாமல் விடப்படவில்லை.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்ட மூன்று காரியங்களையும் நிறைவேற்றாதவரை எதிர்த்துப் போர் செய்யுமாறு கட்டளையிடப்



பட்டிருப்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதால், உலக மக்கள் அனைவரையும் எதிர்த்து போர் செய்து கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தித்து இஸ்லாத்தில் சேர்க்கப்பட்டதாக எவரும் கருத வேண்டியதில்லை. முஸ்லிம் அல்லாத பிரஜைகள் இஸ்லாமிய நாட்டில் சகல வசதிகளுடன் சம அந்தஸ்தில் வாழ்ந்தனர். திருமதீனாவில் குடியேறிய உடனேயே அங்குள்ள யூதர்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒப்பந்தம் செய்து அவர்களுக்கு மத சுதந்திரம் கொடுத்த விவரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரத்தில் இருக்கிறது. அந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக முனாபிக்குகளுடன் சேர்ந்து சதி செய்தவர்கள், இஸ்லாமை ஒழித்து விட முயன்ற மக்கத்துக் குறைஷியருக்கு உதவி புரிந்தவர்கள், போரிடும்படி தூண்டியவர்கள் மீது மட்டும் தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதேயன்றி, அவர்கள் இஸ்லாமைத் தழுவவில்லை என்பதற்காக அவர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கவில்லை. திரு மதீனாவிலுள்ள யூதர்கள் ராணுவப் பாதுகாப்பைக் கருதி கைபரில் சென்று குடியிருக்க அனுமதிக்கப்பட்டனரேயன்றி அவர்கள் இஸ்லாமைத் தழுவவில்லை என்பதற்காக திரு மதீனாவை விட்டு வெளியேற்றப் படவில்லை.

கைபரில் குடியேற்றப்பட்ட யூதர்கள் திருமக்கா சென்று மக்கத்து முஷ்ரிக்குகளை போருக்கு தூண்டியதுடன், அகழ் யுத்தத்திற்கு பணம் கொடுத்து தயார் செய்வித்தது மட்டுமின்றி பலர் நேர்முகமாக பகைவருடன் சேர்ந்து வந்து அகழி யுத்தத்தில் கலந்து கொண்டனர். இதனால் அவர்கள் மீது அடக்குமுறை என்ற முறையிலேயே கைபர் வாழ் யூதர்கள் மீது படையெடுக்கப்பட்டது.

அவர்கள் இஸ்லாமைத் தழுவவில்லை என்ற காரணத்திற்காக அவர்கள் மீது போர் தொடுக்கவில்லை. அவர்கள் மீது நடந்த போராட்டத்தில் அவர்கள் தோல்வியடைந்தும், அந்த ஊரை விட்டு அவர்கள் வெளியேற்றப்படவில்லை. எனவே, மத வித்தியாசத் திற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோ அவர்களுக்கு பின்னர் வந்த கலீஃபாக்களோ எவர் மீதும் ராணுவ நடவடிக்கை எடுக்கவில்லை. இஸ்லாமிய அரசாங்கத்தின் மீது போர் தொடுத்தவர்கள் மீது மட்டும் தான் முஸ்லிம்கள் போர் புரிந்தனர். எனவே, இஸ்லாத்தை தழுவுவதாகக் கூறி முஸ்லிம்களுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டு இஸ்லாமிய நாட்டுக்கு துரோகம் செய்து அதனை கவிழ்க்க முயன்றவர்கள் மெய்யான முஸ்லிம்களா? இல்லையா? என்பதைக் கண்டு கொள்வதற்குத் தான் அவர்கள் கலிமா சொல்ல வேண்டும் தொழ வேண்டும் ஜக்காத்துக் கொடுக்க வேண்டும் என்ற மூன்று நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது. இம்மூன்றையும் செய்யாதவர் மெய்யான முஸ்லிம் அல்லர் என்று சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, இஸ்லாமிய ராஜ்யத்தில் யாவருக்கும் மத சுதந்திரம் வழங்கப்பட்டது. சன்மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை; திருக்குர்ஆனில் இந்த சுதந்திரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.



## 9. இயன்றதைச் செய்வீர்

عن أبي هريرة عبد الرحمن بن صخر رضي الله تعالى عنه قال: سمعت رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يقول: مَا نَهَيْتُكُمْ عَنْهُ فَاجْتَنِبُوْهُ وَمَا اَمَرْتُكُمْ بِهٖ فَأْتُوْا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ فَإِنَّمَا اَهْلَكَ الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ كَثْرَةُ مَسَائِلِهِمْ وَ اِخْتِلَافُهُمْ عَلٰى اَنْبِيَائِهِمْ. رواه البخاري ومسلم

**"எதை விட்டு உங்களை நான் விலக்குகிறேனோ அதனை விட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். இன்னும் எதனை உங்களுக்கு நான் கட்டளையிடுகிறேனோ உங்களாலியன்ற வரையில் அதனை நீங்கள் செய்யுங்கள். உங்களுக்கு முன்னருள்ளவர்களை அவர்களின் மிகுதியான கேள்விகளும், தங்களுடைய நபிமார்களுக்கு மாறான அவர்களுடைய பிணக்கும் தான் அவர்களை நாசமாக்கின" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன்.**

அறிவிப்பவர்:- ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நூல்கள்:- புகாரி, முஸ்லிம்.

ஒரு காரியத்தைச் செய்யுமாறு ஏவினாலும், செய்ய வேண்டாம் என்று விலக்கினாலும், பொது மக்கள் அதனை உடனே ஏற்றுக் கொள்வதில்லை. ஏவப்பட்ட காரியம் செய்ய வேண்டாம் என்று விலக்கப்பட்ட காரியம் தங்கள் நோக்கத்திற்கு இணங்கியதாக இருந்தால் ஏற்றுக் கொள்வர். தங்கள்

நோக்கத்திற்கு இணங்காமல் மாறாக இருந்தால் விதம் விதமான குறுக்கு கேள்விகளைக் கேட்டு, அக்காரியத்தைச் செய்யாமல் இருக்க முயல்வர். தங்களால் செய்யப்படும் காரியத்தைக் கைவிட மனமில்லாவிடில் அதனை செய்ய அனுமதி பெறும் நோக்கத்துடன் பல விதமான குறுக்கு விசாரணைகளைப் புரிவர். இது மனித சுபாவத்தில் இயற்கையாக அமைந்திருக்கிறது.

இந்த சுபாவத்திற்கேற்ப ஒவ்வொரு நபிமார்களிடத்திலும் அந்தந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்பல விதமான கேள்விகளைக் கேட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்திலும் கண்ணியவான்களான ஸஹாபிகள் கேள்விகளைக் கேட்டார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஹதீஸில் கண்டவாறு அறிவுறுத்தினார்கள். ஏனெனில், நபிமார்கள் அல்லாஹ்வின் தூதர்கள் மார்க்க விஷயத்தில் தங்கள் யுக்திப்படி எதையும் கூற மாட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து இறைவன் தன்னுடைய திருமறையில் وما ينطق عن الهوى ان هو الا وحي يوحى அவர் தம் **சுயமாக (மார்க்க விஷயத்தில் எதுவும்) பேசமாட்டார். அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹியை அல்லாமல் அது (அவர் கூறுகிற மார்க்க விஷயம்) இருக்காது** (53:34) என்று கூறியுள்ளான்.

எனவே, சன்மார்க்க விஷயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுயமாக எதையும் கூறுவதற்கில்லை. அவர்கள் சன்மார்க்க விஷயமாக கூறுகிற யாவும் இறைவனால் அறிவிக்கப்பட்டவைகளே. அவர்களிடத்தில் பொது மக்கள் கேட்கும் வினாக்களுக்கு இறைவனிடமிருந்து தகவல் தெரிந்தே பதில் கூறப்படும். எனவே, சகலமும் மார்க்கச்



சட்டங்களாகி விடும். ஏராளமான சட்டங்களும் விளக்கங்களும் இறைவனிடமிருந்து வெளியானால் அவை யாவற்றையும் மனிதனால் பரிபூரணமாக நிறைவேற்ற இயலாது. அவ்வாறு நிறைவேற்றுவது மனிதனுக்கு மிகவும் சிரமமாகி விடும். இறைவனிடமிருந்து வருகிற ஒரு கட்டளைக்கு விளக்கம் கேட்காமல் அது நிறைவேற்றப்படுமானால் அதிலுள்ள குறைகளுக்கு இறைவனால் குற்றம் பிடிக்கப்பட மாட்டாது. அவரவரால் இயன்றவரை வரையில் அதனை செய்து விட முடியும் என்ற விவரத்தை இந்த ஹதீஸில் உங்களால் இயன்றவரையில் செய்யுங்கள் என்ற வார்த்தைகளின் மூலம் சுருக்கமாகக் கூறியுள்ளார்கள்.

அதிகமாக கேள்விகள் கேட்பதால் விளையும் கசப்பான பலனைக் குறித்து இந்த ஹதீஸின் இறுதியில் உங்களுக்கு முன்னருள்ளவர்களை அவர்களின் மிகுதியான கேள்விகளும், தங்களுடைய நபிமார்களுக்கு மாறான அவர்களுடைய பிணக்குகளும் அவர்களை நாசமாக்கி விட்டன என்ற வாக்கியத்தின் மூலம் விளக்கி இருக்கிறார்கள். முற்காலத்தில் வாழ்ந்த நபிமார்களிடத்தில் அக்கால மக்கள் கேட்ட கேள்விகளையும் அவற்றிற்கு அவர்கள் அளித்த பதில்களையும் நபிமார்கள் பற்றிய விரிவான சரித்திரங்களில் காணலாம். அல்லது விரிவான தப்ஸீர்களில் ஆங்காங்கு குறிப்பிடப் பட்டுள்ள விளக்கங்களில் காணலாம்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் பனூ இஸ்ராயீல்கள் கேட்ட வினாக்கள் பற்றிய விவரத்தை சுருக்கமாக இங்கு குறிப்பிடுவோம்.